தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

பிப்ரவரி 24, 1999 தொகுதி 64

எண் 3.

D
V2,11,31N99
N99.64.3.
221069

வளியீடு 11-1-2000 Issued 11-1-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, பிப்ரவரி 24, 1999 – தொகுதி 64– எண் 3

Wednesday the 24th February, 1999 – Volume 64 – No. 3

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

*விலை ரூ. 3.00*] [Price Rs. 3.00

24-2-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 301-338 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 2 முதல் 4 வரை) .. .. | 338-517 |
| **2. அறிவிப்பு—** | |
| சாத்தான்குளம் விபத்து குறித்து முன்னறிவிப்பு கொடுத்தோர் .. .. | 518 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) மலேசியா நாட்டில் தமிழர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளது .. .. | 518-533 |
| *திரு. நா. பெரியசாமி .. .. | 518-519 |
| திரு. ஐ. கணேசன் .. .. | 519-520 |
| திரு. சி. வேலாயுதன் .. .. | 520-521, 523 |
| திரு. சி. ஞானசேகரன் .. .. | 521-522 |
| திரு. ம. அப்துல் லத்தீப் .. .. | 522-523 |
| திரு. இரா. தாமரைக்கனி .. .. | 523-525 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் .. .. | 525-526 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. | 526-533 |
| திரு. கே. சுப்பராயன் .. .. | 533 |

பக்கங்கள்

3. **சிறப்புக் கவன ஈர்ப்பு**—(தொடர்ச்சி)

(ஆ) சேலம், நாமக்கல் மாவட்டங்களில் ஜவ்வரிசி மற்றும் சாயத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளது .. .. 533-554
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் .. .. 534-535
திரு. கே. சுப்பராயன் .. .. 536-537
திரு. இரா. தாமரைக்கனி.. .. 537-539
திரு. ஐ. கணேசன் .. .. 539-543, 551, 554
திரு. ம. அப்துல் லத்தீப் .. .. 540
*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி .. 540
திரு. பி. வெங்கடசாமி .. .. 543-545
திரு. ஆர்.ஆர். சேகரன் .. .. 545-546
மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி 547-549, 550-551,554
திரு. ஆர். சொக்கர் .. .. 549-550
திரு. சி. ஞானசேகரன் .. .. 552-553

(இ) ELNET நிறுவனத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாதது .. .. 557-560
திரு. பி. வெங்கடசாமி .. .. 558
மாண்புமிகு திரு அ இரகுமான்கான் .. .. 558-560

4. **அமைச்சரின் விளக்கம்**—

தேசிய நெடுஞ்சாலைகள் குறித்த துணை வினாவிற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் விளக்கம் .. .. 555

5. **தகவல் கோரல்**—

(அ) அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்புதல் .. .. 555-556
(ஆ) திருவாரூர் தேரோட்டம் .. .. 556-557
(இ) சென்னை நேரு ஸ்டேடியத்தை உபயோகித்ததற்கு வாடகை வசூல் .. .. 557

V211,3'N99
N99:64.3



பக்கங்கள்

3. **அறிக்கை அளித்தல்**—

பொதுக் கணக்குக் குழு .. .. 560

7. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—

(அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, *1999* .. .. 560-562
மாண்புமிகு திரு. ஆலடி அருணா .. 561, 562

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, *1999* .. .. 562-564
மாண்புமிகு திரு. கோ.சி. மணி .. .. 562-563, 564

(இ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, *1999* .. .. 564-570
* மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் .. .. 564-570
திரு. ஜி. பழனிசாமி .. .. 565, 567
திரு. சி. ஞானசேகரன் .. .. 565-566, 568

(ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, *1999* .. .. 570-572
* மாண்புமிகு திரு. கா. நா. நேரு .. .. 571, 572

8. **அரசினர் தீர்மானம்**—

பேரவை ஒத்திவைக்கப்பெற்று பின்னர் ஒரு நாள் கூடுதல் .. .. 572-573

9. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 573-574

221069.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**மாசி 12, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999 பிப்ரவரி 24, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்குத் தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணைபுரியும்.

### 1. வினாக்கள்-விடைகள்

**(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 81, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**81—**

**கோளரங்கு கட்டுதல்**

***14204—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் கோளரங்கு கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

[1999 பிப்ரவரி 24

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவையில் கோளரங்கம் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்பு, கோளரங்கம் அமைக்கும் பணி உடனடியாகத் தொடங்கப்படும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது தமிழாக அறிவியல் தமிழை வளர்க்கவேண்டும் என்று தமிழக அரசு விரும்புகிறது. கோவையிலே மூன்று பல்கலைக்கழகங்கள், இரண்டு மருத்துவக் கல்லூரிகள், ஏராளமான பொறியியல் கல்லூரிகள், கலை அறிவியல் கல்லூரிகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே பயிலுகின்ற மாணவர்களுக்குப் பயனளிக்கின்ற வகையிலே பிலானி, கல்கத்தா, மும்பை, சென்னை போன்ற இடங்களில் இருப்பதுபோல ஒரு கோளரங்கை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாக இதே சட்டமன்றத்திலே வற்புறுத்தி வந்திருக்கிறேன். கோவை மருத்துவக் கல்லூரிக்கு அருகிலே அரசுக்குச் சொந்தமான நிலமிருக்கிறது. அந்த நிலத்திலே இந்தக் கோளரங்கை அமைத்துக் கொடுப்பதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோளரங்கு அமைப்பதற்காக மாவட்ட ஆட்சியர் விலாங்குறிச்சி கிராமத்தில் 6 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்திற்கு நிலவுரிமை மாற்றம் செய்வதற்காக நில நிர்வாக ஆணையருக்குப் பரிந்துரை செய்து அனுப்பி வைத்துள்ளார்கள். அதனை ஒட்டிய நிலத்திலேயும், அதன் தொடர்பான நிலத்திலேயும் ஒரு வழக்கு இருக்கிற காரணத்தால் அந்த நிலத்தை அரசுக்கு வழங்குவது குறித்து நில நிர்வாக ஆணையம் தாமதித்து வருகிறது. மேலும் நில நிர்வாக ஆணையத்திடம் இதுபற்றி விளக்கம் எடுத்துச் சொல்லப்பட்டு கேட்கப்பட்டு வருகிறது. விரைவாக ஏற்றுக்கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி ஒருவேளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் விரைவாக வேறு தகுந்த இடம் தேடி கோளரங்கம் கட்டுகிற பணி தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.



1999 பிப்ரவரி 24]

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோளரங்கம் கட்டுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதா? எவ்வளவு தொகையில் கட்டப்படும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் கட்டடத்திற்காக செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆனால் தொடக்கப் பணிகளுக்காக 10 இலட்ச ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மௌடீகத்தை மட்டுமே வளர்த்து வருகிற இன்றைய நிலையில் மக்களின் அறிவை விழிப்பூட்ட வேண்டிய, கூர்த் தீட்ட வேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் இத்தகைய கோளரங்கங்கள் எல்லா மாவட்டங்களிலேயும் அமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கொள்கை முடிவை எடுத்து எல்லா மாவட்டங்களிலேயும் இத்தகைய கோளரங்கத்தை உருவாக்குவதற்கான கொள்கை முடிவை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் ஏதோ 'மட்டுமே' என்று சொன்னார்கள். அது மட்டுமே நடைபெறுவதாகக் கருதமுடியாது. இருந்தாலும்கூட, இந்தக் கோளரங்கம் கட்டுகிற முயற்சி என்பது இதுவரையிலே ஜப்பான் நாட்டினுடைய உதவியோடு, அவர்கள் தந்த கருவிகள் விலை பெருந்தொகையாகிற காரணத்தால் நன்கொடையாகப் பெற்று சென்னையிலே கட்டப்பட்டிருக்கிறது. இப்போது திருச்சியிலே கட்டப்பட்டிருக்கிறது. மறுபடியும் தொடர்ந்து பிற மாவட்டங்களில் இந்த முயற்சி மேற்கொள்வதாக இருந்தாலும் பெரிய முதலீடு தேவைப்படுகிற காரணத்தால் நிதி வசதிக்கேற்ப அது கருதப்படும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 82, டாக்டர் அ. மணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1999 பிப்ரவரி 24

82—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

***9973—டாக்டர் அ. மணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை ஒன்றியம், கிளியூர் மற்றும் ஆசனூர் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,21,388-ன் அடிப்படையில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்தான் தற்போது உள்ளது. தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையின் அடிப்படையில் 1,414 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இவை ஒட்டுமொத்தமாகப் போதுமானது என்றாலும் ஊராட்சி ஒன்றியங்களின் மக்கள் தொகை அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் சீராக அமைக்கப்படவில்லை. சில ஊராட்சி ஒன்றியங்களில் அதிகமாகவும், சில ஊராட்சி ஒன்றியங்களில் குறைவாகவும் உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. கிளியூர் மற்றும் ஆசனூர் கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்து அரசு கொள்கை முடிவு எடுத்தபின் பரிசீலிக்கப்படும்.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதி விழுப்புரம் மாவட்டத்திலேயே மிகப் பெரிய தொகுதி. என்னுடைய தொகுதி மூன்று ஒன்றியங்களை உள்ளடக்கியது. அதிலே உளுந்தூர்பேட்டை ஒன்றியம் மிகப்பெரிய ஒன்றியமாகும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இந்தப் பகுதியில் அமைக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது ஒரேயொரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுமே இயங்கி



1999 பிப்ரவரி 24]

வருகிறது. கிளியூர், ஆசனூர் மற்றும் அதையூர் ஆகிய மூன்று இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை செலுத்தப்பட்டுவிட்டதோடு மட்டுமல்லாமல் இடவசதியையும் அந்தந்த ஊர் பொதுமக்கள் அளித்திருக்கிறார்கள். ஆனால், இதுநாள் வரையிலே அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கு எந்தவிதமான ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை. சென்ற ஆண்டுகூட நான் இதைப்பற்றி இந்தச் சட்டப்பேரவையிலே பேசியிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். என்னுடைய பகுதி மிகப்பெரிய பகுதியாக இருந்தும் ஒரேயொரு ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும் இயங்கி வருவதால் உடனடியாக இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து மற்ற மூன்று இடங்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கடந்த ஆண்டு இங்கே தெரிவித்ததையொட்டித்தான் உளுந்தூர்பேட்டை ஒன்றியத்திலே இருக்கக்கூடிய குறைகளைப் போக்குவதற்காக அதிகாரிகள் அளவிலே கலந்து பேசி, அடுத்த நிதியாண்டில், அதாவது 1999-2000 ஆவது ஆண்டில் இரண்டு இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய குறை நிச்சயமாக அடுத்த நிதி ஆண்டில் போக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 83, திரு. கோ. நயினா முகமது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

83—

## கடையநல்லூர் துணை மின் நிலையம்

***16780—திரு. கோ. நயினா முகமது:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 24

(அ) கடையநல்லூர் துணை மின் நிலையத்தை 110 கிலோ வோல்ட் துணை மின்நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் துணை மின்நிலையம் 66 கிலோ வோல்ட் துணை மின்நிலையமாக இயங்கி வருகிறது. அதிகமான அளவில் விவசாயிகளின் மோட்டார்களுக்கு மின் இணைப்பைக் கொடுப்பதாலும், வீடுகள் மற்றும் தெரு விளக்குகளுக்கு அதிகமான அளவிற்கு மின் இணைப்புகளைக் கொடுப்பதாலும் மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது. இரவில் தெரு விளக்குகளும், வீட்டு மின்விளக்குகளும் மற்றும் குழல் மின்விளக்குகளும் மிகவும் குறைந்த வெளிச்சத்திலேதான் எரிகின்றன. கடையநல்லூரைச் சுற்றியுள்ள குமந்தாபுரம், சொக்கம்பட்டி, சிங்கிலிப்பட்டி, முத்துசாமியாபுரம், இடைகால், புன்னியாபுரம் மற்றும் நைனாநகரம் ஆகிய கிராமங்களில், மின் அழுத்தக் குறைவு காரணமாக பல்புகள் கூட குறைந்த வெளிச்சத்திலேதான் எரிகின்றன. இதனால் மின் மோட்டார்களுக்கான Coil கெட்டுப் போய்விடுகிறது. எனவே, இந்தக் குறையைப் போக்க கடையநல்லூர் 66 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. மின் நிலையமாக்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தமாக இருக்கக்கூடிய குறைந்த மின் அழுத்தக் குறையைப் போக்குவதற்காக மின்வாரியமானது, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு அதனைப் பரிசீலித்து, ஏறக்குறைய 100 துணை மின்நிலையங்களை இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே கட்டி முடித்துவிட்டது. இதற்கு முன்பு ஆண்டு ஒன்றிற்கு 40 துணை மின்நிலையங்கள்தான் கட்டப்பட்டு வந்தன. இப்போது அதனை 60 ஆக உயர்த்தி இருக்கிறோம். 2001 ஆம் ஆண்டிற்குள்ளாக தமிழ்நாட்டிலே எல்லா துணை மின் நிலையங்களையும் கட்டி முடிக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கின்றோம். அப்படி, அந்தத் திட்டம் நிறைவேறுகின்ற நேரத்தில் எங்கெல்லாம் 66/11 கிலோ வோல்ட் துணை மின்நிலையம் இருக்கிறதோ அவற்றை எல்லாம் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களாக மாற்றுவதற்கான ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. அந்தச் செயற்குறிப்பு பரிசீலிக்கப்படும்போது கடையநல்லூரும் நிச்சயமாக பரிசீலிக்கப்படும்.



1999 பிப்ரவரி 24]

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்கு கர்நாடக அரசு மின் பாக்கிக் கட்டணம் செலுத்தாத காரணத்தினால், மின் உற்பத்தியை நிறுத்தப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அதனால், தமிழகத்திற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 250 கோடி ரூபாய் கர்நாடக அரசு நெய்வேலி அனல் மின் நிலையத்திற்குக் கட்ட வேண்டிய பணத்தை, கட்டாத காரணத்தினாலே அந்த நிர்வாகம் 15 ஆம் தேதி முதற்கொண்டு, மின்சார உற்பத்தியை நிறுத்த வேண்டுமென்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறது. ஆனால், தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் ஒழுங்காக மின் கட்டணம் செலுத்திக் கொண்டிருக்கின்ற எங்களைப் போன்ற மாநிலங்கள் அதனாலே பாதிக்கப்படக்கூடாது என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்தி, தொடர்ந்து நீங்கள் தமிழ்நாட்டிற்கும் மற்றும் எந்தெந்த மாநிலங்கள் பணத்தை ஒழுங்காகச் செலுத்துகிறதோ அவற்றிற்கும் மின்சாரம் வழங்க வேண்டும் என்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நெய்வேலி அனல் மின் நிலைய நிர்வாகம் நம்முடைய கோரிக்கையை பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இந்தப் பிரச்சினை வருகின்ற காரணத்தினால், இதுகுறித்து ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக்

கொடுத்திருந்தேன். அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. கர்நாடக அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி, விரைந்து அந்தத் தொகையைச் செலுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே ஒழுங்காக பணம் கட்டுகின்ற ஒரேயொரு மாநிலம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நம்மைப் பொறுத்தவரையில் நாம் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்றுதான் நாம் சொல்ல முடியுமே தவிர, கர்நாடக மாநிலத்தை இந்த அரசு வற்புறுத்த முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச.க. வெங்கடேசன்.

**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூருக்கு அருகில் நல்லூரில் 110 கிலோ வோல்ட் துணை மின்நிலையம் அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அங்கு விரைந்து துணை மின்நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதியாண்டில் அது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 84, திரு ஜி.எல். வெங்கடாசலம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**84—**

### குடிநீர் வழங்கல் திட்டம்

***7497—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்குவதற்குத் தனியாகத் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்குவதற்காக சின்னாற்றில் 3 சிறிய அணைகளை நீராதாரமாக அமைத்து, நீர் எடுத்து, சுத்திகரித்து, தினசரி 26 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்குவதற்காக 8.95 கோடி செலவில் தயாரிக்கப்பட்ட திட்டம், பின் ரூ. 12.85 கோடிக்கு திருத்தியமைக்கப்பட்டு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில்நுட்பக் குழுவில் ஆராயப்பட்டு, இத் திட்டத்தின் மொத்தச் செலவும் தனி நபர் திட்டச் செலவும் மிக அதிகமாக இருந்ததால், பாலக்கோடு பேரூராட்சிக்கு நீண்டகால நல்ல குடிநீர் வசதி அளிக்கும்பொருட்டு, 1008 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளவிருக்கும் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் பகுதி 1-ல் சேர்க்கப்பட்டுள்ளது. இருந்தாலும், பாலக்கோடு பேரூராட்சியின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஆத்துக்கோட்டை கிராமம் அருகில் சின்னாற்றில் ஒரு சிறிய அணையை நீராதாரமாக அமைத்து 2001 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கக்கூடிய மக்கள் தொகையை கருத்திற்கொண்டு, நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க 6.86 கோடியில் திட்டம் தயாரிக்கப்பட்டு வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. வருகின்ற நிதியாண்டில் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 2002 ஆம் ஆண்டிற்குப் பின் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பொது மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும் அதேநேரத்தில், பாலக்கோடு பேரூராட்சி வளர்ந்து வரும் நகரம் ஆகும். சுமார் 5,200 குடியிருப்புக்களையும், அதேபோல் சுமார் 22,000 மக்கள் தொகையுமுள்ள ஒரு நகரமாகும். தற்போது தருமபுரி நகராட்சியிலிருந்து தினசரி 4 இலட்சம் லிட்டர் தண்ணீர் பெறப்பட்டு அங்கிருந்து சுழல் முறையில் ஒருநாள் விட்டு ஒருநாள் குடியிருப்புகளுக்குத் தண்ணீர் வழங்கப்படுகின்றது. சுமார் 959 குடியிருப்புகளுக்குத்தான் நீர் வழங்கப்படுகிறது. எனவே, பொதுமக்களின் அவசரத் தேவையை கருத்திற்கொண்டு, உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு

[1999 பிப்ரவரி 24

உரிய வாய்ப்பை ஆராய்ந்து அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து உடனடியாக மக்களுக்குக் குடிநீர் வழங்க ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் புளோரைடு பாதிக்கப்பட்ட குடிநீரும், நிலத்தடி நீர் இல்லாத காரணத்தினாலும், அந்த மாவட்டத்தில் பெரிதும் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அதையொட்டித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை விரைந்து அமல்படுத்த வேண்டும் என்றும், இன்னும் சில பகுதிகளை அத்திட்டத்தோடு இணைத்துச் செய்ய வேண்டுமென்றும் அறிவுரை வழங்கியிருக்கிற காரணத்தினால், நான் ஒருமுறை வந்து பார்த்தபோதும் தாங்கள் தெரிவித்திருப்பதைத் குறிப்பிட்டிருக்கிறேன். இது இடைக்காலத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நிரந்தரப் பணிக்காகத்தான் நாங்கள் ஒகேனக்கல் இரண்டாவது திட்டத்தை அளிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 85, திரு. டி.சி. விஜயன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**85—**

**வெள்ளத் தடுப்புக் கால்வாய் அமைத்தல்**

***14413—திரு. டி.சி. விஜயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் நகராட்சி, தணிகாசலம் நகர் வெள்ளத் தடுப்புக் கால்வாய்த் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மானியத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1999 பிப்ரவரி 24]

(அ) ஆம்.

(ஆ) மாதவரம் நகராட்சிக்கு உட்பட்ட தணிகாசலம் நகர் மற்றும் அதையொட்டிய சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதைக் கட்டுப்படுத்த ரூ. 20.891 கோடி செலவில் வெள்ளத் தடுப்புத் திட்டத்தை செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. டி.சி. விஜயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியை ஒதுக்கியதற்கு தமிழக முதல்வர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திரு. த. நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**86—**

**மண்வளப் பாதுகாப்பு**

***2577—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் சரி செய்யப்பட்ட நிலங்களுக்கு வரி விதிக்கப்பட்டு, அதைக் கட்டாத விவசாயிகள்மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செஞ்சி வட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சரி செய்யப்பட்ட நிலங்களுக்கு வரி விதிக்கப்பட்டு அதைக் கட்டாத விவசாயிகள் எவரிடமும் ஜப்தி நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1999 பிப்ரவரி 24

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்வளப் பாதுகாப்புத் துறையின் மூலம் வரப்புகள் கட்டும் பணியைத் தொடங்கும்போது அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளிடம் இலவசமாகச் செய்வதாகச் சொல்லி, வரப்புகள் மடித்தார்கள். வரப்புகள் மடித்த சில ஆண்டுகளுக்குப் பின்னர், இப்போது அதற்கு வரி விதிக்கப்படுகின்றது. வரி விதிக்கும்பொழுது V.A.O.-க்களிடம் விவசாயிகள் செல்லும்போது, அவர்களிடம் கண்டிப்பாக இந்தத் தொகையைக் கட்டினால்தான் உங்களுக்கு Certificate கொடுக்கப்படும் என்று சொல்கின்றார்கள். இடையில் ஜப்தி நடவடிக்கைகள்கூட எடுப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். இதனால் இப்போது விவசாயிகள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளுடைய நன்மையைக் கருதி, இந்தத் தொகையை இரத்து செய்ய முன்வருவார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் ஈரப் பதத்திற்காக இந்த வரப்பு அமைக்கப்படுகிறது. அப்படி அமைக்கப்படுகிறபோது ஒவ்வொரு விவசாயியிடத்தும் வரப்பு அமைத்த பிறகு, இரண்டு ஆண்டுகள் கழித்து, 8 ஆண்டுகளில் அந்தப் பணத்தை நீங்கள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று அவர்களிடத்திலே சொல்லி, அவர்களிடமிருந்து எழுதி வாங்கிக் கொண்டுதான், ஒப்புதல் பெற்ற பின்னர்தான், இந்த வரப்பு அமைக்கின்ற பணி நடைபெறுகிறது. அதுதான் 1980-81, 1995-96 வரை—செஞ்சிப் பகுதியிலேகூட சுமார் ரூ. 34 லட்சம் வசூலிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல செஞ்சியை உள்ளடக்கிய விழுப்புரம் மாவட்டத்தில் 1-7-1997 வரை ரூ. 1,24,84,225-க்கான கடன் கேட்புகள் நிலுவையில் உள்ளன. அதிலே இப்போது வசூல் செய்யப்பட்டது போக இன்னும் ரூ. 90,02,081 வசூல் செய்யப்பட வேண்டியிருக்கிறது. இது வரி அல்ல. அவர்களுக்காக செய்து கொடுத்த அந்தப் பணிக்கான தொகை வசூலிக்கப்பட்டதே தவிர, வரி அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 87, டாக்டர் எம். மோசஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



1999 பிப்ரவரி 24]

**87—**

**வேளாண்மைப் பொறியியல் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குதல்**

***7496—டாக்டர் எம். மோசஸ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பல மாதங்களாக மாத ஊதியம் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு உடனடியாக மாத ஊதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் (Agro Engineering Service) துறையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் எல்லா மாதங்களுக்கும் வழங்கப்பட்டுவிட்டது. ஊதியம் வழங்கப்படாமல் நிலுவையில் இல்லை.

**டாக்டர் எம். மோசஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊதியம் வழங்கப்பட்டதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நான் வினா எழுப்புகிற சமயத்திலே 8, 10 மாதங்களாக ஊதியம் வழங்கப்படாமல் இருந்தது. அவர்கள் எல்லாம் என்னிடம் வந்து எங்களை பொதுப்பணித் துறையோடு இணைத்து விடுங்கள், அப்பொழுதாவது எங்களுக்குச் சம்பளம் ஒழுங்காகக் கிடைக்கும் என்று மிகவும் வேதனையோடு சொன்னார்கள். நீங்கள் அவர்களுக்கு மாதாமாதம் ஊதியத்தை ஒழுங்காகக் கொடுத்திருப்பது உண்மையாக இருக்குமேயானால், அதற்காக நான் மீண்டும் நன்றியைச் செலுத்துகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Agro Engineering Service கன்னியாகுமரி

மாவட்டத்திலே இருப்பது இரண்டுதான். இந்த இரண்டு சங்கமும் இலாபகரமாக நடந்துகொண்டிருக்கக் கூடிய சங்கங்கள். அங்கு இதுவரை சம்பளம் தரவில்லை என்ற புகார் எப்போதும் அரசுக்கு வரவில்லை. அதனால்தான் சொன்னேன், அங்கு தொடர்ந்து சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது என்று. சம்பளம் வழங்கப்படாமல் உள்ள நிலைமை அங்கு இல்லை என்று சொன்னேன். தமிழ்நாட்டிலே மொத்தம் 210 சங்கங்கள் இருக்கின்றன. இதிலே 86 சங்கங்கள் இலாபகரமாக நடைபெற்று வருகின்றன. 124 சங்கங்கள்தான் நட்டத்திலே செயல்படுகின்றன. இப்போது பொதுமக்களுடைய பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்றுக்கொண்டபிறகு அது மேலும் லாபகரமாக நடைபெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 88, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**88—**

### ஆற்று நீரைக் கால்வாயில் இணைக்கும் திட்டம்

***3742—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஆற்றிலிருந்து வெட்டாறு வரையுள்ள ஆறுகளின் கடைமடையில் தேங்கும் தண்ணீரை நாகப்பட்டினம்—வேதாரண்யம் கால்வாயில் இணைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நாகப்பட்டினம்—வேதாரண்யம் கால்வாயை ஆழப்படுத்தியும், அகலப்படுத்தியும் அதில் நிரம்பும் நீரை நிறுத்தி தலைஞாயிறு, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் ஆகிய ஊர்களுக்கு குடிநீர் வழங்கவும் அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, திரு. பி.என். சுப்பிரமணி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**89—**

### புதிய அணை கட்டுதல்

***8403—திரு. பி.என். சுப்பிரமணி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதியில் ரெட்டிதிம்பை தேவனாசமலைக்கு இடையில் அணை கட்டும் கருத்துரு அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இத்திட்டம் தல அலுவலர்களின் மட்டத்தில் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 90, திரு. அ.லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**90—**

### மாற்று வழிப்பாதை அமைத்தல்

***6757—திரு. அ.லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் (தேசிய நெடுஞ்சாலை-7) திருநெல்வேலி, தாழையூத்திலிருந்து பிரிந்து டக்கரம்மான்புரத்தில் சேரும் வகையில் ஒரு மாற்று வழிப்பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடை அளிப்பதற்கு முன்வருகிறேன்.

[1999 பிப்ரவரி 24

ஆம். திருநெல்வேலியில் தாழையூத்திலிருந்து பிரிந்து ஒரு தனி புறவழிச்சாலை அமைப்பதற்கு அரசிடம் உத்தேசம் உள்ளது. அதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி ஏறத்தாழ முடிவடைந்திருக்கிறது. இன்னும் 1.59.5 ஹெக்டேர் நிலம் மட்டும்தான் கையகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. இது தேசிய நெடுஞ்சாலை. அப்பொழுது மத்திய தரைவழித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு வெங்கட்ராமன் அவர்களிடம் இதுபற்றி நான் வலியுறுத்தியபோது அவர்கள் நிதியில்லை; (ஆனால் B.O.T. Scheme-Build Operate and Transfer Scheme) என்ற அந்த அடிப்படையில் செய்து Toll வசூலித்துக்கொள்ளலாம் என்று முன்னுரிமை கொடுத்து எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி அதையாவது பெற்றுத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மைதான். இதற்கு ஏறத்தாழ 40 கோடியிலிருந்து 50 கோடி ரூபாய் வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டம் உட்பட வேறு சில திட்டங்களையும் Build Operate and Transfer (B.O.T.) திட்டத்திலே சேர்க்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு நாங்கள் பரிந்துரை செய்திருக்கிறோம். மத்திய அரசும் அதை ஏற்றுச் செயல்படுத்துவதாகத் தெரிவித்திருக்கிறது. எனவே பெரும்பாலும் இது B.O.T. திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையில், நீண்ட நாட்களாக இருந்த கோரிக்கையை, ஒரு புறவழிச்சாலை அமைக்கின்ற கோரிக்கையை நம்முடைய அமைச்சர் அவர்கள் நேரிலே பார்வையிட்டு முடித்துத் தந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். நன்றி. ஆனால் அந்தபுறவழிச் சாலையில் கூட State Highways—இப்போது பல கடைகள் கட்டப்பட்டுவிட்ட காரணத்தால், ஊருக்கு



1999 பிப்ரவரி 24]

உள்ளே செல்கின்ற காரணத்தால்—அந்த By-Pass Road மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. எனவே, வலியுறுத்தி முன்னுரிமை தந்து இதைப் பெற்றுத்தர அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயம் முன்னுரிமை அளிக்கப்படும். B.O.T. திட்டத்திலே இதை எடுத்துக்கொள்வதற்கு எல்லாவிதமான பூர்வாங்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மத்திய அரசினுடைய அனுமதிதான் நமக்குத் தேவைப்படுகிறது. அந்த அனுமதி கிடைத்தவுடன் இந்தப் பணி தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து திருமங்கலம், கல்லுப்பட்டி, இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர் வழியாக செங்கோட்டைக்கு தமிழ்நாட்டையும், கேரளாவையும் இணைக்கின்ற தமிழ்நாடு நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்கு மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பியுள்ளது. அந்தப் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஏறத்தாழ 3,000 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தோம். அதிலே 1200 கிலோ மீட்டர் சாலையை எடுத்துக்கொள்வதாக மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. அதிலே, இந்தச் சாலையையும் நாங்கள் பரிந்துரை செய்திருந்தோம்; ஆனாலும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இருப்பினும் எதிர்காலத்தில் அதை எடுத்துக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

[1999 பிப்ரவரி 24

91—

## புதிய பாலம் அமைத்தல்

***11398—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பெரம்பலூர்-மானாமதுரை சாலையில் குடமுருட்டி பாலம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பாலம் எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குடமுருட்டி பாலத்தை புதிதாக அமைக்க ஹட்கோ கடனுதவி மூலம் 50 பாலங்கள் அமைக்கும் திட்டத்தில் இப்பணியும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணி விரைவில் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதே குடமுருட்டி ஆற்றில் வலப்பக்குடி மணல் திடலில் புதிய பாலம் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** தலைவர் அவர்களே, அதுகுறித்து பரிசீலித்து நிதிநிலைக்கு ஏற்றவாறு அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

92—

## கோயில் நிலத்தில் பள்ளிக்குக் கட்டடம்

***19072—திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 24]

தாராபுரம் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட கோயில் நிலத்தை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயலாது.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் நகரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய இடம் இல்லாத காரணத்தினாலும், ஆண்கள் பள்ளியில் கழிப்பறை வசதிகூட இல்லாத நிலையிலும் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். ரூ. 100, ரூ. 200 என்று மிகக் குறைந்த தொகையில் பல ஏக்கர் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு, கோயில் நிலங்களின் மூலம் பலர் கொள்ளையடித்து வருகின்றனர். இந்நிலை தமிழகம் முழுவதும் உள்ளது. கல்விக் கண்ணைத் திறந்து, பெண்களை முன்னேற்றப் பாதையில் 21 ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்லும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்ட கோயில் நிலத்தைக் கொடுப்பதற்கு மறு பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியினுடைய பெற்றோர்-ஆசிரியர் கழகத் தலைவர் இதனை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்குத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார். தற்போதைய சட்ட நடைமுறைகளின்படி 99 ஆண்டுகள் குத்தகைக்கு எந்த இடத்தையும் வழங்குவதில்லை. 5 ஆண்டுகள் குத்தகைக்கு மட்டுமே தரப்படுகிறது. ஆனால் அதேநேரத்தில் அரசினருடைய ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள் மற்றும் அது தொடர்பான வேறு நிறுவனங்களுக்கு முழுமையாக கிரையத்திற்கே அதனைத் தருவதாகத்தான் இப்போது அரசு முடிவெடுத்து இருக்கிறது. அந்த அடிப்படையில் பெற்றோர்-ஆசிரியர் கழகம் இதனை முற்றிலும் விலைக்கு எடுத்துக்கொள்வதற்கு விண்ணப்பிக்குமானால் அதுகுறித்து மறு ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, செல்வி க. ராணி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

[1999 பிப்ரவரி 24

93—

### பால் குளிரூட்டும் நிலையத்தை நவீனப்படுத்துதல்

***12388—செல்வி க. ராணி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தலைவாசல் தொகுதி, ஆயர்பாடியிலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தை விரிவுபடுத்தி, நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை தங்கள் அனுமதியோடு படிக்கிறேன். தலைவாசல் தொகுதி, ஆயர்பாடியில் பால் குளிரூட்டும் நிலையம் இல்லை. ஆகவே, விரிவுபடுத்துவது, நவீனப்படுத்துவது சம்பந்தமான கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

94—

### விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆயுள் காப்பீடு

***10734—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த தொழிலாளர் நலத் துறையில் எந்தவிதமான திட்டமும் தற்போது நடைமுறையில் இல்லை.

(ஆ) எழாது.



1999 பிப்ரவரி 24]

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கக்கூடிய வேளாண்மைத் துறையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு, தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றனவோ அந்தச் சலுகைகளை வழங்கக் கூடிய அளவில், வேளாண்மைத் துறையை தொழில் துறையாக ஏற்கக் கூடிய அளவில் அதனை, அரசு ஏற்று—நூற்றுக்கு எழுபது விழுக்காடு விவசாயத் துறையிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களின் முன்னேற்றத்தில் அக்கறைகொண்டு—வரக்கூடிய காலங்களிலாவது விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின்மூலம் முழுவதுமாக பாதுகாப்புக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? அதை மறு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளினுடைய நலனிலே அக்கறையுள்ள காரணத்தினாலே நம்முடைய முதல்வர் அவர்கள் Kolappan Committee-யை அமைத்து அதனுடைய அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்காகக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பது சம்பந்தமாகவும் நலத் திட்டங்களை அமல்படுத்துவது சம்பந்தமாகவும் அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஆய்வு செய்து, விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10-00

அதைப்போலவே இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பல நலத் திட்டங்களும் அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. கால்நடைக் காப்பீட்டுத் திட்டம், பயிர் காப்பீட்டுத் திட்டம் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், விவசாயிகள் ஆயுள் காப்பீட்டுத் திட்டம் பற்றி சொல்லப்படவில்லை. இருந்தாலும், இதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே பேசி, விவாதித்து சாத்தியக்கூறுகள் உண்டா என்று ஆராயலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 95, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

[1999 பிப்ரவரி 24

95—

**அரசினர் தொழிற் பயிற்சி மையம் அமைத்தல்**

***19379—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதியில் அரசினர் தொழிற்பயிற்சி மையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் அரசு மூலமாக தொழிற் பயிற்சி நிலையமோ அல்லது தொழில்நுட்பப் பயிலகமோ அல்லது கலைக் கல்லூரியோ ஏதும் இல்லை என்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து அந்தத் தொகுதியில் அரசு மூலமாக ஒரு தொழிற் பயிற்சி நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களில் I.T.I. இல்லையோ அங்கே I.T.I. தொடங்குவதற்காக அரசு ஆணையிட்டு விளம்பரங்கள் மூலமாகக் கேட்டது. அதன் அடிப்படையிலே பாபநாசம் ஒன்றியத்திலே ஏற்கெனவே St. Paul I.T.I., Beer I.T.I., Hindu I.T.I. என்று மூன்று I.T.I.களை அமைப்பதற்கு மனுக்களைக் கொடுத்தார்கள். அவற்றைப் பரிசீலனை செய்தபோது infrastructure, அடிப்படைத் தேவைகள், norms-படி, விதிகளின்படி அங்கே இல்லாத காரணத்தினாலே அந்த I.T.I. அமைக்க அங்கீகாரம் அளிக்கப்படவில்லை. ஆகவே, இப்போது அங்கே I.T.I. இல்லை. இருந்தாலும்கூட, இப்போதும்கூட, பத்திரிகையிலே விளம்பரங்கள் செய்து, I.T.I. இல்லை என்று கருதி மீண்டும் தொடங்குவதற்காகக் கேட்டோம். துரதிருஷ்டவசமாக, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் உட்பட, அந்தத் தொகுதியிலே யாரும் I.T.I. தொடங்க Application போடவில்லை.



1999 பிப்ரவரி 24]

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் யாரும் அனுமதி கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், நான் கேட்பது அரசு மூலமாக தொழிற் பயிற்சி மையம் அமைக்க வேண்டும் என்பது. அரசு மூலமாக நடத்தப்படுகின்ற எந்தவொரு தொழிற் பயிற்சி மையமும் அந்தத் தொகுதியில் இல்லை. எனவே, பரிசீலனை செய்து அரசு மூலமாக அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு குறித்து ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 96, திரு. வெ.அ. ஆண்டமுத்து. மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

96—

**வனக்காடுகளில் மிருகங்களுக்குக் குடிநீர் வசதி**

***7074—திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட வனக்காடுகளில் யானை போன்ற காட்டு மிருகங்களுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்காததால், யானைகள் தண்ணீர் குடிப்பதற்கு வெளியே வரும்போது அவற்றை மக்கள் அடித்துக் கொன்றுவிட்டு யானைத் தந்தத்தை எடுத்துச் செல்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், யானைகளுக்கு காட்டிற்குள்ளேயே கண்மாய்கள் கட்டித் தரப்படுமா?

(இ) இதுவரை எத்தனை யானைத் தந்தங்கள் கைப்பற்றப்பட்டு, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) யானை மற்றும் வன உயிரினங்களுக்குப் போதுமான தண்ணீர் குடிப்பதற்கு பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட

வனப் பகுதிகளில் 8 தண்ணீர் தொட்டிகள் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. வனப் பகுதிகளில் உள்ள வன உயிரினங்களுக்குத் தேவையான தண்ணீர் வனப் பகுதிகளிலேயே கிடைப்பதால் தண்ணீர் குடிப்பதற்காக வனப் பகுதிகளை விட்டு யானைகள் வெளியே வருவதில்லை. எனவே, பொது மக்கள் யானைகளை அடித்துக் கொன்றுவிட்டு யானைத் தந்தங்களை எடுத்துச் செல்ல வாய்ப்பு எதுமில்லை.

(ஆ) யானைகளுக்குத் தேவையான தண்ணீர்த் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், யானைகள் காப்புத் திட்டத்தின்கீழ் கசிவு நீர்த் தடுப்பு அணை கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தேவைப்படின் தண்ணீர்த் தொட்டிகள் கட்டப்படும்.

(இ) இதுகாறும் பவானிசாகர் பகுதியில் தந்தங்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.

**திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் வனக் காடுகளிலே ஏராளமான யானைகள் இருக்கின்றன. அதேபோல அங்கு மான்களும் ஏராளமாக இருக்கின்றன. வெயில் காலங்களிலே தண்ணீர் இல்லாமல் இருக்கும்போது, தண்ணீர் குடிப்பதற்காக பக்கத்திலேயுள்ள காடுகளுக்கு வரும்போது அவற்றை விரட்டிச் சென்று சிலர் அடித்துக் கொல்கிறார்கள். அதுபோக சில சமூகவிரோதிகளால் சென்ற ஆண்டு மட்டும் சுமார் 20 யானைகள் கொல்லப்பட்டு அங்கு செத்துக்கிடப்பதாக அந்த ஊர் மக்கள் வந்து என்னிடம் புகார் கூறினார்கள். மேலும், பவானிசாகரிலேயே பேருந்தில் வரும்போது ஒரு பயணி யானைத் தந்தத்தை விட்டுச்சென்று, அதைக் காவலர்கள் கைப்பற்றியிருப்பதாகத் தெரிகிறது. இவை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா, இல்லையா? மேலும், காடுகளிலே யானைகளைக் கொன்று தந்தங்களை களவாடுவதற்கு காரணமானவர்கள்மீது என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கப்போகிறீர்கள்? இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? மேலும், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் எவ்வளவு யானைகள் அந்தக் காடுகளில் இருந்தன? இப்போது யானைகள் எந்த அளவிலே இருக்கின்றன என்பதையெல்லாம் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்





சொன்னதுபோல ஏராளமான யானைகள் கொல்லப்படவில்லை. கடந்த 3 ஆண்டுகளினுடைய கணக்குகளை இங்கே சொல்ல விரும்புகிறேன். 1996ஆம் ஆண்டு கோவைக் கோட்டத்திலே ஒன்றும், சத்தியமங்கலம் கோட்டத்திலே இரண்டும், முதுமலை சரணாலயத்திலே இரண்டும், கன்னியாகுமரி கோட்டத்திலே ஒன்றும், தேனி கோட்டத்திலே ஒன்றும் ஆக ஏழு யானைகளும் 1997-ஆம் ஆண்டு சத்தியமங்கலம் கோட்டத்திலே ஐந்து, நீலகிரி வடக்கிலே இரண்டு, பொள்ளாச்சியிலே ஒன்று, முதுமலை வன விலங்கு சரணாலயத்திலே இரண்டு, ஒசூர் கோட்டத்திலே ஒன்று, தேனியில் ஒன்று ஆக 12 யானைகளும்; 1998 ஆம் ஆண்டு கடலூர் கோட்டத்தில் இரண்டு, அம்பாசமுத்திரத்தில் ஒன்று, ஒசூர் கோட்டத்தில் இரண்டு, ஈரோடு கோட்டத்தில் ஒன்று, கன்னியாகுமரியில் ஒன்று, முதுமலை வன விலங்கு சரணாலயத்திலே நான்கு, நீலகிரி வடக்கு கோட்டத்திலே ஒன்று, ஆக 12 யானைகளும் இறந்ததாக அதிகாரிகள் கணக்கு கொடுத்திருக்கிறார்கள். இதிலே சில யானைகள் தந்தங்களுக்காக வேட்டையாடப்பட்டிருக்கலாம். அவர்களின் பேரில் வழக்குகள் தொடுக்கப்பட்டு, சில வழக்குகளிலே தந்தங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. யானைகளுக்கு வனத் துறை அதிகாரிகள் இப்பொழுது மிகச் சிறந்த முறையிலே அதிகமான பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆங்காங்கே யானைகளுக்காக தண்ணீர்த் தொட்டிகளெல்லாம் கட்டப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். மனிதனுக்கு 40 லிட்டர் என்ற கணக்கில் நாம் தண்ணீரை வழங்குகிறோம். ஒரு யானை எத்தனை லிட்டர் தண்ணீர் ஒருநாளைக்குக் குடிக்கிறது என்ற கணக்கு அமைச்சருக்குத் தெரியுமா? அல்லது மான் எவ்வளவு தண்ணீர் குடிக்கிறது? எங்கள் பகுதிகளிலேயெல்லாம் தண்ணீர் போதவில்லையோ என்னவோ தெரியவில்லை, ஜவ்வாது மலையிலே இருக்கக்கூடிய யானைகளெல்லாம் அந்தக் காட்டைவிட்டு வெளியே வந்து ஆலங்காயம், பெக்கூர் போன்ற பகுதிகளிலே வந்து, பெக்கூரிலே ஒரு ஆளைத் தாக்கி ஆளே செத்துப் போனார். போன ஆண்டுகூட 17 யானைகள் எங்களுடைய நிலத்திலேயெல்லாம் புகுந்து வாழை போன்றவற்றையும், மற்றவற்றையெல்லாம் நாசம் செய்து விட்டன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆண்டமுத்து அவர்கள், அங்கே

[1999 பிப்ரவரி 24

ஏதோ வெளியே போனவுடன் ஆட்கள் அதை அடித்துக் கொன்று விடுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், தலைகீழாக, இங்கே நடக்கிறது. யானை எங்களுடைய ஊருக்குள்ளே வந்து, எங்களுடைய நிலங்களையும் அல்லது மற்ற இடங்களையெல்லாம் நாசம் செய்து விடுகின்றது. ஆகவே, ஒருநாளைக்கு எவ்வளவு தண்ணீர் அந்த யானைக்குத் தேவைப்படும்? ஒருவேளை, தண்ணீர் போதாத அளவிற்குத் தொட்டிகள் இருக்கின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு நாளைக்கு ஒரு யானை 175 லிட்டர் தண்ணீர் குடிக்கும் என்பதையும், மான் 2 லிட்டரிலிருந்து 5 லிட்டர் வரை குடிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஊரிலே - வேலூர் மாவட்டம் ஜவ்வாது மலையில் 20-3-1998 முதல் 1-4-1998 வரை ஒரு யானை, ஜவ்வாது காப்புக் காடு முருகன் கோயில் குளம் பகுதியில் தங்கியிருந்துகொண்டு மாலை நேரங்களில் காவலூர் நிலங்கள் வழியாகச் சென்று, சண்முகம் என்பவரது நிலப் பயிர்களை மிதித்துச் சேதம் செய்தது. 20-4-1998 அன்று இரவு, 7 யானைகள் ஒரு குட்டியுடன் ஆம்பூர் காட்டுப் பகுதிகளிலே வந்து, ஆலங்காயம் காப்புக் காடுகளைச் சுற்றித் திரிந்து சில சேதங்களை ஏற்படுத்தியது. மேலும் 5-9-1998 தேதியில் மேற்படி யானைக் கூட்டம் மலைரெட்டியூர் கிராமத்திலே ஜெயவேல் மற்றும் பணிக்கர் பாஸ்கர் நிலங்களிலே பயிரிடப்பட்டிருந்த கரும்பு மற்றும் நெற்பயிர்களைச் சேதம் செய்து விட்டு ஆலங்காயம் காட்டுக்குச் சென்றுவிட்டது. இவற்றையெல்லாம் நமது வனத் துறை அதிகாரிகள் கணக்கெடுத்து அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கயிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, யானைகளின் தந்தங்களைத் திருடுவதற்காக யானைகளைக் கொல்லுகிற நிகழ்வுகள் நடக்கிற நேரத்தில், யானைகளால் காட்டுப் பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கும், பெரிய இடையூறுகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, நீலகிரி மாவட்டத்தில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்து, அதை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு



1999 பிப்ரவரி 24]

வந்திருக்கிறோம். மேலும், மக்னா என்கிற ஒரு யானை சுமார் 10 பேரைக் கொன்று குவித்தது; அந்த யானையை வனத் துறை அதிகாரிகள் மிகச் சாமர்த்தியமாகப் பிடித்து முதுமலையில் வைத்திருக்கிறார்கள். அதுகுறித்து பத்திரிகைகளில் அது எப்பொழுது விடுவிக்கப்படும் என்ற கேள்விகள் வருகின்றன; விடுவிக்கப்பட்டதாகவும் செய்தி வந்திருக்கிறது. எனவே, அந்த மக்னா யானையைப் பற்றிய தகவலை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு மக்னா என்னும் யானை கேரளா-தமிழ்நாடு எல்லைப் பகுதிகளிலே சுற்றித் திரிந்து ஏறத்தாழ 11 பேர்களைக் கொன்றுவிட்டது. கேரள அரசாங்கம் அந்த மக்னா யானையைச் சுட்டுத் தள்ளுவதற்காக வனத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டது. இருந்தாலும்கூட நமது வனத் துறை அதிகாரிகள் அந்த மக்னா யானையை மிகச் சிரமப்பட்டு 30 கிலோமீட்டர் கொண்டு வந்து அதை ஒரு கொட்டிலில் அடைத்தார்கள். அடைத்து, ஏழெட்டு மாதம் மிகச் சிறந்த முறையிலே அதற்குச் சிகிச்சை அளித்து, கடந்த வாரம் அந்த யானையை மற்ற யானைகளோடு உலாவ விட்டிருக்கிறார்கள். 30 வயதான அந்த யானை மிகச் சிறப்பான முறையிலே குழந்தையைப்போல இப்போது எல்லோருடனும் பழகிக்கொண்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிகளில் இருக்கின்ற யானைகளைப் பாதுகாப்பது என்பது, பொதுவாக வனத் துறை ஊழியர்களைப் பொறுத்தது. வனத் துறை ஊழியர்கள் பற்றாக்குறை இருப்பதன் காரணமாக, போதுமான ஊழியர்கள் இல்லாத காரணத்தால், இப்போது வனத்தையும் பாதுகாக்க முடியவில்லை, வனத்தில் இருக்கிற யானைகளையும் மற்ற மிருகங்களையும் பாதுகாக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. இன்னொன்று. எல்லையோரப் பகுதிகளான, கேரளா-தமிழ்நாடு எல்லைப் பகுதிகளில் கடுமையான வேனல் வருகின்றபோது நீர்த்

தேக்கங்களை நாடி யானைகள் வருகின்ற அந்த நேரத்தைப் பார்த்து, ஒரு பெரிய சமூக விரோத கும்பல்—ஒரு செட்டே இருக்கிறது. ஒரு பெரிய கம்பெனி அது—யானைகளைக் கொலை செய்து தந்தங்களைத் திருடுவது என்பது வாடிக்கையான தொழிலாக அந்தப் பகுதியிலே இருக்கிறது. எனவே, அந்த எல்லைப் பகுதிகளில்கூட அதிகப்படியான வனத் துறை அதிகாரிகளையும் ஊழியர்களையும் வைத்து, யானைகளையும் மற்ற காட்டு மிருகங்களையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையிலே சில பணியிடங்கள் காலியாக இருப்பது உண்மை. அந்த இடங்களுக்கு ஆட்களை நியமிக்கிறபோது, சில தற்காலிகப் பணியாளர்கள் தங்களை நிரந்தரம் செய்யவேண்டுமென்று கோரி நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருக்கிறார்கள் என்பதால், இப்போது அந்த காலிப் பணியிடங்களை நிரப்ப முடியவில்லை. இருந்தாலும்கூட, இப்போது இருக்கின்ற வனத் துறை ஊழியர்களை வைத்து மிகச் சிறப்பாக இந்த அரசாங்கம் யானைகளைப் பாதுகாத்து வருகின்றது. கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு 2,500 என்ற எண்ணிக்கையில் இருந்த யானைகள், கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட கணக்குகளின்படி 2,650 என்ற அளவில் இருக்கின்றன எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் எத்தனை மிருகங்கள் இருக்கின்றன? அந்தப் பூங்காவின் முன்னேற்றத்திற்காக ஆண்டுதோறும் எவ்வளவு தொகை செலவழிக்கப்படுகின்றது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தொடர்பு இல்லாத கேள்வி என்றாலும் கூட, என்னிடம் இருக்கின்ற சில குறிப்புகளை வைத்து பதில் சொல்ல விரும்புகின்றேன். அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், 49 வகையான பாலூட்டிகள், 398 விலங்குகள் இருக்கின்றன; பறவைகள் 81 வகைகள் இருக்கின்றன; அவற்றின் எண்ணிக்கை 696. ஊர்வன 23 வகைகள் இருக்கின்றன; அதன் எண்ணிக்கை 541. முதுகெலும்பு இல்லாதவை 10 வகைகள் உள்ளன; அதிலே 105 எண்ணிக்கைகள் உள்ளன. மீன் வகைகள் 18 இருக்கின்றன; அவற்றின் எண்ணிக்கை 414. அழிந்து வருகின்ற 189 வகையான மிருகங்களில் 2,154 மிருகங்கள் இப்போது அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் சென்னைக்கு மிக அருகில் ஒரு புலி வந்துவிட்டது என்ற செய்தியால் சென்னை நகர மக்கள் எல்லாம் கிலியில் இருந்தார்கள். அந்தப் புலி எங்கேயிருந்து வந்தது? காட்டிலிருந்து வந்த புலியா? அல்லது மிருகக்காட்சிச் சாலையிலிருந்து தப்பி வந்த புலியா? மக்கள் நெருக்கமாக வாழக்கூடிய பகுதிக்கு எப்படி காட்டில் இருக்கக்கூடிய மிருகமான புலி வந்திருக்க முடியும்? இதற்கு வன இலாகாவினர் என்ன சொல்கிறார்கள்? அதைப் பிடித்துவிட்டார்களா, இல்லையா? ஒரு வாரம் அது செய்தியாக வந்துகொண்டே இருந்தது. அந்தப் புலி 10 பேரை அடித்துவிட்டது. பிறகு பிடித்தார்களா, இல்லையா என்று தெரியாத நிலையில், பத்திரிகைக்காரர்கள் இப்போது வேறு செய்திக்குப் போய்விட்டார்கள். அந்தப் புலி இப்போது எங்கே இருக்கிறது? அதைப் பிடிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் காரனோடை பகுதியில், ஆந்திர காட்டுப் பகுதியிலிருந்து ஒரு புலி இனப் பெருக்கத்திற்காக தமிழக எல்லைப் பகுதிக்கு இணை தேடி வந்திருக்கிறது. அதைப் பார்த்த ஒருவர் அதை விரட்ட, அவரைக் கடித்துக் குதறியிருக்கிறது. ஊர்க்காரர்கள் எல்லாம் சேர்ந்து அந்தப் புலியை மீண்டும் துரத்த 10 பேரை அது கடித்துக் குதறிவிட்டது. அவர்கள் எல்லாம் அது பெண் புலி என்று சொல்கிறார்கள். சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் 8 பேர் பலத்த காயங்களுடன் அனுமதிக்கப்பட்டு இருந்தார்கள். அவர்களையெல்லாம் நான் சென்று பார்த்து, ஆறுதல் கூறி வனத் துறை மூலம் உதவிகளை எல்லாம் செய்துவிட்டு வந்தேன். மீண்டும் அந்தப் புலி, ஞாயிறு என்ற ஊருக்குச் சென்று இப்போது பதுங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். வனத் துறை அதிகாரிகள் கூண்டுகள் வைத்து, அந்தக் கூண்டுகளில், மாட்டு இறைச்சியை வைத்து, அதைப் பிடிப்பதற்காக தினந்தோறும் இரவு பகலாகக்

[1999 பிப்ரவரி 24

கண்காணித்து வருகிறார்கள் என்ற செய்தியைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானையின் தலையில் இருந்து ஒரு வகையான முத்து எடுக்கப்படுவதாக பத்திரிகையில் செய்தி படித்தேன். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது செய்தியாகத்தான் இருக்கிறது. என்னுடைய குறிப்புகளில் அதைப்பற்றி எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை தமிழ்நாட்டிலேயே இரண்டு காரணங்களுக்காக பிரபல்யமானது. ஒன்று, இதுவரையிலே மனிதனே நுழைய முடியாத மிக அழுத்தமான கன்னிக் காடுகளாக இருந்து வந்தது. இரண்டாவது, அங்கே இருக்கின்ற காட்டெருமைகள். அண்மைக் காலமாக யானைகள் அந்தப் பகுதிக்கு வந்து கலகம் விளைவித்துக் கொண்டிருக்கின்றன. விவசாயிகள் அதனால் பெரிதும் துன்பமடைந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே யானைகள் ஆண்டுதோறும் குறிப்பிட்ட மாதங்களிலே வருகின்றன. தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னால் ஆண்டுதோறும் எப்படி யானைகள் வர முடியும்? ஒவ்வோர் ஆண்டும் வெளியிலே இருந்துதான் யானைகள் வருகின்றன. ஜவ்வாது மலையில் யானைகள் இல்லை. எந்த முறையில் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறது? அதோடு, மற்ற இடங்களிலே யானைகளைக் கொல்லுகிறார்கள் என்று பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால், முதுமலையிலே — அது ஒரு சரணாலயம் — கடந்த ஆண்டு 4 யானைகள் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே? யார் அதைக் கொல்லுகிறார்கள்? பாதுகாப்பு இருக்கின்ற இடத்திலேயே, வன விலங்குகள் சரணாலயத்திலேயே அவற்றிற்குப் பாதுகாப்பு இல்லையென்றால், வேலியே பயிரை மேய்கிறதா, அல்லது அங்கே வன விலங்குகளுக்கு என்ன விதத்தில் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது என்பன குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 பிப்ரவரி 24]

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் உலவும் இடங்கள் கேரளா, கர்நாடகம், தமிழ்நாடு காட்டுப் பகுதிகளிலே அமைந்திருக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், யானைத் தந்தங்களுக்காக யானையைக் கொல்பவர் எவரும் இல்லையென்று நினைக்கிறேன். கடந்த ஆண்டு கேரளாவில் கல்தான் பத்தேரியிலிருந்து சில யானைத் தந்தத் திருடர்கள் இங்கே வந்து நமது வனத்தில் ஒரு யானையைச் சுட்டிருக்கிறார்கள். நமது வனத் துறை அதிகாரிகள் நேரடியாக அந்தத் திருடர்களோடு மோதியதில், வனத் துறையைச் சேர்ந்த மாந்தன் என்ற ஒருவர் இறந்திருக்கிறார். மிகக் கட்டுப்பாடாக, புதியதாகத் தனிப் படைகள் அமைத்து, கேரள எல்லைப் பகுதியிலே இருக்கின்ற யானைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஜவ்வாது மலைப் பகுதியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக இருக்கின்ற பிரச்சினைகளைக் குறிப்பிட்டுச் சொன்னால் அதற்குத் தகுந்த வேலிகள் அமைத்து, குழிகள் தோண்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ரங்கநாதன்.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளிலே யானைகளால் பயிர்களுக்கும், மனிதர்களுக்கும் பெருத்த சேதம் ஏற்படுகிறது. சில சமயங்களில் யானைகளால் மனித உயிரிழப்பு ஏற்படுகிறது. அப்படி உயிரிழந்த மனிதர்களுக்கு எவ்வளவு நிதியுதவி வழங்கப்படுகிறது? அது வன இலாக்காவால் வழங்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே யானை அல்லது வேறு மிருகங்கள் தாக்கி இறந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் மட்டும்தான் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சியிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, யானையோ, கரடியோ, புலியோ தாக்கி இறந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்ற அளவிலே நிதி உதவி வழங்கப்படுகிறது. 1996 ஆம் ஆண்டு 14

[1999 பிப்ரவரி 24

நபர்களுக்கு இதுபோன்ற உதவி வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல 1997 ஆம் ஆண்டு 2,20,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மனித உயிரிழப்புக்கு, 15 நபர்களுக்கு 4,80,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, தேனி, கம்பம், இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலே யானைகள் அதிகமாக இருக்கின்றன. இப்போது யானைத் தந்தத்திற்காக யானையை வேட்டையாடிக் கொண்டிருக்கிறார்கள். தற்போது அந்தப் பகுதிகளில் கஞ்சாச் செடிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் யானைகள் கஞ்சாச் செடிகளைத் தின்றுவிடுகின்றன என்ற காரணத்தினால் கஞ்சாச் செடி வளர்ப்பவர்கள் யானைகளைச் சுட்டுவிடுகின்றார்கள். ஆகவே, வேதனை தாங்கமுடியாமல் அவை அடிவாரத்திற்கு வந்து கலகம் செய்கின்றன. சமீபத்தில்கூட, பிளவக்கல் அணைப் பகுதிக்கு வந்து வாழைத் தோட்டங்களை எல்லாம் அழித்திருக்கின்றன. அங்கே உள்ள கால்நடைத் துறை அதிகாரிகளும், வனத் துறை அதிகாரிகளும், யானை சாப்பிடாமல் இறந்து விட்டது, வியாதியால் இறந்து விட்டது என்று போலி Certificate வாங்கி, துப்பாக்கியால் சுட்டதை மறைத்து விடுகின்ற காரணத்தினால், யானைகள் இனத்தை அழிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, இந்தப் பகுதியிலே உள்ள கஞ்சாச் செடிகளை அழிப்பதற்கும், யானைகளை சமூக விரோதிகளிடமிருந்து காப்பாற்றுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், தந்தத்திற்காக கொல்வதைவிட்டு, கஞ்சாச் செடி வளர்ப்பவர்கள், அவர்களுடைய செடிகளை அழிக்கின்றன என்பதற்காக அவற்றைச் சுடுகின்ற காரணத்தினால், அந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், அதிகாரிகள் அரசாங்கத்தை ஏமாற்றி போலி Certificate வாங்கி காரியங்களைச் செய்வதைத் தடுப்பதற்கும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது ஒரு கற்பனையான குற்றச்சாட்டு. கஞ்சாச் செடிகளை யானைகள் தின்பதில்லை என்று சொல்கிறார்கள். கஞ்சாச் செடிகளை—குறிப்பாக தங்கள் ஊருக்கு அருகிலுள்ள மலைகளிலும், அதேபோல வருச நாட்டுப் பகுதியிலும், ஆனைமலை பகுதியிலும் ஏராளமான இடங்களில் வனத் துறை அதிகாரிகள் மிகத் துணிச்சலோடு சென்று பல கோடி மதிப்புள்ள கஞ்சாப் பயிர்களை இந்த ஆண்டு அழித்திருக்கிறார்கள். ஆகவே, அதுபோன்ற நிகழ்வுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 பிப்ரவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சுமார் 5 ஆண்டுக் காலத்திற்கு மேலாக தற்காலிகப் பணியாளர்களாக பணியாற்றிய விலங்கியல் பட்டதாரிகள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அடுத்த கேள்வி. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாத காலத்திற்கு முன்பாக, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பீமர்பட்டி என்ற கிராமத்தில் ஏழுமலை என்பவரை ஒரு கரடி அடித்து ஒரு கண்ணே போய் விட்டது. ஒரு மாத காலம் அவர் மருத்துவமனையில் இருந்து, இப்போது வீட்டிலே இருக்கின்றார். அவருக்கு எவ்வளவு நிவாரணத் தொகை வழங்கப்படும்? மேலும் அந்தப் பகுதி மக்களைப் பாதுகாக்க வனத் துறை அதிகாரிகளை நியமனம் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** தலைவர் அவர்களே, உயிர் இழப்பு ஏற்பட்டால் 50,000 ரூபாயும், அதேபோன்று அங்க இழப்புகள் ஏற்பட்டால் 25,000 ரூபாயும் கொடுப்பதற்கு அரசாணைகள் இருக்கின்றன. ஆகவே, குறிப்பிட்ட அந்தச் சம்பவத்தைத் தெரிவித்தால் உடனடியாக நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என் 97, திரு. ஜி. சொக்கலிங்கம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

[1999 பிப்ரவரி 24

**97—**

**தினக்கூலித் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யும் திட்டம்**

***8568—திரு. ஜி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வண்டலூர் உயிரியல் பூங்காவில் தினக்கூலியாகப் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் தினக்கூலியாகப் பணிபுரியும் 44 தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய அரசாணை நிலை எண் 23, சுற்றுப்புறம் மற்றும் வனத் (வன.5) துறை, நாள் 25-1-1999-ல் அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது.

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியை ஓராண்டிற்கு முன்பு எழுப்பி இருந்தாலும்கூட, உயிரியல் பூங்காவில் தினக்கூலிகளாகப் பணிபுரிந்த 44 தொழிலாளர்களை, கிட்டத்தட்ட 18 ஆண்டுகளாக பணிபுரிந்துவந்த தொழிலாளர்களை, நம்முடைய முதலமைச்சர் அவர்களும், வனத் துறை அமைச்சர் அவர்களும் என்னுடைய கோரிக்கையை ஏற்று, அவர்களை நிரந்தரமாக்கியதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சுமார் 5 ஆண்டுக் காலத்திற்கு மேலாக பணியாற்றிய விலங்கியல் பட்டதாரிகள் பலர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். அவர்களில் திரு. ஆசைத்தம்பி என்ற விலங்கியல் பட்டதாரி மட்டும் நிரந்தரம் செய்யப்படவில்லை. காரணம், இந்தக் கருத்துரு தயாரிக்கப்பட்ட நேரத்தில், அவருடைய தந்தையார் இறந்துவிட்ட காரணத்தினால், ஒரு வார காலம் விடுப்பில் இருந்தார். அவருக்கு உயர்ந்தபட்ச வயதும் முடிந்துவிட்ட நிலையில்,



1999 பிப்ரவரி 24]

இதனைப் பரிவுடன் பரிசீலித்து அவரையும் நிரந்தரமாகப் பணியில் சேர்ப்பிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி இருப்பின் நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 98, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**98—**

**திரைப்படத்தை வெளியிடல்**

***15904—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் மூலம் "கருவேலம் பூக்கள்" என்ற திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை வெளியிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் தயாரிக்கப்படும் விளக்கப்படங்கள் மற்றும் செய்தி மலர்களை மட்டுமே அரசு வெளியிடும். தனியார் மற்றும் திரைப்பட வளர்ச்சிக் கழகம் மூலம் தயாரிக்கப்படும் வர்த்தக ரீதியிலான திரைப்படங்களை அரசு வெளியிட இயலாது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கருவேலம் பூக்கள்' என்ற திரைப்படம் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட திரைப்படமாகும். அவர்களுடைய நிதியுதவியால் தயாரிக்கப்பட்டிருக்கின்ற திரைப்படம். கந்தகச் சூட்டில் கருகும் மொட்டுக்களாக உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் குழந்தைத் தொழிலாளர்களின் வேதனையை மையமாகக்

கொண்டுள்ள திரைப்படம். இந்தத் திரைப்படத்தை சிறப்பான முறையிலே தயாரிப்பதற்கு புகழ்மிக்க கலைஞர்கள் இளையராஜா, நாசர், லெனின், தங்கர் பச்சன் போன்றவர்கள் எல்லாம் மிகக் குறைந்த ஊதியத்தில் பணியாற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட படத்தை திரைப்பட விழாக்களுக்கு மட்டும் அனுப்புகின்ற பணியில் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் ஈடுபட்டு வருகிறது. அதை மாற்றி, புராண காலத்து சினிமாவை சீர்திருத்த சினிமாவாக மாற்றி, புதுமை செய்த நமது கலைஞர் ஆட்சியில், அந்தப் படத்தை எல்லா மக்களுக்கும் காட்டுகிற வகையில் வெளியிட அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 1996 ஆம் ஆண்டு இந்த 'கருவேலம் பூக்கள்' என்ற படத்திற்கு சிறப்புப் பரிசாக தமிழக அரசு 50,000 ரூபாயை வழங்கியிருக்கிறது. அதேநேரத்தில் அந்தப் படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு வேண்டும் என்று கோரி விண்ணப்பம் வந்தது. ஆனால், விண்ணப்பத்திற்கான ஆவணங்களை அவர்கள் வழங்காத காரணத்தால், அவர்களுக்கு கேளிக்கை வரி விலக்கு வழங்குவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட சமூக சீர்திருத்தப் படங்களுக்காக ஆண்டுதோறும் 5 இலட்சம் ரூபாய் வரையில் மானியம் வழங்கி வருகிறது. எனவே, இதை அரசு சார்பில் வெளியிட இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

அதேநேரத்தில், தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தால் டாக்டர் அம்பேத்கருடைய வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் படம் எடுக்கிறார்கள். அதை தமிழில் தமிழாக்கம் செய்து கொடுத்தால் தமிழக அரசின் சார்பாக 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர்களும் இப்போது மொழி மாற்றம் செய்து வருகிறார்கள். மொழி மாற்றம் செய்தவுடன் அந்தப் படத்திற்கு 10 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும். இப்படித்தான் சமூக சீர்திருத்தப் படங்களை தமிழக அரசு ஊக்கப்படுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 99, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**99—**

**மருந்துகள் வாங்குவதற்கு அதிக தொகை ஒதுக்குதல்**

***8314—திரு. ப. மோகன் கந்தசாமி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடை மருத்துவ நிலையங்களில் மருந்துகள் வாங்குவதற்கு ஒதுக்கப்படும் தொகையை இரட்டிப்பாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கால்நடை மருத்துவ நிலையங்களில் மருந்துகள் வாங்குவதற்கு ஒதுக்கப்படும் தொகையை அதிகரிக்க, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 100, திரு. வெ. கோவிந்தன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**100—**

**ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டுதல்**

***17335—திரு. வெ. கோவிந்தன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, வாணியம்பாடி வட்டம், கரும்பூரில் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டும் பணி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1999 பிப்ரவரி 24

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கரும்பூரில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவர் விடுதி கட்டுவதற்கு 1998-99 ஆம் ஆண்டு அரசு ஆணையிட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. கோவிந்தன், இருக்கையில் இல்லை. திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு எனது கொளத்தூர் தொகுதியில் கொளத்தூருக்கும் கிள்ளுக்கோட்டைக்கும் 2 ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகள், தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அவர்களால் வழங்கப்பட்டன. அந்த 2 விடுதிகளும் தற்போது வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகின்றன. சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கான இடம் தனி வட்டாட்சியர் மூலம் தெரிவு செய்யப்பட்டுவிட்டது. எனவே, 2 விடுதிகளுக்கும் தாட்கோ மூலம் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே 2 விடுதிகள் புதிதாக அறிவித்து ஆணையிடப்பட்டுள்ளதை நன்றியோடு கூறி இருக்கிறார். ஆகவே, எதிர்வரும் ஆண்டில் நிதி நிலைமை இடம் கொடுத்தால் அவற்றிற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் @

(இரண்டாம் பட்டியல் முதல் நான்காம் பட்டியல் வரை)

## இரண்டாம் பட்டியல்

1—

### தமிழகக் காவல் துறைத் தலைமை அலுவலகம்

**வினா 14465—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



1999 பிப்ரவரி 24]

தமிழகக் காவல் துறைத் தலைமை அலுவலகம் கடற்கரைச் சாலையில் எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கடற்கரைச் சாலையிலுள்ள தமிழகக் காவல் துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்தை புதுப்பிக்கும் பணி முழுமையாக முடிக்கப்பட்டு, 28-08-1998 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2—

### சந்தன மரங்கள் கடத்தப்படுவதைத் தடுத்தல்

**வினா 14487—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலையில் சந்தன மரங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க காவல் துறையை ஏ.கே.47 துப்பாக்கியுடன் மலைப் பகுதி எல்லையில் நிறுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஜவ்வாது மலைப் பகுதியில் சந்தன மரங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கும் முதன்மையான பொறுப்பு வனத் துறையைச் சார்ந்தது. காவல் துறையினர் அவ்வப்போது வனத் துறையுடன் சேர்ந்து சந்தன மரக்கடத்தல் தடுப்புப் பணியில் ஈடுபடுகிறார்கள். சந்தன மரக்கடத்தலைத் தடுக்க ஏ.கே.47 போன்ற நவீன ஆயுதங்களை உபயோகிக்கத் தேவையில்லை. ஏனெனில், கடத்தல்காரர்கள் பழமையான ஒற்றைக் குழல் நாட்டுத் துப்பாக்கிகளைத்தான் பயன்படுத்துகின்றனர். காவல் துறை தற்போது பயன்படுத்தும் 410 மஸ்கட் மற்றும் 303 துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் சந்தன மரக்கடத்தலைத் தடுப்பதற்குப் போதுமானதாகும். இருப்பினும், கடத்தல்காரர்கள் நவீன ரகத் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவார்களேயானால் வனத் துறை அலுவலர்களுக்கு பயிற்சி கொடுத்து, ஏ.கே.47 ரக துப்பாக்கிகளை கடத்தல் தடுப்புப் பணியில் ஈடுபடுத்திக்கொள்ளலாம்.

[1999 பிப்ரவரி 24

3—

### பெண் காவலர்களை நியமித்தல்

**வினா 18034—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்திற்கு பெண் காவலர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. எனவே, சங்ககிரி காவல் நிலையத்தில் பெண் காவலர்களை நியமனம் செய்ய அவசியம் எழவில்லை எனக் கருதப்படுகிறது.

4—

### காவல் நிலையத்திற்கு தனிக் கட்டடம்

**வினா 18074—திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, மல்லாங்கினரில் உள்ள காவல் நிலையத்திற்கு தனிக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டு மொத்தம் 40 காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அனுமதி அளித்து, அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. அதில் மல்லாங்கினர் காவல் நிலையம் இடம் பெறவில்லை. எனவே, மல்லாங்கினர் காவல் நிலையத்துக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.



1999 பிப்ரவரி 24]

5—

### துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் திறத்தல்

**வினா 18100—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளியில் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளியில் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

### காவலர்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்

**வினா 19601—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவலர் குடியிருப்புகளில் போதுமான வசதி இல்லை என்பதால் அனைத்து வசதிகளுடன்கூடிய குடியிருப்பு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பகுதி திட்ட முறையில் (phased manner) ஆண்டுதோறும் 2,500 காவலர் குடியிருப்புகள், அனைத்து வசதிகளுடன், காவலர் வீட்டு வசதிக் கழகம் மூலம் கட்டித் தரப்படுகின்றன. மேலும், காவலர் குடியிருப்புகளைப் பராமரிப்பதற்குத் தேவையான நிதியையும் அரசு ஒதுக்கியுள்ளது.

7—

## ஆய்வுக் கூடங்கள் அமைத்தல்

**வினா 14061—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு பொறியியற் கல்லூரியில் மாணவர்களுக்குத் தேவையான ஆய்வுக் கூடங்கள் (Laboratory) இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் அரசு பொறியியற் கல்லூரியில் மாணவர்கட்குத் தேவையான ஆய்வுக் கூடங்கள் பாலிடெக்னிக் வளாகத்தில் உள்ள கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இக் கல்லூரிக்கான ஆய்வுக் கூடத்திற்கான கட்டுமானப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அப்பணிகள் முடிவடைந்ததும் எல்லா ஆய்வுக் கூடங்களும் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டு முழுமையாக செயல்படத் தொடங்கும்.

1997-98 ஆம் நிதி ஆண்டில் ரூ. 14 இலட்சத்திற்கு CAD/CAM ஆய்வகம் ஏற்படுத்த அரசாணை வழங்கப்பட்டு ஆய்வுக் கூடத்திற்கான உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. 1998-99ஆம் நிதி ஆண்டிற்கு ரூ. 12.15 இலட்சம் செலவில் தெர்மல் என்ஜினியரிங் ஆய்வுக் கூடம் ஏற்படுத்த ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், தற்போது பாலிடெக்னிக்கில் இருக்கும் இட வசதியில் கல்லூரி மாணவர்கட்குச் சிறப்பான முறையில் எல்லா ஆய்வகப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.



8—

## கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டுதல்

**வினா 15014—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியத்திலுள்ள பிச்சக்காரனூர், குக்கல்பட்டி ஆகிய இடங்களுக்கு கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியத்திலுள்ள பிச்சக்காரனூர் மற்றும் குக்கல்பட்டி ஆகிய இடங்களில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அடுத்த நிதி ஆண்டுகளில் இப்பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கக்கூடிய வாய்ப்பைப் பொறுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

## மேல்நிலைப் பள்ளியைப் புதுப்பித்தல்

**வினா 15332—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மேல்நிலைப் பள்ளியின் பல கட்டடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. இதைப் புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அரசு மேல்நிலைப் பள்ளியின் பல கட்டடங்கள் பழுதடைந்து உள்ளதால்

[1999 பிப்ரவரி 24

கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க ரூ.4.4 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24-7-98-ல் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், சட்டமன்ற உறுப்பினர்—நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து கிடைக்கக்கூடிய நிதியைப் பொறுத்து வகுப்பறைகள் கட்ட வழி செய்யலாம்.

**10—**

### நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்

**வினா 17425—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், சிந்தாமணி ஊரிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வரும் கல்வியாண்டில் சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், சிந்தாமணி ஊரிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரி கருத்துரு பெறப்பட்டால் அப்படி உயர்த்தக் கோரும் பள்ளிகளுள் உரிய தகுதியும் முன்னுரிமையும் உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**11—**

### விளையாட்டு வீரர்களை ஊக்குவித்தல்

**வினா 18974—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(ஆ) விளையாட்டு அரங்கத்தை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?



1999 பிப்ரவரி 24]

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழக அரசு ஐந்து விளையாட்டு விடுதிகளையும் மூன்று விளையாட்டுப் பள்ளிகளையும் ஏற்படுத்தி, அதில் தங்கிப் பயிலும் ஒவ்வொரு மாணவ/மாணவியருக்கும் உணவுக்காகவும், சீருடைக்காகவும், விளையாட்டு உபகரணங்களுக்காகவும் உதவித் தொகை வழங்கி வருகிறது.

2. **சிறப்பு விளையாட்டு விடுதி:**—சிறப்பு விளையாட்டு விடுதி ஒன்று நேரு விளையாட்டு அரங்கில் தொடங்கப்பட்டு அவரவர்களது விளையாட்டுக்கேற்ப சிறப்புப் பயிற்சி, சத்துணவு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டிலிருந்து திருப்பத்தூர் புனித இருதய கல்லூரியில் வாலிபால் மேம்பாட்டு மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கூடைப் பந்து, பளு தூக்குதல், வளைகோல் பந்து விளையாட்டுகளில் போட்டியாளர்களின் திறமையை வளர்க்கும் பொருட்டு சிறப்பு விளையாட்டு மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

பளு தூக்கும் மையம், வேலூர் சத்துவாச்சாரியில் செயல்பட்டு வருகிறது. வளைகோல் பந்து விளையாட்டுக்கு பெயர் பெற்ற திருநெல்வேலியில் இம்மையம் 1-8-1997 முதல் தொடங்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

3. **அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள்:**—கிராமங்களில் உள்ள விளையாட்டு வீரர்களை வெளிக் கொணரவும், விளையாட்டு ஆர்வத்தை வளர்த்திடவும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும், மாவட்ட அளவிலும் பிறகு மாநில அளவிலும், அகில இந்திய அளவிலும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன ஒரு வார கால தீவிர பயிற்சி முகாமிற்குப் பிறகு, அகில இந்திய அளவில் பங்கு பெறச் செய்தும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

4. **மாநில விளையாட்டுப் போட்டிகள் 1997:**—50-வது சுதந்திர திருநாளை முன்னிட்டு, "மாநில விளையாட்டுப் போட்டிகளை" நடத்திட முடிவெடுத்து, 15 பல்வேறு விளையாட்டுகளில் போட்டிகள்

தமிழ்நாடு ஒலிம்பிக் கழகம் மற்றும் சம்பந்தப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் துணையுடன் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டன.

5. **ஊரக விளையாட்டு மையங்களுக்கிடையேயான தடகளப் போட்டிகள்:**—தமிழ் நாட்டில் கிராமங்களில் விளையாட்டு உணர்வினை மேம்படுத்த அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊரக விளையாட்டு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களிடையே விளையாட்டுப் போட்டி மனப்பான்மையை மேம்படுத்தும் பொருட்டு, அனைத்து ஊரக விளையாட்டு மையங்களிலும், பின்னர் மாவட்ட அளவிலும் தடகளப் போட்டிகள் நடத்தப்பட்டன. ஊரக விளையாட்டு மையங்களுக்கிடையேயான மாநில அளவிலான தடகளப் போட்டிகள் சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் மார்ச் 1998-ல் சிறப்பாக நடைபெற்றன.

6. சென்னை மாநகரில் சிறகுப் பந்து, சுடுதல், நீச்சல், ட்ரையாத்லான் டென்னிஸ், மேசைப் பந்து, பளு தூக்குதல், சிலம்பம், கூடைப் பந்து, கால் பந்து, வளைகோல் பந்து, கபாடி, கோ-கோ, கையுந்து பந்து போன்ற விளையாட்டுக்கள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனியாக நடத்தப்பட்டன.

7. தமிழ்நாடு பல்கலைக்கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

8. 4-வது தேசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் பெற்றோருக்கான வெகுமதிகள் வழங்கப்பட்டன.

9. விளையாட்டுப் பள்ளி/விளையாட்டு விடுதிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் பள்ளிகள்/ விளையாட்டு விடுதிகள் மாவட்ட மாநில அளவிலான போட்டிகளை நடத்தி, மாணவர்கள் பங்கேற்கச் செய்யப்படுகிறார்கள்.

10. **ஊக்க உதவித் தொகை திட்டம்:**—சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு ஊக்க உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், 200 விளையாட்டு வீரர்களுக்கு ஊக்க உதவித் தொகை வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

11. **முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது:**—தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையில், பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மூன்று நபர்களுக்கு 13-8-1998 அன்று நடைபெற்ற





விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு இலட்ச ரூபாய் பண முடிப்பும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சின்னம் பதித்த நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன.

(ஆ) **சென்னையில் அமைந்துள்ள நவீன விளையாட்டரங்கங்கள்:**— சென்னையில் சர்வதேச அளவிலான கீழ்க்கண்ட நவீன விளையாட்டு அரங்கங்கள் தமிழக அரசால் கட்டப்பட்டுள்ளன.

1. ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை.
2. பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், சென்னை.
3. ஹாக்கி விளையாட்டரங்கம், எழும்பூர்.
4. டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம்.
5. நீச்சல் குள வளாகம், வேளச்சேரி.

**விளையாட்டு தள வசதிகள்:**—ஒவ்வொரு மாவட்ட தலைமையிடத்திலும் ஒரு விளையாட்டு அரங்கமும், ஒரு நீச்சல் குளமும், ஓர் உள் விளையாட்டரங்கமும் அமைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்பொழுது 15 திறந்தவெளி விளையாட்டரங்கங்களும் 4 உள் விளையாட்டரங்கங்களும் (இரண்டு பல்நோக்கு விளையாட்டரங்கங்கள் இரண்டு சிறகுப் பந்து விளையாட்டரங்கங்கள்) மற்றும் 4 நீச்சல் குளங்களும் இந்த மாநிலத்தில் உள்ளன. புதுக்கோட்டையில் புதிய விளையாட்டரங்கக் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. இராமநாதபுரத்தில் விளையாட்டரங்கம் கட்டும் பணி சமீபத்தில் முடிவடைந்து 9-11-1997-ல் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. எல்லா வயதுப் பிரிவினரும் உடற்கல்வித் திறனை மேம்படுத்திட வேண்டும் என்பது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அடிப்படைக் கொள்கையாக இருப்பதால், வரும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விளையாட்டரங்கம் இல்லாத 12 மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டரங்கங்கள் கட்டப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

**உள் விளையாட்டரங்கங்கள்:**—தற்போது சென்னையில் அமைந்துள்ள சர்வதேசத் தரத்திலான உள் விளையாட்டரங்கத்தைத் தவிர, சேலம் மற்றும் உதகமண்டலத்தில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்களும், மதுரை மற்றும் தருமபுரியில் சிறகுப் பந்து உள் விளையாட்டரங்கங்களும் அமைந்துள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள் அமைப்பது என்ற திட்டத்தில், முதல் கட்டமாக ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அனைத்து மாநகராட்சி நகரங்களில் உள் விளையாட்டரங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, 1998-99 ஆம் ஆண்டில் திருச்சியில் பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**நீச்சல் குளங்கள்:**—தற்போது, சென்னை (சர்வதேச தரம்) தஞ்சாவூர் மற்றும் தருமபுரியில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் ஒரு நீச்சல் குளம் அமைப்பது என்ற திட்டத்தின் அடிப்படையில் முதலில் மதுரையில் வரும் 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 40.00 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**நவீன விளையாட்டு வசதிகள்:**—தற்போது பன்னாட்டு விளையாட்டரங்கங்களுக்கு ஈடான வசதிகள் கொண்ட விளையாட்டரங்கங்கள் சென்னையிலேயே அமைக்கப்பட்டு உள்ளன. தமிழ்நாட்டில் இதர மாவட்டங்களிலும் உள்ள விளையாட்டு வீரர்கள் பயன்பெறும் வகையில் நவீன விளையாட்டு வசதிகளை மாவட்டத் தலைநகரில் ஏற்படுத்தி வசதிகளைப் பரவலாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் குறைந்த பட்சம் அனைத்து மாநகராட்சி நகரங்களிலும் நவீன ஓடு தளப் பாதை (CIWDER TRACK) அமைத்திட திட்டமிடப்பட்டு கோவையில் 1998-99 ஆம் ஆண்டில் ரூ.20.00 இலட்சம் செலவில் ஓடு தளப் பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**இரண்டாவது ஊரக விளையாட்டு மையங்கள் ஏற்படுத்துதல்:**—கிராமங்களில் விளையாட்டுத் திறனுள்ளோருக்கு விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தித்தர, தமிழக அரசு, மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஒவ்வொரு ஊரக விளையாட்டு மையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒன்பதாவது திட்டத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மேலும் ஒரு ஊரக விளையாட்டு மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, 1998-99ம் நிதியாண்டில் கூடுதலாக 100 ஊரக விளையாட்டு மையங்கள் அமைக்க திட்டம் மேற்கொள்ளப்பட்டு, மாநில அரசு நிதியிலிருந்து ரூ. 10.00 இலட்சம் நிலையான செலவினமாக வழங்கப்பட்டுள்ளது.





**12—**

**பல்கலைக்கழக விரிவாக்க மையத்தை பல்கலைக்கழகமாக்குதல்**

**வினா 19817—திரு. சி. ஞானசேகரன்:**—மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் இயங்கி வரும் சென்னைப் பல்கலைக்கழக விரிவாக்க மையத்தை பல்கலைக்கழகமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**விவர அறிக்கை**

தற்பொழுது வேலூரில் இயங்கி வரும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதுநிலை விரிவாக்க மையம் 1983ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட அவ்விரிவாக்க மையத்தில் விலங்கியல் துறை, பொருளாதாரத் துறை ஆகிய இரண்டு துறைகள் இயங்கி வருகின்றன. விலங்கியல் துறையில் ஒரு பேராசிரியரும், பொருளாதாரத் துறையில் ஓர் இணைப் பேராசிரியரும் பணியாற்றி வருகிறார்கள்.

அந்த விரிவாக்க மையத்தை பல்கலைக்கழகமாக தரம் உயர்த்த வேண்டுமானால் மேலும் பல துறைகளும், அதற்கான ஆசிரியர்களும் பணியாளர்களும் சொந்தக் கட்டடங்களும் வேண்டும். மேலும் குறைந்தபட்சம் 50 கோடி ரூபாய் தேவைப்படும். கடந்த ஆண்டு சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகமும் மற்றும் சென்னையில் (பூம்பொழில், சென்னை-28) டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக் கழகமும் ஏற்படுத்தப்பட்டன. இதற்கு முன்னர் 1990 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. ஒரு பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்து, அதற்கான நிதி உதவி செய்து வளர்ச்சி அடையச் செய்ய பல ஆண்டுகள் ஆகும். சென்ற ஆண்டு இரண்டு பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது சென்னைப் பல்கலைக்கழகத்தில் வேலூர் மையத்தை பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

[1999 பிப்ரவரி 24

13—

## பாடநூல் நிறுவனத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா 19828—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன அலுவலகங்களில் அரசுக் கட்டடம் இல்லாத மாவட்டப் பாடநூல் நிறுவனம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த மாவட்டங்களில் அரசு சொந்தக் கட்டடம் கட்ட முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம். காஞ்சிபுரம், விழுப்புரம், கோவில்பட்டி, நாகப்பட்டினம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, மானாமதுரை, சேலம், திண்டுக்கல், திருச்சி, வேலூர், திருவண்ணாமலை ஆகிய 12 வட்டார அலுவலகங்கள் மாநில அரசு நிறுவனமான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தைச் சார்ந்த இடங்களிலும், கோயம்புத்தூர், விருதுநகர், கும்பகோணம், நாகர்கோவில் ஆகிய 4 வட்டார அலுவலகங்கள் மத்திய அரசு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தைச் சார்ந்த இடங்களிலும், மதுரை வட்டார அலுவலகம் மதுரை பாண்டியன் கூட்டுறவுச் சங்க கட்டடத்திலும், ஈரோடு வட்டார அலுவலகம் தனியாருக்குச் சொந்தமான இடத்தில் வாடகைக் கட்டடத்திலும் இயங்குகின்றன.

(ஆ) தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் நிதிநிலைக்கேற்ப அரசால் புறம்போக்கு நிலங்களை வாங்கவும் சொந்தக் கட்டடங்கள் கட்டவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

14—

## துணை சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 14894—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மற்றும் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆடையூர், பக்கநாடு ஆகிய இரண்டு ஊராட்சிகளில் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



1999 பிப்ரவரி 24]

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (1): ஆடையூர் கிராமம்: சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மற்றும் ஒன்றியத்தைச் சார்ந்த ஆடையூர் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்தத் துணை சுகாதார நிலையத்தில்—9 கிராமங்களைச் சேர்ந்த 4,088 மக்கள் தொகைக்கும்—கிராம சுகாதார செவிலியர், தாய் சேய் நலம், தடுப்பு மருந்து மற்றும் மருத்துவப் பணியாற்றி வருகிறார்.

(2) பக்கநாடு கிராமம்: பக்கநாடு கிராமம், வேப்பமரத்தூர் துணை சுகாதார நிலையத்தில் உள்ளடக்கிய ஒரு கிராமம் ஆகும். பக்கநாடு கிராம மக்கள் தொகை 957. வேப்பமரத்தூர் துணை சுகாதார நிலையத்தில் மொத்தம் 11 கிராமங்கள் உள்ளன. இந்தத் துணை சுகாதார நிலையத்தில் 4,913 மக்கள் தொகைக்கும் கிராம சுகாதார செவிலியர், தாய் சேய் நலம், தடுப்பு மருந்து மற்றும் மருத்துவப் பணியாற்றி வருகிறார். ஆகவே, ஆடையூர், பக்கநாடு ஆகிய இரண்டு கிராமங்களை உள்ளடக்கி தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

15—

## தாய் சேய் நல விடுதி அமைத்தல்

**வினா 16616—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சியிலுள்ள காக்காயன்

[1999 பிப்ரவரி 24

தெரு காட்டுவளவில் ஒரு தாய் சேய் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ): ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ): சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சியிலுள்ள காக்காயன் தெரு, காட்டுவளவு கிராமம், பள்ளிப்பட்டி துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய ஒரு கிராமம் ஆகும். பள்ளிப்பட்டி துணை சுகாதார நிலையத்தின் மக்கள் தொகை 4,822 ஆகும். இதில் அடங்கும் காக்காயன் தெரு கிராம மக்கள் தொகை 230. மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற வரையறையின்படி பள்ளிப்பட்டியில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதால், காக்காயன் தெரு காட்டுவளவு கிராமத்திற்கென தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ): இவ்வினா எழவில்லை.

**16—**

### துணை சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 16720—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், தாதாபுரம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1999 பிப்ரவரி 24]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், தாதாபுரம் ஊராட்சியில் ஏற்கனவே அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்தத் துணை சுகாதார நிலையத்தில் 8 கிராமங்களைச் சார்ந்த 5,094 மக்கட் தொகைக்கும் கிராம சுகாதார செவிலியர், தாய் சேய் நலம், தடுப்பு மருந்து மற்றும் மருத்துவம் பணியாற்றி வருகிறார். ஆகவே, தாதாபுரம் ஊராட்சியில் மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**17—**

### துணை சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 16721—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் ஊராட்சியில் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் கிராமத்தில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்தத் துணை சுகாதார நிலையத்தில் 7 கிராமங்கள் உள்ளன. இதன் மக்கள் தொகை 4,153 ஆகும். புதுப்பாளையம் துணை சுகாதார நிலையத்தில் உள்ள 4,153 மக்கள் தொகைக்கும் கிராம சுகாதார செவிலியர், தாய் சேய் நலம், தடுப்பு மருந்து மற்றும் மருத்துவப் பணியாற்றி வருவதால், மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் புதுப்பாளையம் ஊராட்சியில் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 18708—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ): சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்பட உள்ளதால் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ): ஆம் எனில், இந்த நிதியாண்டில் நடைபெறுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ): சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கருக்கல்வாடி ஊராட்சியைச் சார்ந்த தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகைக்கேற்ப 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், கருக்கல்வாடி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், கருக்கல்வாடிக்கு 3 கிலோமீட்டர் தொலைவில் கே.ஆர். தோப்பூர் ஆரம்ப சுகாதார நிலையமும் மற்றும் 6 கிலோமீட்டர் தொலைவில் தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும், கருக்கல்வாடி ஊராட்சியில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ): இவ்வினா எழவில்லை.

19—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 18710—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ): சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியத்திலுள்ள முத்தநாயக்கன்பட்டி, பச்சனம்பட்டி ஆகிய இரண்டு ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ): ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியிலுள்ள முத்தநாயக்கன்பட்டி மற்றும் பச்சனம்பட்டி ஊராட்சிகள் ஓமலூர் ஒன்றியத்தைச் சார்ந்தவை. இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. முத்தநாயக்கன்பட்டியில் துணை சுகாதார நிலையம் உள்ளது. அதன் மக்கள் தொகை 1,250. இக்கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோமீட்டர் தொலைவில் கருப்பூர் மற்றும் தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களும், ஓமலூர் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன.

பச்சனம்பட்டி கிராம மக்கள் தொகை 572. பச்சனம் பட்டியில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இக்கிராமத்திலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் ஓமலூர் அரசு மருத்துவமனையும் 8 கிலோமீட்டர் தொலைவில் பாகல்பட்டி, தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, முத்தநாய்க்கன்பட்டி மற்றும் பச்சனம்பட்டி ஊராட்சிகளில் கூடுதலாக ஆரம்ப சுகாரதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ): இவ்வினா எழவில்லை.

20—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 18714—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ): சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் என்னுமிடத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளார் கிராமம் உள்ளது. வெள்ளார் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. தற்போது வெள்ளார் ஆரம்ப சுகாதார நிலையம் ஊராட்சி ஒன்றியக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. வெள்ளார் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அரசு கட்டடப் பணிகள் முடிக்கப்படும் நிலையில் உள்ளன. எனவே கூடுதலாக வெள்ளாரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

21—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 18717—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், கிழக்கு ஓலைப் பட்டி, சிந்தாமணியூர் என்னும் இடத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கிழக்கு ஓலைப்பட்டி, சிந்தாமணியூர், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. மேச்சேரி ஒன்றியம் சார்ந்த கிழக்கு ஓலைப்பட்டி சிந்தாமணியூரில்





துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும் 8 கிலோமீட்டர் தூரத்தில் மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும், மேச்சேரி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், கூடுதலாக கிழக்கு ஓலைப்பட்டி சிந்தாமணியூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

22—

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 18718—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெரியேரிப்பட்டியைத் தலைமையிடமாக வைத்து ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பெரியேரிப்பட்டி கிராமம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. ஓமலூர் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், பெரியேரிப்பட்டி கிராமத்திலிருந்து 3 கிலோமீட்டர் தொலைவில் அம்மன் கோவில்பட்டி துணை சுகாதார நிலையமும், 7 கிலோமீட்டர் தொலைவில் ஓமலூர் அரசு மருத்துவமனையும், 11 கிலோமீட்டர் தொலைவில் பாகல்பட்டி, தொளசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், கூடுதலாக பெரியேரிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[1999 பிப்ரவரி 24

23—

### அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம்

**வினா 18749—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், நல்லூர் கிராமத்திற்கு அரசு மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், நல்லூர் கிராமம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. நல்லூர் கிராம மக்கள் தொகை 2,964 ஆகும். தெள்ளார் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்கேற்ப 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், நல்லூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையமும், 10 கிலோ மீட்டர் தொலைவில் தெள்ளார் ஆரம்ப சுகாதார நிலையமும், 15 கிலோ மீட்டர் தொலைவில் வந்தவாசி அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும், நல்லூர் கிராமத்தில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

24—

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 18752—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், பி. மேட்டுப்பாளையத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?



1999 பிப்ரவரி 24]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், பி. மேட்டுப்பாளையத்தைச் சார்ந்த கோபிசெட்டிபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் மக்கள் தொகைக்கேற்ப 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், பி. மேட்டுப்பாளையத்தில் இரண்டு துணை சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், மேற்படி கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் கவுந்தப்பாடி அரசு மருத்துவமனையும் மற்றும் 13 கிலோ மீட்டர் தொலைவில் ஜம்பை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுவதாலும், கூடுதலாக பி. மேட்டுப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

### ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்குதல்

**வினா 18766—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் மக்கள் தொகைக்கேற்ப 72 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டன. அதில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வட்டார அரசு மருத்துவமனைகளாக மாற்றப்பட்டன. எனவே, தற்போது 69 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகைக்கேற்ப தேவையான ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், 1998-ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

[1999 பிப்ரவரி 24

26—

## ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்குதல்

**வினா 18768—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 15 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. 15 ஊராட்சி ஒன்றியங்களின் மக்கள் தொகை 11,18,724 ஆகும். மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படவேண்டும். அதன்படி தற்போது 46 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இந்த நிதி ஆண்டில், 1998-99 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

27—

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்

**வினா 18790—திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழையூர் ஒன்றியம், சோழவித்தியபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



1999 பிப்ரவரி 24]

சோழவித்தியபுரம், கீழையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. கீழையூர் ஒன்றியத்தின் மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், சோழவித்தியபுரத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 8 கிலோ மீட்டர் தொலைவில் திருப்பூண்டி மற்றும் திருக்குவளை ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், கூடுதலாக சோழவித்தியபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

28—

## தொழில்நுட்பப் பயிற்சி

**வினா 19459—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியம் மூலம் தொழில்நுட்பப் பயிற்சிக்காக அலுவலர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றனரா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தப் பிரிவுகளில் அவர்களின் பயிற்சியின் தொழில்நுட்பம் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். மின்வாரியம் பல்வேறு துறைகளில் உயர் தொழில் நுட்பப் பயிற்சிக்காக ஜெர்மன், இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, இத்தாலி, சைனா, ஸ்வீடன் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற வெளிநாடுகளுக்கு மின்வாரிய அலுவலர்கள் அனுப்பப்படுகின்றனர்.

(ஆ) ஆனால் மின்திட்ட உற்பத்தி மற்றும் பராமரிப்பு கம்பி வடம் போடுதல் மற்றும் இணைத்தல் (Cable laying and joining) காற்றாலை மின்திட்டம் நிறுவுதல், மாசுக் கட்டுப்பாடு எரிவாயு சுழலித் திட்டங்கள் (Gas Turbine) போன்ற துறைகளில் பயிற்சி பெற்ற அலுவலர்களின் தொழில்நுட்பம் மின்வாரியப் பிரிவுகளில் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது.

[1999 பிப்ரவரி 24

29—

எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைத்தல்

**வினா 19614—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், கடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகும். எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு ஆரம்ப சுகாதார நிலைய அளவில் அமைக்கப்படுவதில்லை. மாவட்ட அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவமனைகள் அளவில்தான் அமைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து நோய்களுக்கும் முதலுதவி அளிக்கப்பட்டு பின்னர் சம்பந்தப்பட்ட வட்டார மருத்துவமனை/மாவட்ட அரசு மருத்துவமனை/மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் மேல் சிகிச்சைக்காக அனுப்பப்படுகிறார்கள். எனவே ஆரம்ப சுகாதார நிலையங்களில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

30—

வறட்சிப் பகுதியாக அறிவித்தல்

**வினா 17601—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், சங்ககிரி வட்டத்தில் உள்ள மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



1999 பிப்ரவரி 24]

(ஆ) வறட்சிப் பகுதியாக ஒரு பகுதியை அறிவிக்க என்னென்ன விதிமுறையை அரசு எதிர்பார்க்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வறட்சிப் பகுதியாக ஒரு பகுதியை அறிவிக்க விதிமுறைகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. பயிர் மகசூல், வெள்ளம், வறட்சி போன்ற காரணங்களால் 50 சதவீதம் குறைவாக இருந்தால் வருவாய் நிலை ஆணைக்குட்பட்டு நிலவரி தள்ளுபடி செய்யப்படுகிறது. தொடர்ச்சியாக 2 வருடங்களுக்கு அதாவது நான்கு பருவக் காலங்களுக்கு மேல் பருவமழை பொய்த்து விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டு வறட்சி ஏற்பட்டால், வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்கலாம் என அரசு ஆய்ந்து உரிய ஆணை வெளியிடும்.

31—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 18520—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம் தொளசம்பட்டி ரயில்வே கேட் அருகில் வாழும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தொளசம்பட்டி ஆதிதிராவிடர் காலனி, ராக்கியன் காலனி ஆகியவைகளில் வசித்து வரும் பொதுமக்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வது மாவட்ட அளவில் ஆய்வில் உள்ளது.

[1999 பிப்ரவரி 24

32—

## பட்டா வழங்குதல்

**வினா 18523—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், ஆரூர்ப்பட்டி ஊராட்சியிலுள்ள இந்திரா நகரில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் வட்டம், ஆரூர்ப்பட்டி இந்திரா நகரில் புல எண். 108/1-ல் உள்ள நிலம், ஓடைப் புறம்போக்கு என்பதாலும், இந்நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புகள் ஆட்சேபகரமானவை என்பதாலும், அங்கு வசிப்பவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க இயலாது.

33—

## வட்டாட்சியர் அலுவலகத்தில் சிறப்புப் பிரிவு அமைத்தல்

**வினா 21437—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாட்டிலுள்ள மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றுகள் தடையின்றி வழங்க வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒரு சிறப்புப் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

மலைவாழ் மக்களுக்கான சாதிச் சான்றுகள் உரிய விசாரணைக்குப்பின் தடையின்றி கோட்டாட்சியரால் மட்டுமே



1999 பிப்ரவரி 24]

வழங்கப்பட்டு வருகின்றன. எனவே வட்டாட்சியர் அலுவலகத்தில் சிறப்புப் பிரிவு தொடங்க வேண்டிய அவசியம் இல்லை.

34—

## காமதேனு சூப்பர் மார்க்கெட்

**வினா 144—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மின்விளக்கு மற்றும் குடிநீர் உபகரணங்களை, காமதேனு சூப்பர் மார்க்கெட்டில் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சிகளில் மின் உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு அரசு தனது ஊரக வளர்ச்சித் துறை ஆணை எண் 7, நாள் 12-1-1996-ல் அரசு அங்கீகரித்துள்ள நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட விலையில் வாங்க உத்தரவு பிறப்பித்து உள்ளது.

ஆழ்துளைக் கிணறுகளுக்கான உதிரி பாகங்களை வாங்க டான்சி, ரிச்சர்ட்சன்ஸ் மற்றும் குருடாஸ் கம்பெனி ஆகியவை அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. காமதேனு சூப்பர் மார்க்கெட்டில் வாங்க அரசு உத்தரவு ஏதும் இல்லை.

35—

## சாலை வசதி செய்தல்

**வினா 563—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் சாலை வசதி செய்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சிகளில் சாலைகள் அமைப்பது அந்தந்த பேரூராட்சிகளின் கடமைகளில் ஒன்றாகும். நிதிப் பற்றாக்குறை உள்ள பேரூராட்சிகளுக்கு, அவ்வப்போது அரசு மானியம் வழங்கப்படுகிறது. 1995-96ஆம் நிதி ஆண்டில், ரூ.25 கோடி சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ், அதிராம்பட்டினம் பேரூராட்சிக்கு, இரண்டு சாலை வேலைகளை மேற்கொள்ள ரூ. 70,000 வழங்கப்பட்டுள்ளது. 1996-97ஆம் நிதியாண்டில் பேரூராட்சியின் நிதி ஆதாரத்தைக் கணக்கில் கொண்டு அரசு மானியம் வழங்குவது பரிசீலிக்கப்படும்.

**36—**

**பேரூராட்சிகளுக்கு மானியம்**

**வினா 1061—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1995-96 வரையிலான ஆண்டுகளில் பேரூராட்சிகளில் மின் விளக்கு பராமரிக்கவும், கட்டணம் கட்டவும் கொடுக்கப்பட்ட ஆண்டுவாரி மானியத் தொகை எவ்வளவு?

(ஆ) திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு எவ்வளவு மானியம் கொடுக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பேரூராட்சிகளில் மின் விளக்கு பராமரிக்கவும், மின் கட்டணம் செலுத்தவும் கீழ்க்கண்ட ஆண்டுகளில் அதன் எதிரே குறிப்பிட்ட தொகை அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

1992-93 .. ரூ.75.00 இலட்சம்

1993-94 .. ரூ.75.00 இலட்சம்

1994-95 .. முதல் 1995- 96 வரை அரசு மானியம் ஏதும் வழங்கப்படவில்லை.



(ஆ) ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆண்டுகளில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு மானியம் ஏதும் வழங்கப்படவில்லை. மேற்படி ஆண்டுகளில் மின்கட்டணம் நிலுவையில் உள்ள பேரூராட்சிகளுக்கு மட்டுமே அரசு மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

**37—**

**தன்னிறைவுத் திட்டம்**

**வினா 1066—திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு கடந்த 3 ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1994-95ஆம் ஆண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு 5 சாலைப் பணிகள் மேற்கொள்ள ரூ.1,95,000 மானியம் வழங்கப்பட்டது. இதர 2 ஆண்டுகளுக்கு மானியம் வழங்கப்படவில்லை.

**38—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி**

**வினா 10285—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், திங்களூர் மற்றும் எட்டு குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி முடிவடைந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், இதன் மூலம் பயன்பெறும் குடியிருப்புகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திங்களூர் மற்றும் எட்டு குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு சீரான முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) இதன்படி பயன்பெறும் குடியிருப்புகளில் திங்களூர் ஊராட்சியில் நான்கும், கருக்குப்பாளையம் ஊராட்சியில் ஐந்தும், மடத்துப் பாளையம் ஊராட்சியில் ஒன்றும் ஆக மொத்தம் 10 குடியிருப்புகள் ஆகும்.

**39—**

### தார்ச் சாலையாக மாற்றும் திட்டம்

**வினா 11520—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் ஒன்றியம், ஆத்துக்கால் புதூர் சாலையிலிருந்து கருப்பம்பாளையம் வழியாக நத்தக்காட்டுப் புதூர் செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வெள்ளக்கோவில் தொகுதிக்குட்பட்ட கொளத்துப்பாளையம் பேரூராட்சியில் கருப்பம்பாளையம் வழியாக நத்தக்காட்டுப்புதூர் செல்லும் சாலையில் கருப்பம்பாளையம் வரை தார் போடும் வேலை கி.மீ. 0/0 முதல் 0/740 வரை ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திலும் கி.மீ. 0/740 முதல் 1/1 கி.மீ. வரை ரூ.1.22 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதி வேலை திட்டத்திலும் ஏற்கெனவே செய்து முடிக்கப்பட்டுள்ளது.



**40—**

### குடிநீர் நீர்த்தேக்கத் தொட்டி

**வினா 13967—திரு. ச. அழகிரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை ஓர் இடத்தில் கட்டுவதும், குடிநீர் ஆதாரத்தை பின்னர் தேடி அலைவதும் போன்ற பழக்கத்தை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நகராட்சிக்கான தற்போதைய மக்கள் தொகையை அடிப்படையாகக்கொண்டு, எதிர்வரும் 30-வது வருட குடிநீர்த் தேவையை கணக்கிட்டு, அதனை வழங்கக்கூடிய நீராதாரம் நில நீர் ஆய்வாளர்களால் உள்ளூரில் அல்லது ஊருக்கு அருகாமையில் தேர்வு செய்யப்படுகிறது. அவ்வாறு தேடி கிடைக்காத பட்சத்தில், தொலை தூரத்தில் தேர்வு செய்யப்பட்டு, வழியோர கிராமங்களையும் இணைத்து, கூட்டுக் குடிநீர்த் திட்டமாக வடிவமைக்கப்படுகிறது.

திட்ட ஆய்வுப் பணிகள் நடைபெறும்பொழுதே, தேர்வு செய்யப்பட்ட நீராதாரம் அமைக்கப்பட்டு, அதன் நீர் தொடுதிறன் அறிந்த பின்னரே திட்டத்தின் பிற பகுதிகள் வடிவமைக்கப்படுகின்றன.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் குடிநீர்த் திட்டத்தின் உச்சகட்ட கால (30 வருடங்கள்) தேவையின்படி வடிவமைக்கப்படுகின்றன. இவ்வாறு வடிவமைக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் உரிய ஒப்புதல் பெற்று, திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு திட்டம் செயலாக்கப்படுகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் சம்பந்தப்பட்ட ஊர்/நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றடையும் வகையில், நகரின் மேடான நிலப் பகுதி அல்லது ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் மட்டும் கட்டப்படுகிறது.

[1999 பிப்ரவரி 24

41—

சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

**வினா 14437—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சியில் சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சத்துவாச்சாரி சிறப்பு நிலைப் பேரூராட்சிக்கு இப்பேரூராட்சியின் தீர்மானத்தின் அடிப்படையில் 40 சுகாதாரப் பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்திட பேரூராட்சிகள் இயக்குநரால் 17-10-1997-ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

42—

தனி ஊராட்சி ஒன்றியமாக அமைத்தல்

**வினா 20551—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், அந்தியூர், மற்றும் பர்கூர் மலைப் பகுதியில் சுமார் 30,000 மக்கள் வசித்து வருவதால் இந்தப் பகுதியை தனி ஊராட்சி ஒன்றியமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை..



1999 பிப்ரவரி 24]

43—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா 20826—திரு. கே.கே. வீரப்பன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை, பரமத்தி, திருச்செங்கோடு ஆகிய ஒன்றியங்களிலுள்ள 110 வழியோரக் கிராமங்கள் பயன் அடையும் வகையில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியும் திட்டப் பணிகள் தொடங்க நிதி ஒதுக்கீடு செய்யப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திட்டத்திற்காக நடப்பு நிதி ஆண்டில், (1998-99) ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வேலைகள் நடை பெற்று வருகின்றன.

44—

பாம்புகள் தொல்லையினைத் தவிர்த்தல்

**வினா 13631—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாம்புகள் தொல்லையினால் கிராமங்களில் விவசாயிகள் பெரிதும் இறக்க நேரிடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

[1999 பிப்ரவரி 24

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறையின்கீழ், மழை வெள்ளத்தினாலோ, வறட்சி காரணமாகவோ, பயிர்கள் பாதிக்கப்பட்டால், அதுகுறித்து அரசுக்கு முறைப்படி, பிரேரணை அனுப்பி நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், பூச்சி நோய் காரணமாக பயிர்கள் பாதிக்கப்படும்பொழுது அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படுகின்றன. மேலும் சுற்றுப்புறச்சூழல் மாசுபடுதல், மண்ணின் நச்சுத் தன்மை மற்றும் பூச்சிகளின் பெருக்கம் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கையாளுவதற்கும் அதற்கான உத்திகளை வயல்வெளிப் பள்ளிகள் மூலம் இதர விவசாயிகளுக்கு பரவலாக்கப்படுகிறது.

எனினும் பாம்புகள் தொல்லையினால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக எந்தத் தகவலும் இல்லை. எனவே அதன்பொருட்டு இத்துறையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொதுவாக வயல்வெளிப் பாம்புகள் எலிகளை வேட்டையாடுவதால் விவசாயிகள் அதை அழிக்க விரும்புவதில்லை. எனினும் ஏதும் கடும் பாதிப்பு இருப்பின், இருளர் கூட்டுறவு அமைப்புகள் மூலம் பாம்புகள் தொல்லையினால் விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை மாவட்ட அளவில் எடுக்கலாம்.

45—

**தரம் குறைந்த விதைகளை விற்பனை செய்தல்**

**வினா 15883—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தனியார் கடைகளில் தரம் குறைந்த விதைகளை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தனியார் கடைகளில் தரம் குறைந்த விதைகளை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள்மீது விதைகள் சட்டம் 1966, விதை



1999 பிப்ரவரி 24]

விதிகள் 1968 மற்றும் விதைக் கட்டுப்பாட்டு ஆணை 1983-ன்படி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விதைச் சான்று துறையில், இவ்விதம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் பின்வருமாறு:

| வருடம் | தொடரப் பட்ட வழக்குகள் | முடிவான வழக்குகள் | அபராதம் விதிக் கப்பட்ட வழக்குகள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1997-98-ஆம் ஆண்டில் | 235 | 207 | 206 |
| 1998-99 ஆம் ஆண்டு அக்டோபர் 98 முடிய | 209 | 154 | 149 |

மேலும் தரக்குறைவான விதைகள் விற்பனை காணப்படின் விவசாயிகள் அந்தந்தப் பகுதி விதை ஆய்வு அலுவலர்களுக்கு விவரம் தெரிவித்தால் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

46—

**காய்கறி குளிரூட்டும் வசதியுள்ள கிடங்கு ஏற்படுத்துதல்**

**வினா 16986—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஒரு தாலுகாவிற்கு ஒரு பச்சை காய்கறி குளிரூட்டும் வசதி உள்ள கிடங்கு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் ஒரு தாலுகாவிற்கு ஒரு பச்சை காய்கறி குளிரூட்டும் வசதி உள்ள கிடங்கு ஏற்படுத்த, பணிகள் ஏதும் தற்போது மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

47—

### முந்திரிக் கன்றுகள் இலவசமாக வழங்குதல்

**வினா 16997—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வசதியற்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு முந்திரிக் கன்றுகள் இலவசமாக வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் முந்திரி சாகுபடி மேற்கொள்ள ஏழை எளிய விவசாயிகளுக்கு இலவசமாக முந்திரிக் கன்றுகள் வழங்கும் திட்டம் இத்துறையில் இல்லை. இருப்பினும், மைய அரசின் முந்திரி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் முந்திரி சாகுபடி செய்ய எக்டருக்கு ரூ.2,100 மதிப்பில் முந்திரி ஒட்டுக் கன்றுகள், உரங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், முதலாமாண்டு மான்யத்தில் வழங்கப்படுகிறது. முந்திரி ஒட்டுக் கன்றுகளுக்கு ரூ.10.50 வீதம் மானியம் (முழுவிலை ரூ.17.00) வழங்கப்படுகிறது.

48—

### உதகமண்டலம் அரசு தாவரவியல் பூங்கா

**வினா 19992—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு உதகமண்டலம் அரசு தாவரவியல் பூங்காவைப் பராமரிக்க ஆன செலவு எவ்வளவு?

(ஆ) பூங்காவைப் பார்க்க வந்த சுற்றுலாப் பயணிகளிடம் அரசு வசூல் செய்த தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**



(அ) ரூ.62.887 இலட்சம் (பணியாளர் ஊதியம் உட்பட).

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் பூங்காவைப் பார்க்க வந்த சுற்றுலாப் பயணிகளிடம் வசூல் செய்த தொகை ரூ.99.065 இலட்சமாகும்.

49—

### அரசுப் பூங்காவில் மலர்க் கண்காட்சி

**வினா 20008—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் அரசுப் பூங்காவில் மலர்க் கண்காட்சிக்காக வைக்கப்பட்ட மலர்கள் விவரம் என்ன?

(ஆ) உதகமண்டல அரசுப் பூங்காவைப் பராமரிக்க ஆகும் செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வில்லியம்ஸ், ஆந்தூரியம், ஆஸ்டர், கிளைடியோ லஸ், ஆப்ரிகன் மேரிகோல்டு, செலோஷியா, காஸ்மாஸ், டாலியா, ரோஜா, கார்னேஷன், ஆல்ஸ்டிகோ, மேரியா, ஜெர்பரா போன்ற 50-க்கும் மேற்பட்ட இனங்களில், சுமார் 150 ரகங்கள் மலர்க் கண்காட்சியில் வைக்கப்பட்டன.

(ஆ) சராசரி ஆண்டு ஒன்றுக்கு பணியாளர்கள் ஊதியம் உட்பட ரூ.60.00 இலட்சம்; வருவாய், 1997-98 ஆம் ஆண்டில் ரூ.101.395 இலட்சம் ஆகும்.

50—

### வேளாண்மைக் கல்லூரியை பல்கலைக் கழகமாக உயர்த்துதல்

**வினா 20877—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ஒத்தக்கடையிலுள்ள வேளாண்மைக் கல்லூரியை வேளாண்மைப்பல்கலைக் கழகமாக உயர்த்திடும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*(இ) அதற்கு தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் பெயர் சூட்டப்படுமா? எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மதுரை வேளாண்மைக் கல்லூரி, கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் அங்கமாகவே செயல்பட்டு வருகின்றது. பல்கலைக்கழகமாக உயர்த்திடும் உத்தேசம் இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை.

**51—**

### வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்

**வினா 21320—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் பத்து கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இதில் ஒவ்வொரு ஆண்டும் 531 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 120 மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்படுகிறார்கள். புதிதாக ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு ரூ.40 கோடி மூலதனமும், கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், நிலம், அடிப்படை வசதிகள் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் தேவைப்படுகின்றன. பொது நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் தற்போது வேளாண்மை இளநிலைப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு குறைவாக உள்ளது. மேலும் சுமார் 2,500 வேளாண்மைப் பட்டதாரிகள் தற்பொழுது





வேலைவாய்ப்பின்றி வேலை வாய்ப்பிற்காகக் காத்துக் கொண்டுள்ளார்கள். இத்தகைய சூழ்நிலையில் சேலம் மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**52—**

### விவசாயிகளுக்கு மானிய விலையில் மருந்து வழங்குதல்

**வினா 21333—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுத்தம் பயிரைத் தாக்கும் தண்டு 'ஈ'யைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு மானிய விலையில் மருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரசு எடுத்த கொள்கை முடிவுப்படி 1994 ஆம் ஆண்டு முதல் பூச்சி மருந்து விற்பனை வேளாண்மைத் துறையால் மேற்கொள்ளப்படுவதில்லை. வேளாண் இடுபொருள்கள் விநியோகம் மைய அரசு திட்டங்களில் அளிக்கப்படும் மானிய சலுகைகளுக்குத் தேவையான அளவே விநியோகம் செய்யப்படுகிறது. மைய அரசு திட்டமான தேசிய பயறு வகைகள் மேம்பாட்டு திட்டத்தில் பூச்சி மருந்துகள் விநியோக இனத்திற்காக மானியம் தற்பொழுது மைய அரசால் அனுமதிக்கப்படாததால் உளுந்துப் பயிரைத் தாக்கும் தண்டு 'ஈ' யைக் கட்டுப்படுத்த மானிய விலையில் பூச்சி மருந்துகள் விநியோகம் செய்ய அரசுத் திட்டங்களில் வழி இல்லை எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இருப்பினும் இத்தகு பூச்சிகளைக் கட்டுப்படுத்த தாவரப் பூச்சிக்கொல்லிகளை உபயோகிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**53—**

### பாசனக் கால்வாய் மராமத்துப் பணிகள்

**வினா 19576—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 24

1997-98 ஆம் ஆண்டில் விவசாயிகள் பாசனக் கால்வாய் மராமத்துப் பணிகளில் படிப்படியாகப் பங்கேற்க எந்தெந்த மாவட்டங்களில் விவசாயிகள் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

சூலை 1997 முதல், சூன் 1998 முடிய கீழ்க்கண்ட நான்கு மாவட்டங்களில், 55 விவசாயச் சங்கங்களிடம் அவை சார்ந்துள்ள கால்வாயின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை ஒப்படைக்கும் திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன:

திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்—

சாத்தனூர் அணைத் திட்டம் .. 38 விவசாயச் சங்கங்கள்

தேனி மாவட்டம்—

கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம் .. 11 விவசாயச் சங்கங்கள்

திண்டுக்கல் மாவட்டம்—

மருதா நதித் திட்டம் .. 6 விவசாயச் சங்கங்கள்

தமிழகத்தில் உள்ள மற்ற நீர்பாசன திட்டங்களிடம் பாசன அமைப்புகள் ஏற்படுத்திட ஆவன செய்யப்பட்டு வருகின்றது.

**54—**

### தனியார் சிறிய பேருந்து இயக்கும் திட்டம்

**வினா 20389—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் அரசு போக்குவரத்துக் கழகத்தால் பேருந்து இயக்க முடியாத தடத்தில் தனியாரால் சிற்றூர்தி (சிறிய பேருந்து) இயக்கும் திட்டத்தில் எத்தனை பேர் மனு செய்துள்ளார்கள்?

(ஆ) அதில் எத்தனை பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது?

(இ) எத்தனை பேருந்துகள் தற்சமயம் இயங்கி வருகின்றன?



1999 பிப்ரவரி 24]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ)

| மாவட்டம் | அரசு போக்குவரத்துக் கழகத்தால் பேருந்து இயக்க முடியாத தடத்தில் தனியாரால் சிற்றூர்தி (சிறிய பேருந்து) இயக்கும் திட்டத்தில் மனு செய்துள்ளவர்கள் விவரம் (11-12-1998 நிலவரப்படி) | அனுமதி வழங்கப் பட்டுள்ள நபர்கள் | தற்சமயம் இயங்கி வருகின்ற சிற்றூர்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தருமபுரி | 140 | 8 | 4 |
| சேலம் | 378 | 24 | 16 |
| நாமக்கல் | 220 | 128 | 94 |

**55—**

### சாலை அகலப்படுத்துதல்

**வினா 5795—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் மேல்மலையனூர், கொடுக்கன்குப்பம், எய்யில் செ. மேல் செவலாம்பாடி, சேத்பட் சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள 28.75 கி.மீ. சாலையானது தற்போது ஒரு வழிப்பாதையாக உள்ளது. இச்சாலையினை, இரு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய தோராயமாக ரூ.249.30 இலட்சம் தேவைப்படும். இப்பணியை எதிர் வரும் ஆர்.ஐ.டி.எப். 5-ல் சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1999 பிப்ரவரி 24

56—

**தரைப் பாலத்தை உயர்த்திக் கட்டுதல்**

**வினா 18218—திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதியில் உள்ள எடையாளம் பகுதியில் அமைந்துள்ள தரைப் பாலத்தை உயர்த்திக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்தப் பணியினை இந்த நிதியாண்டிலேயே முடித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் கூறப்பட்டுள்ள பாலப் பணியானது, அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. பெருந்தொகை தேவைப்படும் இப்பணியினை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

57—

**பாதை செப்பனிடுதல்**

**வினா 18272—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கச்சப்பள்ளி முதல் அ.புதூர் வழியாக எளம்பிள்ளை வரை செல்லும் பாதையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது "கச்சப்பள்ளி அழகப்பப்பாளையம் எளம்பிள்ளை" வரை 13.2 கி.மீ. நீளமுள்ள இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் ஏற்பட்டுள்ள சிறிய குழிகளுக்கு தார் நொடிகள் தேவையானபோது போடப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் செப்பனிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.





58—

**சாலை பழுதுபார்த்தல்**

**வினா 18279—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி முதல் கள்ளபாளையம், வெள்ளரிவெள்ளி, வேட்டுவப்பட்டி வழியாக கோனேரிப்பட்டி வரையுள்ள சாலை பழுதுபட்டுள்ளதால், அதை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது இரண்டு இதர மாவட்டச் சாலைகளை உள்ளடக்கியதாகும்.

(1) நெடுங்குளம் கிராமச்சாலை .. கி.மீ. 0/0—9/8.

(2) கல்வடங்கம்-பூலாம்பட்டி சாலை—கி.மீ. 3/0—5/8.

இவ்விரு சாலைகளிலும் உள்ள சிறு குழிகளுக்கு தார் நொடிகள் போடப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

59—

**பாதையைச் சீர்படுத்துதல்**

**வினா 18287—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சேலம் இரும்பாலை பாதை சின்னப்பட்டியிலிருந்து இருப்பாளி வரை உள்ள பாதையை சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்படும் சாலையானது நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த சாலையல்ல. இச்சாலை சேலம் இரும்பாலையைச் சார்ந்த சாலையாகும். எனவே இச்சாலையை சீர்செய்வது தொடர்பான நடவடிக்கையினை சேலம் இரும்பாலை நிர்வாகம்தான் எடுக்க வேண்டும்.

**60—**

**நெடுஞ்சாலை செப்பனிடல்**

**வினா 18289—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள வேம்பனேரியில் இருந்து ஐயனாரப்பன் கோவில் வழியாக புதுப் பாளையம் செல்லும் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* அதை உடனடியாகச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வினாவில் குறிப்பிடப்படும் ஐயனாரப்பன் கோவில் சாலை 1.80 கி.மீ. நீளம் கொண்ட இதர மாவட்டச் சாலையாகும். மேற்படி சாலையில் கடந்த ஆண்டு பெய்த மழையினால் ஏற்பட்ட குழிகளுக்குத் தார் நொடிகள் போடப்பட்டு வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.





**61—**

**சாலை செப்பனிடல்**

**வினா 18293—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, சின்னப்பம்பட்டி முதல் மடத்தூர் வழியாக எளம்பிள்ளை செல்லும் சாலையைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் கேட்கப்பட்டுள்ள சாலை காக்காபாளையம்—சின்னப் பம்பட்டி சாலை கி.மீ. 5/6—12/6 வரை 7.00 கி.மீ. நீளம் கொண்ட மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் தார் நொடிகள் போடப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**62—**

**சாலை புதுப்பித்தல்**

**வினா 18470—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர்—மேச்சேரி சாலையை இந்த நிதியாண்டில் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் புதுப்பிக்கக் கோரிய சாலையானது சேலம் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி) கோட்டப் பராமரிப்பில் உள்ள அரசு "முக்கிய மாவட்டச் சாலையாகும்". இச்சாலையின் பெயர் ஓமலூர்—மேச்சேரி சாலையாகும். இச்சாலையானது 14.60 கி.மீ. நீளம்

மற்றும் 7.00 மீ. அகலம் கொண்ட தார்ச் சாலையாகும். இச்சாலையில் அவ்வப்போது ஏற்படும் குழி, பள்ளங்கள், தார் ஒட்டு போட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் 1997 இல் பெய்த பெருமழை மற்றும் மிகுந்த வாகனப் போக்குவரத்தினால் இச்சாலையில் சில பகுதிகள் பழுதடைந்து உள்ளன. மீதமுள்ள சாலை நல்ல நிலையில் உள்ளது.

மேற்சொன்ன பழுதடைந்த பகுதியை நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**63—**

### சாலை புதுப்பித்தல்

**வினா 18479—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூரிலிருந்து சங்ககிரி செல்லும் சாலை கி.மீ. 4/0—5/0 வரை உள்ள சாலையை இந்த நிதியாண்டில் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள ஓமலூர்—சங்ககிரி சாலையானது சேலம் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறை) கோட்டம் பராமரிப்பில் உள்ள அரசு முக்கிய மாவட்டச் சாலையாகும். இப்பகுதி 1989-90 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது. பின்னர், 1994-95 ஆம் ஆண்டு மேற்படி சாலைப் பகுதியில் இடது புறம் (கி.மீ. 4/0—5/0) 1.67 மீ. அகலத்திற்கு சாலை அகலப்படுத்தப்பட்டு தார்ச் சாலையாக்கப் பட்டுள்ளது. தற்போது இப்பகுதியில் சாலையின் அகலம் 5.33 மீ. ஆகும். கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் 1997 இல் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட குழிப் பள்ளங்களுக்கு தார் நொடிகள் போட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையில் பழுதடைந்த பகுதியான கி.மீ. 4/0—5/0 வரை, சாலையைப்



புதுப்பிக்க நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**64—**

### சாலை புதுப்பித்தல்

**வினா 18484—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டி சாலை கி.மீ. 5/0—5/6 இந்த நிதியாண்டில் புதுப்பிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் புதுப்பிக்கக்கோரும் சாலையானது சேலம் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள தொளசம்பட்டி சாலையும் இதர மாவட்ட சாலையாகும். இச்சாலை 9.6 கி.மீ. (கி.மீ. 0/0—9/6) வரை நீளம் கொண்ட தார்ச் சாலையாகும். இச்சாலை கி.மீ.0/0—5/6 வரை 3.66 மீ. அகலமும் கி.மீ. 5/6—9/6 வரை 3.75 மீ. அகலமும் உடையதாகும். மேற்குறிப்பிட்ட சாலையில் அவ்வப்போது ஏற்படும் குழி, பள்ளங்களை ஆண்டு பராமரிப்பின் கீழும் மற்றும் தற்காலிக வெள்ள நிவாரண நிதியின் கீழும் தார் ஒட்டு போட்டு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் உள்ளது. தற்போது உள்ள நிதிப்பற்றாக்குறையினால், வரும் நிதியாண்டில் மேற்படி சாலையைப் புதுப்பிக்க வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

**65—**

### ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

**வினா 18525—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பல்பாக்கி ஊராட்சியில் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 பிப்ரவரி 24

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் பாலமானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள வி.கி.வி. சாலையில் கி.மீ. 186/8 இல் இருந்து பல்பாக்கி வழியாக காமண்டப்பட்டி செல்லும் (இது ஒரு அரசின் இதர மாவட்டச் சாலையாகும்) சாலையில் கி.மீ. 0/6 ஆகும். இந்த இடத்தில் சரபங்கா நதி குறுக்கிடுகிறது. இவ்விடத்தில் நீர்வழிப்பாதையின் அகலம் 20.0 மீ. ஆகும். தற்போது இந்த இடத்தில் மூன்று கண் கொண்ட (தலா 8 மீ. அகலம்) உயர்மட்டப் பாலம் கட்ட தோராயமாக ரூ.115 இலட்சங்கள் தேவைப்படும். நிதிநிலை காரணமாக இப்பாலம் கட்ட அண்மைக் காலத்தில் சாத்தியக்கூறுகள் இல்லை. நிதிநிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் மேற்படி இடத்தில் பாலம் கட்ட வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.*

**66—**

**சாலை புதுப்பித்தல்**

**வினா 18527—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, எலவமரத்தூர்-தாரமங்கலம் சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*வினாவில் புதுப்பிக்கக் கோரும் சாலையானது நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள எலவமரத்தூர்-தாரமங்கலம் சாலை (வழி) ரெட்டிப்பட்டி மற்றும் வேடப்பட்டி சாலை எனும் அரசு இதர மாவட்டச் சாலையாகும். இச் சாலையில் கி.மீ. 4/2—5/0 மற்றும் 6/0—6/8 வரை 1986-87ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கி.மீ.. 5/0—6/0 மற்றும் 6/8—8/6 வரை 1995-96ஆம் ஆண்டு தார்ச் சாலையாக புதுப்பிக்கப்பட்டுள்ளது.*



1999 பிப்ரவரி 24]

*மேலும் இச்சாலையில் அவ்வப்போது ஏற்படும் குழி, பள்ளங்களுக்கு தார் ஒட்டு போட்டு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.*

**67—**

**பாதை அகலப்படுத்துதல்**

**வினா 19740—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*எடப்பாடி—சேலம் செல்லும் பாதையை அகலப்படுத்தி செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது நாமக்கல் (நெ) கோட்டத்தைச் சார்ந்த முக்கிய மாவட்டச் சாலை எடப்பாடி மகுடஞ்சாவடி சாலையாகும். இச்சாலை 17.8 கி.மீ. நீளம் கொண்டது. இச்சாலையில் 9.6 கி.மீ. தூரம் இருவழிப் பாதையாகும். மீதமுள்ள (8.2 கி.மீ.) ஒரு வழிப் பாதையின் அகலம் 5.33 மீட்டர் ஆகும். இப் பாதையை வலதுபுறம் அகலப்படுத்தி இருவழிப் பாதையாக மாற்ற தோராயமாக ரூ.30.00 லட்சம் தேவை. இப்பணியினை இனிவரும் காலத்தில் ஏதாவது திட்டத்தில் சேர்த்து முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.*

**68—**

**தார்ச்சாலை அமைத்தல்**

**வினா 19789—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஈரோடு மாவட்டம், முத்தூர் நகரப் பகுதியில் தார்ச் சாலைகள் அமைக்கும் பணியைத் துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

[1999 பிப்ரவரி 24

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள முத்தூர் நகரப் பகுதியானது நெடுஞ்சாலைத்துறையின் முக்கிய மாவட்டச் சாலையான காங்கேயம்—கொடுமுடி சாலையில் கி.மீ.20/6-ல் அமைந்துள்ளது. இப்பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறாக இருந்ததால், இப்பகுதி மட்டம் உயர்த்தி மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இப்பகுதிச் சாலையானது தார் போடப்பட்டு நல்ல முறையில் உள்ளது.

**69—**

**புறவழிச் சாலை அமைத்தல்**

**வினா 20405—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் புறவழிச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பணிக்கு மிகப்பெருந்தொகை தேவைப்படுவதால் அண்மைக் காலங்களில் இப்பணியை மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

**70—**

**கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்**

**வினா 20349—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் இலாபத்தில் இயங்குகின்றன? எத்தனை நட்டத்தில் இயங்குகின்றன?

(ஆ) நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை சீர்செய்ய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் என்ன?



1999 பிப்ரவரி 24]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது தமிழகத்தில் 34 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் இயங்கிவருகின்றன. இவற்றுள் நாமக்கல் மற்றும் திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் சமீபத்தில்தான் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 32 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் 19 பண்டகசாலைகள் இலாபத்திலும், 13 பண்டகசாலைகள் நட்டத்திலும் செயல்படுகின்றன.

(ஆ) நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து புனரமைப்புக்காக நிதியினைப் பெற்றுப் பண்டகசாலையின் செயல்பாட்டினை மேம்படுத்தி புனரமைக்க அரசளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புனரமைப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாக பணியாளர்கள் ஓய்வுத் திட்டத்தின்படி ஓய்வில் செல்ல விருப்பம் தெரிவித்த பணியாளர்களுக்கு இறுதிப்பயன் மற்றும் இழப்பீட்டுத் தொகை வழங்கவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**71—**

**புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்டுதல்**

**வினா 20418—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மூங்கில்பாடி ஊராட்சியிலுள்ள சேனைக்கவுண்டனூருக்குப் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

[1999 பிப்ரவரி 24

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மூங்கில்பாடி நியாயவிலைக்கடையிலிருந்து 198 குடும்ப அட்டைகளைப் பிரித்து சேனைக்கவுண்டனூரில் ஒரு மகளிர் நியாயவிலைக்கடை நடத்தப்பட்டு வருகிறது. இக்கடை நடத்தும் முகவர், மகளிர் சங்கம் மற்றும் இணைப்புச் சங்கமான வெள்ளாளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆகியவைகள், நமக்கு நாமே திட்டத்தின் கீழ், நியாயவிலைக்கடை கட்ட 1/3 பகுதித் தொகை செலுத்த முன்வரவில்லை. மேலும் தற்பொழுது மகளிர் துணை விற்பனை நிலைய நியாயவிலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை. எனவே இச்சூழ்நிலையில் சேனைக்கவுண்டனூரில் மகளிர் நியாயவிலைக்கடைக்கு அரசுக் கட்டடம் கட்ட வழிவகையில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**72—**

**மண்ணெண்ணெய் ஊற்றும் கிடங்குகள் விவரம்**

**வினா 20433—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும், சேலம் மாவட்டம் மற்றும் எடப்பாடி ஆகிய இடங்களில், மண்ணெண்ணெய் ஊற்றும் கிடங்குகள் எத்தனை தொடங்கப்பட உள்ளன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு, குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதை சீர்படுத்துவதற்காக மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களை அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. முதன்முதலாக 30 மண்ணெண்ணெய் வழங்கும் நிலையங்கள் கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால்



1999 பிப்ரவரி 24]

அமைக்க அரசு ஆணையிட்டு அவற்றில் 28 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தற்போது திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அவற்றில் சேலம் மாநகராட்சியில் திறக்கப்பட்டுள்ள இரண்டு மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களும் அடங்கும். இது தவிர மாவட்டத் தலைநகரங்கள், வட்டாரத் தலைமையிடங்கள், நகராட்சியின் இதர நகரங்களில் மாநிலம் முழுவதும் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் கூட்டுறவுத் துறையால் அமைக்க 100 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 31 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் தொடங்கப்பட்டும், 51 இடங்களில் கட்டுமானப்பணி முடிவடைந்து திறக்க தயார் நிலையிலும் உள்ளது. மேலும் 18 இடங்களில் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

இது தவிர கூட்டுறவுத் துறையில் இரண்டாவது கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் 200 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் இதுவரை மாநிலம் முழுவதும் 109 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1998-99 ஆம் ஆண்டிற்கு 30 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க தேர்வு செய்யப்பட்டு அவற்றில் கள்ளக்குறிச்சியில் ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. இவை தவிர கோவையில் நான்கும், வேலூர் மாவட்டத்தில் ஒன்றும், திருச்சியில் இரண்டும், நெல்லையில் ஒன்றும் ஆக 8 நிலையங்கள் தொடங்க தயாராக உள்ளன. மற்ற இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

சேலம் மாவட்டத்தில் (1) சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, சத்திரம், (2) சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், பள்ளப்பட்டி ஆகிய இரு இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் செயல்பட்டு வருகிறது. இதுதவிர கீழ்க்கண்ட இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டு கட்டுமானப்பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

| | | |
|---|---|---|
| 1 நரசிங்கபுரம் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | முதற்கட்டமாக 1997-98-ல் |
| 2 பெத்துநாயக்கன்பாளையம் | " | " |
| 3 வாழப்பாடி | " | " |
| 4 காரிப்பட்டி | " | " |
| 5 கொண்டாலம்பட்டி | " | " |
| 6 கருப்பூர் | " | " |
| 7 ஆவணிப்பேரூர் மேல் முகம் | " | " |
| 8 ஆரகளூர் | " | " |
| 9 ப்பி. காளிப்பட்டி | " | இரண்டாம் கட்டமாக 1998-99-ல் |
| 10 வெள்ளாளப்பட்டி | " | " |
| 11 உடையாப்பட்டி | " | " |
| 12 அம்மாப்பேட்டை | " | " |

மேலும் கீழ்க்கண்ட சங்கங்களும் தேர்வு செய்யப்பட்டு இடமில்லா சங்கங்களுக்கு இடங்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு முன்மொழிவுகள் பல்வேறு நிலைகளில் உள்ளன:—

| | | | |
|---|---|---|---|
| 1 | மல்லூர் | 2 | ஜாகீர் அம்மாபாளையம் |
| 3 | அய்யம்பெருமாப்பட்டி | 4 | ப்பி. என். பட்டிவீரக்கல் புதூர் |
| 5 | மேட்டூர் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை | | |

சேலம் மாவட்டத்தில் எடப்பாடி தொகுதியில் ஆவணிப்பேரூர் மேல்முகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் எடப்பாடி நகராட்சியில் ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்திற்கான கட்டுமானப்பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.



73—

## புதிய நியாயவிலைக் கடை திறத்தல்

**வினா 20451—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றிய பேரூராட்சியில் உள்ள ரங்கன்பாளையத்தில் புதிய நியாய விலைக் கடை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் கூட்டுறவுப் பண்டக சாலையால் அதன் தலைமையகத்தில் செயல்படும் கொங்கணாபுரம் கடையில் ரங்கன்பாளையம் என்ற பகுதி உள்ளடங்கியுள்ளது. கொங்கணாபுரம் கடையில் 796 குடும்ப அட்டைகள் உள்ளன. மேற்கண்ட கொங்கணாபுரம் நியாய விலைக் கடையானது ரங்கன்பாளையத்தில்தான் செயல்பட்டு வருகின்றது. ரங்கன்பாளையம் பகுதியில் 322 குடும்ப அட்டைகளே உள்ளன. கொங்கணாபுரம் நியாயவிலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ள அனைத்துப் பகுதிகளும், ஒரு கி.மீ. தூரத்திற்குள்ளேயே உள்ளன. எனவே ரங்கன்பாளையம் பகுதியில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக 322 குடும்ப அட்டைகளே உள்ளதால், புதிய நியாயவிலைக் கடையோ அல்லது ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கும் குறைவாக உள்ளதால், பகுதிநேர கடையோ தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

## நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்துதல்

**வினா 20478—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 24

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் பஞ்சாயத்து, வெடிக்காரம்பாளையம், புதூர் பகுதிகளில் நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் பஞ்சாயத்து, வெடிக்காரம்பாளையம், புதூரில் முறையே 309 மற்றும் 361 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேர நியாயவிலைக் கடை தொடங்க சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**75—**

**புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்டுதல்**

**வினா 20499—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பள்ளிப்பட்டி என்னுமிடத்தில் புதிதாக நியாயவிலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேட்டூர் வட்டம், மல்லிகுந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது பள்ளிப்பட்டி நியாயவிலைக் கடையை நடத்தி வருகிறது. மேற்படி கடைக்கு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் நியாயவிலைக் கடை கட்டடம் கட்ட மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்குத் தொகையை செலவிட வங்கியில் போதிய நிதி வசதி இல்லை என்று வங்கி



1999 பிப்ரவரி 24]

தெரிவித்துள்ளதால், பள்ளிப்பட்டியில் புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்ட வாய்ப்புகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**76—**

**புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்டுதல்**

**வினா 20500—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஊ. மாரமங்கலம் ஊராட்சியிலுள்ள நச்சுவாயினூரில் புதிதாக நியாயவிலைக் கடை கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் வட்டம், ப்பி. காளிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது நச்சுவாயினூரில் 203 குடும்ப அட்டைகளுடன் பெரியாம்பட்டி என்ற இடத்தில் நியாயவிலைக் கடை நடத்தி வருகிறது. ப்பி. காளிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது நச்சுவாயினூரில் நியாயவிலைக் கடை கட்ட நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மொத்த மதிப்பீட்டில் 1/3 பங்குத் தொகை செலுத்த முன்வரவில்லை. எனவே, நச்சுவாயினூரில் புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**77—**

**புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்டிக் கொடுத்தல்**

**வினா 20506—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாய்க்கன்பட்டி ஊராட்சியிலுள்ள, கதிர்செட்டிப்பட்டிக்குப் புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதி ஆண்டில் கட்டிக் கொடுக்க முடியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கே. வெங்கடாசலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட முத்துநாய்க்கன்பட்டி கிராமத்தில் முழுநேர நியாய விலைக்கடையையும், கதிர்செட்டிப்பட்டியில் பகுதி நேர நியாய விலைக் கடையையும் நடத்தி வருகிறது. கதிர்செட்டிப்பட்டியில் பகுதி நேர நியாய விலைக் கடை இலவசக் கட்டடத்தில் செயல்படுகின்றது. கதிர்செட்டிப்பட்டி நியாய விலைக் கட்டடம் கட்ட மூன்றில் ஒரு பங்குத் தொகையை செலவிட, வங்கியில் போதிய நிதி வசதி இல்லை என்று தெரிவித்துள்ளதால் கதிர்செட்டிப்பட்டி என்னும் இடத்தில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்ட வாய்ப்புகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

78—

**புதிய தொடக்கக் கூட்டுறவு வங்கி அமைத்தல்**

**வினா 20507—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரிப்பட்டியில் புதிய தொடக்கக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரிப்பட்டி, வேடம்பட்டி, துண்டுமான்யம், ரெட்டிபட்டி —பெரியேரிப்பட்டி ஆகிய நான்கு கிராமங்கள் பெரிய காடம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையில் உள்ளன. நபார்டு நெறிமுறைகளின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்க வேண்டுமானால் அப்பகுதியில் 4,942 ஏக்கர் சாகுபடி நிலப்பரப்பு இருக்க வேண்டும். ஆனால் பெரியேரிப்பட்டியைச் சேர்ந்த சிக்கம்பட்டி, எம். ரெட்டிப்பட்டி ரெவின்யூ கிராமங்களில் மொத்த சாகுபடி நிலப்பரப்பு 1390.20 ஏக்கர் மட்டுமே உள்ளது. மேலும் பெரியேரிப்பட்டியைச் சேர்ந்த ரெவின்யூ கிராமங்களில் உள்ள 1,650 குடும்பங்களில் 863 பேர் பெரியகாடம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் 156 உறுப்பினர்கள் மட்டுமே கடன் பெற்றனர். மேற்படி பெரியகாடம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, சேலம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கியில் 31-3-98-ல் ரூ.22.37 இலட்சம் கடன் நிலுவை வைத்துள்ளது. இதில் தவணை தவறியது ரூ.20.54 இலட்சமாக உள்ளது. இந்நிலையில் பெரியேரிப்பட்டியைச் சேர்ந்த ரெவின்யூ கிராமங்களைப் பிரித்து ஒரு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைத்தால் ஏற்கெனவே செயல்பட்டு வரும் பெரியகாடம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வலிமை இழப்பதோடு புதிதாக அமைக்கக் கோரியுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் தன்னிறைவு பெற்ற வங்கியாகச் செயல்பட வாய்ப்பில்லை. எனவே பெரியேரிப்பட்டியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

79—

**கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம்**

**வினா 20508—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்த நாயக்கன்பட்டியில் இயங்கி வரும் வெங்கடாசலபதி தொடக்க கூட்டுறவு வங்கிக்கு புதிய வங்கிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்தநாயக்கன்பட்டியில் இயங்கி வரும் வெங்கடாசலபதி தொடக்கக் கூட்டுறவு வங்கிக்கு ஏற்கெனவே 45 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கிடங்கில் தற்போது சங்கத்திற்குச் சொந்தமான நியாயவிலைக் கடையும், உர இருப்பு வைத்தும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் அலுவலகம் கிடங்கு இருக்கும் மஞ்சளாயூரிலிருந்து 1½ கிலோ மீட்டர் தொலைவில் முத்தநாயக்கன்பட்டியில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட சூழ்நிலையில், வெங்கடாசலபதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும் மேற்படி வங்கியிலிருந்து அடிமனை வாங்குவது தொடர்பாக உரிய முன்மொழிவு பெற்று நடவடிக்கை எடுக்க மண்டல இணைப் பதிவாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**80—**

### நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா 20581—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நாகர்கூடல் நியாய விலைக் கடையைப் பிரித்து கழனிகட்டுக்கு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட நாகர்கூடல் நியாய விலைக் கடையைப் பிரித்து 209 குடும்ப அட்டைகளுடன் கழனிகாட்டூருக்குப் புதிய பகுதி நேரக் கடை தொங்கி நடத்திட தருமபுரி மாவட்ட வழங்கல் அலுவலகக் கடிதம் மூ.மு. எண். 38481/98/ஜே-2, நாள்: 25-5-98-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**81—**

### பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா 20582—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சோளம்பட்டியிலிருந்து நியாயவிலைக் கடையைப் பிரித்து நரசிமேடு, சோளப்பாடி ஆகிய ஊர்களுக்கு புதிய பகுதி நேர நியாய விலைக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட செல்லமுடி நியாயவிலைக் கடையிலிருந்து குடும்ப அட்டைகளைப் பிரித்து நரசிமேடு மற்றும் சோளப்பாடி ஆகிய கிராமங்களில் முறையே 65 மற்றும் 164 குடும்ப அட்டைகளுடன் பகுதி நேரக் கடைகள் தொடங்கிட தருமபுரி கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளருக்கு தருமபுரி மாவட்ட வழங்கல் அலுவலரால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

82—

### பகுதி நேர நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா 20584—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட வேலாம்பட்டியிலிருந்து பிரித்து சிட்டலகாரம்பட்டிக்குப் புதிய பகுதி நேர நியாய விலைக்கடை அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட வேலாம்பட்டியிலிருந்து சிட்டலகாரம்பட்டிக்குப் புதிய பகுதிநேரக் கடை தொடங்கிட தருமபுரி மாவட்ட வழங்கு அலுவலர் அலுவலக மூ.மு.7870/98, நாள் 13-5-1998-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

83—

### மண்ணெண்ணெய் விநியோகம் அதிகப்படுத்துதல்

**வினா 20690—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நியாய விலைக் கடை மூலம் கிராமப் புறங்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெய் விநியோகத்தை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இதற்கான கருத்துரு எதுவும் அரசிடம் தற்போது பரிசீலனையில் இல்லை.



84—

### நியாயவிலைக் கடை ஏற்படுத்துதல்

**வினா 20733—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் ஒவ்வொரு குக்கிராமங்களுக்கும் நியாய விலைக்கடை (பகுதி நேரப் பிரிவு) ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பகுதி நேர நியாய விலைக்கடைகள் திறக்கலாம் என்றும் இந்த நிபந்தனைகள் பூர்த்தியாகாத பட்சத்தில் அரசின் முன் அனுமதியைப்பெற்று பகுதி நேரக்கடைகள் திறக்கலாம் என்றும் அரசு, ஆணைகள் வெளியிட்டுள்ளது.

1. இரண்டு நியாய விலைக்கடைகளுக்கும் இடையே உள்ள தூரம் குறைந்தது 2 கிலோ மீட்டர் இருக்க வேண்டும்.

2. பகுதி நேர அங்காடி அமைவதற்கு வாடகை இல்லாமல் இலவசமாகக் கட்டட வசதி செய்து தரப்பட வேண்டும்.

3. தாய் அங்காடியின் விற்பனையாளரே பகுதி நேர நியாய விலைக்கடையையும் வாரத்தில் குறைந்தது மூன்று நாட்களாவது கவனித்துக் கொள்ள வேண்டும்.

4. பகுதி நேரக் கடைகளுக்கு அரசு மானியம் எதுவும் வழங்காது.

5. பகுதி நேர கடையில் குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகளாவது இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

6. பகுதி நேர நியாய விலைக்கடையை நடத்தும் கூட்டுறவு சங்கம் எந்தவிதமான செலவினத்தையும் பகுதி நேர நியாய விலைக்கடை நடத்துவதற்காகக் கோரக்கூடாது.

[1999 பிப்ரவரி 24

85—

### அங்காடிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா 20786—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காணூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்காணூர்பட்டி கிராம அங்காடி, குருங்குளம் மேல்பாதி கிராம அங்காடி, குருங்குளம் கீழ்பாதி அங்காடி ஆகிய மூன்று அங்காடிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருக்காணூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் திருக்காணூர் பட்டி கிராம அங்காடிக்கு 1997-98 ஆம் ஆண்டு வேலை உறுதி அளிப்புத் திட்டத்தில் திருக்காணூர் பட்டி கிராமத்திலே ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டில் பொது விநியோக மையம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. ஏனைய இடங்களான குருங்குளம் மேல்பாதி, குருங்குளம் கீழ்பாதி ஆகிய கிராமங்களில் நடப்பு ஆண்டில் பொது விநியோகக் கட்டடம் கட்ட செயல் திட்டம் ஏதும் இல்லை.

86—

### மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் விவரம்

**வினா 20794—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் புதியதாக எத்தனை மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன?



1999 பிப்ரவரி 24]

(ஆ) எடப்பாடி தொகுதியில் எத்தனை மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் புதியதாகத் திறக்கப்படவுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (நிலை) எண் 125, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 6-5-1997-ன்படி 20 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதில் சேலம் மாவட்டத்தில் (1) சேலம் மாவட்டம் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, சத்திரம், (2) சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், பள்ளப்பட்டி ஆகிய இரு இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

இது தவிர முதற்கட்டமாக 1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 100 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் திறக்க திட்டமிடப்பட்டு இதில் சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட ஆறு இடங்களில் கட்டுமானப் பணி முடிவுற்று தொடங்கப்பட தயார் நிலையில் உள்ளது. மற்றும் 2 இடங்களில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

கட்டுமானப் பணி முடிவுற்று தொடங்கப்பட தயார் நிலையிலுள்ள சங்கங்கள்:

1. கொண்டாலம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.
2. நரசிங்கபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.
3. வாழப்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.
4. காரிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.
5. கருப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.
6. பெத்தநாயக்கன்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.

221069.

[1999 பிப்ரவரி 24

கட்டுமானப் பணி நடைபெற்று வருபவை:

1. ஆவணிப்பேரூர் மேல்முகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.

2. ஆறகளூர் மேல்முகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.

இது தவிர இரண்டாம் கட்டமாக 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 200 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை மாநிலம் முழுவதும் 109 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் சேலம் மாவட்டத்தில் கீழ்க்கண்ட ஏழு இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

(1) வெள்ளாளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.

(2) பாகாலப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.

(3) ஓமலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.

(4) அம்மாப்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.

(5) ஜாகீர் அம்மாப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.

(6) உடையாப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி.

(7) மேட்டூர் அரசு ஊழியர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை.

(ஆ) எடப்பாடி தொகுதியில் இரண்டாம் கட்ட நிலையில் 1998-99 ஆம் ஆண்டிற்கு ஆவணிப்பேரூர் மேல்முகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் எடப்பாடி நகராட்சியில் ஒரு மண்ணெண்ணெய் வழங்கு நிலையக் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

**87—**

### கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

**வினா 20803—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 24]

(அ) திருப்பூர் நகரில் கூட்டுறவுத் துணைப் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகரில் கூட்டுறவுச் சங்க துணைப் பதிவாளர் அலுவலகம் அமைப்பது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. தக்க தருணத்தில் நிதி நிலைமை மற்றும் நிர்வாக வசதிகளைக் கருத்தில் கொண்டு, விரிவான பரிசீலனை செய்த பின்னரே முடிவெடுக்க இயலும்.

**88—**

### குடிசைமாற்று வாரியம் மூலம் விடுகள் கட்டித் தருதல்

**வினா 21131—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், இடங்கணசாலை பேரூராட்சிப் பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**89—**

### தனியார் சட்டக் கல்லூரிகள்

**வினா 19980—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் சட்டக் கல்லூரிகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவை யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் ஒரேயொரு தனியார் சட்டக் கல்லூரி மட்டும் உள்ளது.

(ஆ) சென்ட்ரல் சட்டக் கல்லூரி, சேலம்.

**90—**

**பிற்படுத்தப்பட்ட மாணவியர்க்கு அரசு விடுதி**

**வினா 20676—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தாலுகா, எடப்பாடி நகரில் 1,800 மாணவர்கள் உடைய மேல்நிலைப் பள்ளி உள்ளதால், அங்கு பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவியர்களுக்கான அரசு விடுதி ஒன்று கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அறிவிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தாலுகா, எடப்பாடி நகரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**91—**

**விவசாயிகளுக்கே நிலம் ஒதுக்குதல்**

**வினா 17302—திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதியில் கரிக்கிலி கிராமத்தில், வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் விவசாயம் செய்துவரும் விவசாயிகளுக்கே அவற்றை ஒதுக்கித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதியில் கரிக்கிலி கிராமத்தில் வனத் துறைக்குச் சொந்தமான நிலம் கரிக்கிலி சரணாலயப் பகுதியாக அறிவிக்கப்பட்ட நிலமாகும். மேற்படி இடத்தில் எந்தவிதமான நில ஆக்கிரமிப்போ, விவசாயமோ நடைபெறவில்லை. மேலும் வனச்சரணாலயத்தைச் சேர்ந்த வனப் பகுதியை வனமில்லா பிற பணிகளுக்கு மத்திய அரசின் ஒப்புதல் இன்றி ஒதுக்கித்தர இயலாது.

**92—**

**கழிவுநீரை சுத்திகரிக்க ஆலைகளில் தொழில்நுட்பங்கள்**

**வினா 18168—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்திகரிக்கத் தேவையான தொழில் நுட்பங்களை அந்த ஆலைகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஜவ்வரிசி ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்திகரிக்கத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வழங்கி வருகிறது.

(ஆ) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஜவ்வரிசி தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் செயல்முறைக் கழிவு நீரை சுத்திகரிப்பதற்கான வழிமுறைகளை 1989-90 ஆம் வருடத்தில்

கையேடுகளாக அச்சடித்து விநியோகம் செய்து விளக்கியதுடன் 1992-93 ஆம் ஆண்டு ஒரு மாதிரிக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து இயக்கியும், தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கியும் வந்துள்ளது. 3-10-1998 நாளிட்ட செய்தித்தாளில் அனைத்து ஜவ்வரிசி/ஸ்டார்ச் உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள் 1998-99 ஆம் வருட அரைவைப் பருவம் தொடங்குவதற்கு முன்னதாகவே வாரியம் நிர்ணயித்துள்ள தரத்திற்கு செயல்முறை-கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து வெளியேற்ற வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாரியம் விளம்பரம் செய்துள்ளது.

**93—**

**சுற்றுப்புறச் சூழல் குறித்த விளம்பரம்**

**வினா 19122—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மக்களாலும் பல்வேறு தொழிற்சாலைகளாலும் சுற்றுச் சூழல் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகிறது என்பதை உணர்த்த, விளம்பரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

பொது மக்களிடையே சுற்றுச் சூழலின் முக்கியத்துவத்தை விளக்குவதற்காகவும், மற்றும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்காகவும், தமிழக அரசு, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலமாகவும், சுற்றுச் சூழல் துறை இயக்குநர் மூலமாகவும் கருத்தரங்குகள் நடத்துவதன் மூலமாகவும் வாரியம் அமைத்துள்ள நிரந்தரமான அரங்கில் நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலமாகவும், ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டும், செய்தித்தாள்களில் விளம்பரம் செய்வதன் மூலமும், பல வழிகளில் சுற்றுச் சூழலுக்கு மக்களின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு தொழிற்சாலைகளின் செயல்பாட்டினாலும் எவ்வாறு பாதிப்பு ஏற்படுகிறது என்பதை விளக்கி வருகிறது. இது தொடர்பாக, தக்க விளம்பரமும் செய்யப்படுகிறது.



**94—**

**காய்ந்த மரங்கள் ஏலம்**

**வினா 19966—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுக்குச் சொந்தமான காடுகளிலுள்ள காய்ந்த மரங்களை வெட்ட தனியாருக்கு குத்தகைக்கு விடுவதைத் தவிர்த்து அரசே காய்ந்த மரங்களை நேரடியாகக் கையகப்படுத்த முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

அரசுக்குச் சொந்தமான காடுகளில் உள்ள காய்ந்த மரங்களை வெட்ட தனியாருக்கு குத்தகைக்கு விடப்படுவதில்லை. தேக்கு, ஈட்டி, தோதகத்தி போன்ற விலையுயர்ந்த மரங்கள் காய்ந்து போனால், மேற்படி மரங்களைக் கணக்கெடுத்து வெட்டி வனத் துறை மரமண்டிக்குக் கொண்டு வந்து, அதனை ஏலத்தில் விட்டு, அதன் மூலம் கிடைக்கும் வருவாய் அரசுக் கணக்கில் கொண்டு வரப்படுகிறது. மற்ற வகை காய்ந்த மரங்கள் அப்புறப்படுத்தப்படாமல் அப்படியே விடப்பட்டு மேற்படி மரங்கள் மக்கி உரமாவதுடன் சமச்சீர் நிலையைப் பாதுகாக்கவும் பயன்படுகிறது.

**95—**

**கால்நடை மருத்துவமனைக்குக் கட்டட வசதி**

**வினா 14611—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கால்நடைப் பாரமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகரிலுள்ள கால்நடை மருத்துவமனை போதிய கட்டட வசதி இல்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது போதிய கட்டட வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இம்மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டு, வருங்காலத்தில் இம்மருத்துவமனையினை விரிவுபடுத்தி தேவையான கூடுதல் கட்டட வசதிகளை ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

**96—**

**கண் பார்வையற்றோருக்கு அரசுப் பணிகளில் ஒதுக்கீடு**

**வினா 7899—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் பணிகளில் கண் பார்வையற்றோருக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

அரசுப் பணிகளில் கண் பார்வையற்றோருக்கு அரசு ஆணை என் 99, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 26-2-1988-ல் ஒரு சதவீதம் இட ஒதுக்கீடு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மற்றும் ஆசிரியப் பணியிடங்களைப் பொறுத்தவரையில் பார்வையற்றோருக்கு இரண்டு (2%) சதவீதப் பணியிடங்களை ஒதுக்கி அரசு ஆணை என் 619, கல்வித் துறை, நாள் 23-6-1993-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டில் அரசுப் பணியில் அமர்த்தப்பட்ட பார்வையற்றோர் எண்ணிக்கை (வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம்)—19 நபர்கள்.



1996-97 ஆம் ஆண்டில் ஆசிரியர் பணியிடங்களில் அமர்த்தப்பட்ட பார்வையற்றோர் பற்றிய விவரம்:—

| | | |
|---|---|---|
| 1. மொழிப் பண்டிதர் | .. | 1 |
| 2. பட்டதாரி ஆசிரியர் | .. | 5 |
| 3. முதுநிலை ஆசிரியர் | .. | 1 |
| 4. கல்லூரி விரிவுரையாளர் (ஆசிரியர் தேர்வாணையம் மூலம்) | .. | 5 |
| மொத்தம் | .. | 12 |

1997-98-ல் ஆசிரியர் பணியிடங்களில் அமர்த்தப்பட்ட பார்வையற்றோர் பற்றிய விவரம்:—

| | | |
|---|---|---|
| 1. மொழிப் பண்டிதர் | .. | 3 |
| 2. முதுநிலை ஆசிரியர் | .. | 1 |
| 3. கல்லூரி விரிவுரையாளர் | .. | 2 |
| மொத்தம் | .. | 6 |

**97—**

**மூன்று சக்கர சைக்கிள் வழங்குதல்**

**வினா 10328—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் 1996-97-ல் ஊனமுற்றவர்கள் எத்தனை பேருக்கு மூன்று சக்கர சைக்கிள் கொடுக்கப்பட்டது?

(ஆ) பவானி தொகுதியில் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் 1996-97-ல் ஊனமுற்றவர்கள் 75 பேர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

[1999 பிப்ரவரி 24

(ஆ) பவானி தொகுதியில் 22 (இருபத்தி இரண்டு) பேருக்கு மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

**98—**

**ஊனமுற்றோர், ஆதரவற்றோர் மறுவாழ்வு இல்லங்கள்**

**வினா 19123—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் ஊனமுற்றோர், ஆதரவற்றோர் மறுவாழ்வு இல்லங்கள் திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளியும் காது கேளாதோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளியும் ஏற்கெனவே தருமபுரி மாவட்டத்தில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்கீழ் இயங்குவதுடன், தொண்டு நிறுவனங்கள்கீழ் இயங்கும் பள்ளிகளின் விவரம் கீழே வருமாறு:—

1. அரசு மானியத்துடன் இயங்கும் சிறப்புப் பள்ளிகள்—

(அ) ஐ.இ.எல்.சி. பார்வையற்றோர் பள்ளி, பர்கூர்.

(ஆ) மான்ஸ் மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி, பர்கூர்.

(இ) சுவாமி விவேகானந்தா உடல் ஊனமுற்றோர் பள்ளி, கடத்தூர்.

(ஈ) தூயவளவனார் உடல் ஊனமுற்றோர் பள்ளி, சோகத்தூர் கூட் ரோடு, தருமபுரி.

(உ) தூய மரியாள் காது கேளாதோர் பள்ளி, கூட் ரோடு, சோகத்தூர்.



1999 பிப்ரவரி 24]

2. சுயநிதியுடன் இயங்கும் சிறப்புப் பள்ளிகள்:—

(அ) அதியமான் காது கேளாதோருக்கான பள்ளி, அண்ணா நகர், அரூர்.

(ஆ) ஸ்ரீ விவேகானந்தா காது கேளாதோர் பள்ளி, 5/288-டி, ஸ்ரீராம் காலனி, தருமபுரி-1.

3. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் சுயநிதியுடன் நடத்தப்படும் தொழிற்பயிற்சி மையங்கள்:—

(அ) ஷோபா பார்வையற்றோருக்கான தொழிற் பயிற்சி மையம், நாசரேத், சோகத்தூர் கிராஸ் ரோடு, தருமபுரி-636 703.

(ஆ) சமாரிட்டன் அசோசியேஷன், 20-பி, எஞ்சினியர் இல்லம், நாட்டாமைபுரம், தருமபுரி-636 702.

எனவே புதிதாக மறுவாழ்வு இல்லங்கள் தொடங்குவது தொடர்பாக கோரிக்கை ஏதும் அரசால் பெறப்படவில்லை. ஆதலால் தற்சமயம் இதற்காக அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**99—**

**வாய் பேச முடியாத மற்றும் காது கேளாதோருக்கான பள்ளிக்கூடம்**

**வினா 19826—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வாய் பேச முடியாத மற்றும் காது கேளாதோர்களுக்கான பள்ளிக்கூடங்கள் எத்தனை?

(ஆ) அதில் எவ்வளவு மாணவர்கள் படிக்கிறார்கள்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் வாய் பேச முடியாத மற்றும் காது கேளாதோருக்கென 45 (நாற்பத்து ஐந்து) பள்ளிக் கூடங்கள் உள்ளன.

(ஆ) இப்பள்ளிக் கூடங்களில் 5,516 (ஐயாயிரத்து ஐநூற்றுப் பதினாறு) மாணவர்கள் பயில்கின்றனர்.

100—

## காது கேளாதோர் பள்ளிக்குக் கட்டடம்

**வினா 19839—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அரசுக் கட்டடத்தில் இயங்காத காது கேளாதோர்களுக்கான பள்ளிகள் எத்தனை?

(ஆ) அவற்றிற்கு அரசுக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் காது கேளாதோருக்கான அரசுப் பள்ளிகள் பத்தாகும். அவற்றில், தருமபுரி, ஈரோடு, ஊட்டி, தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய ஐந்து இடங்களில் காது கேளாதோருக்கான அரசுப் பள்ளிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. காஞ்சிபுரம், கடலூர், சேலம், புதுக்கோட்டை, சென்னை (தாம்பரம்) ஆகிய ஐந்து இடங்களில் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன.

(ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அரசு காது கேளாதோர் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



# மூன்றாம் பட்டியல்

1—

## மகளிர் காவல் நிலையம்

**வினா 18081—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயத்தில் இயங்கி வந்த மகளிர் காவல் நிலையம் மாற்றப்பட்டதை. மீண்டும் காங்கேயத்திலேயே இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) காங்கேயத்தில் புதிதாக ஓர் அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) காவல் நிலையம் இயங்குவதற்கு தொடர் மற்றும் தொடராச் செலவினங்கள் வழங்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதற்கான ஒப்பளிப்பு வழங்கப்பட்டு எல்லை நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டபின் அனைத்து மகளிர் காவல் நிலையம் இயங்கத் தொடங்கும்.

2—

## பெண் காவலர்களை நியமித்தல்

**வினா 19679—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி காவல் நிலையத்தில் பெண் காவலர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. எனவே எடப்பாடி காவல்

நிலையத்தில் பெண் காவலர்களை நியமனம் செய்ய அவசியம் எழவில்லை எனக் கருதப்படுகிறது.

3—

**தொடக்கப்பள்ளி தொடங்குதல்**

**வினா 11206—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வெட்டிக்காடு ஊராட்சி ஒன்றியம், இலுப்பைவிடுதி கிராமத்தில் ஒரு தொடக்கப்பள்ளி தொடங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1-8-1997 முதல் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது.

4—

**புத்தகம் படிக்கும் உணர்வை ஊக்குவித்தல்**

**வினா 11888—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிற நிலையில், புத்தகம் படிக்கிற பழக்கம் குறைந்து வருவதை மாநில அரசு அறியுமா?

(ஆ) புத்தகம் படிக்கும் உணர்வை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) படித்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிற நிலையில், புத்தகம் படிக்கிற பழக்கம் குறையாமல், அதிகரித்தே வருகிறது.



(ஆ) புத்தகம் படிக்கும் உணர்வை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகங்களிலும், "வாசகர் வட்டம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் புத்தகம் படிக்கும் உணர்வு பொது மக்களிடம் ஏற்படுத்தப்படுகிறது. மேலும் அரசு, பொது நூலகங்களுக்குப் புதிய நூல்கள் வாங்க ஆண்டுதோறும். சுமார் ரூ. 2.00 கோடி அளவில் தொகை ஒதுக்கீடு செய்து புதிய நூல்கள் வாங்கப்பட்டு வருகின்றன.

மேலும், படித்த இளைஞர்கள் துறைத் தேர்வுகள் எழுதுவதற்கு ஏதுவாக, மாவட்ட மைய நூலகங்களில் குடிமைப் பணி பயிற்சி மையம் ஏற்படுத்தப்பட்டு இதற்கு சுமார் ரூ. 2.00 இலட்சம் செலவில், நூல்கள் வாங்கி வழங்கப்படுகின்றன. இது தவிர்த்து நூலகத்தில் மாதந்தோறும் நூல் அறிமுக விழா நடத்தப்பட்டு, அதன் மூலம் படிக்கும் பழக்கத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் "நூலக வார விழா" நடத்தப்பட்டு அதன் மூலம் நூலகத்தில் பெறப்படும் புதிய நூல்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி படிக்கும் பழக்கத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் "நூலக வார விழா" நவம்பர் திங்களில் நடத்தப்படுகிறது. அப்போது கவியரங்கம், கருத்தரங்கம் நடத்தி அதன் மூலமும் மக்களின் படிப்பார்வத்தை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதைத் தவிர நூலகங்களில் புரவலர்களாகச் சேருபவர்களிடம் ரூ.1,000 வீதம் நன்கொடையாகப் பெறப்பட்டு இத்தொகை வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையில் நாளிதழ் மற்றும் பருவ இதழ்கள் வாங்கி வாசகர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்படுகிறது. மேலும் கல்வி நிறுவனங்கள் மூலம் மாணவர்கள் நிறுவன உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு படிக்கும் பழக்கம் அவர்களிடையே ஊக்குவிக்கப்படுகிறது.

5—

**மேல்நிலைத் தொட்டி கட்டுதல்**

**வினா 13657—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

[1999 பிப்ரவரி 24

(ஆ) ஆம் எனில், ஆழ்துளைக் கிணறு அமைத்து ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நகராட்சி பொது விநியோகக் குழாய் மூலம் பூமிக்கடியில் உள்ள தொட்டிகளில் சேமிக்கப்பட்டு, பின் மின்சார பம்புசெட் குழாய் மூலம் மேல்நிலைத் தொட்டிக்கு அனுப்பப்பட்டு, குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் மாணவர்களுக்கு நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கோடைக் காலத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு இல்லாமல் ஒரு ஆழ்துளை குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6—

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடம் ஏற்படுத்துதல்

**வினா 14667—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காடையாம்பட்டி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சியில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அனைத்து மாவட்டங்களிலும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளதால், புதிதாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தும் திட்டம் தற்போது இல்லை.

7—

## பொறியியற் கல்லூரி திறத்தல்

**வினா 15514—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 24]

விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் பொறியியற் கல்லூரி திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்கெனவே 5 சுயநிதி பொறியியற் கல்லூரிகளும், 5 சுயநிதி பாலிடெக்னிக்குகளும் இயங்கி வருகின்றன. எனவே இம்மாவட்டத்தில் அரசு பொறியியற் கல்லூரி திறக்கும் உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லை.

8—

## அரசு பாலிடெக்னிக் தொடங்குதல்

**வினா 15516—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் அரசு பாலிடெக்னிக் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9—

## இடைநிலை ஆசிரியை பயிற்சிப் பள்ளி ஏற்படுத்துதல்

**வினா 17695—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் ஓர் இடைநிலை ஆசிரியை பயிற்சிப் பள்ளி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[1999 பிப்ரவரி 24

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இல்லை.

10—

**தலைமை நூலகம், கிளை நூலகங்கள் விவரம்**

**வினா 19199—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை தலைமை நூலகம், கிளை நூலகங்கள் செயல்படுகின்றன?

(ஆ) தமிழக அரசால் 1996 முதல் 1998 வரையில் வாங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் பொது நூலகத் துறையின் கீழ் மொத்தம் 2,741 நூலகங்கள் பல்வேறு தரத்தில் கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகின்றன:

| | | | |
|---|---|---|---|
| 1. | மாநில மைய நூலகம் (கன்னிமாரா பொது நூலகம்) | .. | 1 |
| 2. | மாவட்ட மைய நூலகம் | .. | 29 |
| 3. | கிளை நூலகங்கள் | .. | 1,548 |
| 4. | இயங்கு நூலகங்கள் | .. | 8 |
| 5. | ஊர்ப்புற நூலகங்கள் | .. | 506 |
| 6. | பகுதிநேர நூலகங்கள் | .. | 649 |
| | மொத்தம் | .. | 2,741 |

(ஆ) அரசால் 1996 முதல் 1998 வரையில் நூலக ஆணைக் குழு நிதியிலிருந்து வாங்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

**1996-97 ஆம் ஆண்டு:**

| | | |
|---|---|---|
| தமிழ் | .. | 1,860 தலைப்புகள் |
| ஆங்கிலம் | .. | 630 தலைப்புகள் |



1999 பிப்ரவரி 24]

**1997-98 ஆம் ஆண்டு:**

| | | |
|---|---|---|
| தமிழ் | .. | 1,986 தலைப்புகள் |
| ஆங்கிலம் | .. | 437 தலைப்புகள் |

**1998-99 ஆம் ஆண்டு:**

| | | |
|---|---|---|
| தமிழ் | .. | 1,734 தலைப்புகள் |
| ஆங்கிலம் | .. | 661 தலைப்புகள் |

11—

**கல்வி உதவித் தொகை வழங்குதல்**

**வினா 20760—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் படைவீரர் பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விவரம் இணைக்கப்பட்டுள்ளது.

**இணைப்பு**

**அரசின் மூலம் வழங்கப்படும் உதவிகள்:**

| | | |
|---|---|---|
| வருமான வரம்பு | .. | முன்னாள் படைவீரர் விதவை ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| வகுப்பு 8 முதல் 11-ம் வகுப்பு வரை | .. | பயிற்சிக் கட்டணம் மற்றும் தனிக் கட்டணம், புத்தகப் படி ரூ.25 ஆண்டொன்றுக்கு. விடுதிக் கட்டணம் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.30 வீதம். |

[1999 பிப்ரவரி 24

| | |
|---|---|
| புகுமுக வகுப்பு | .. 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்<br>2. புத்தகப் படி ரூ. 85.<br>3. விடுதி, கட்டணம் ரூ.40, பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |
| இளங்கலை பட்டம் பி.ஏ., பி.எஸ் ஸி. | 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்<br>2. புத்தகப் படி ரூ.215, முழுப் படிப்பிற்கும்.<br>3. விடுதிக் கட்டணம் ரூ. 40, பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |
| பட்ட மேற்படிப்பு, எம்.எஸ்ஸி., எம்.ஏ. அல்லது எம்.காம். | .. 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்<br>2. புத்தகப் படி ரூ.500, முழுப் படிப்பிற்கும்<br>3. விடுதிக் கட்டணம் ரூ.40, பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |
| தொழில்நுட்பக் கல்வி தொழிற்கல்வி (Diploma Course) | .. 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்<br>2. புத்தகப் படி ரூ.180, முழுப் படிப்பிற்கும்.<br>3. விடுதிக் கட்டணம் ரூ.40, பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |
| விவசாயம் (B.Sc.) | .. 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்.<br>2. புத்தகப் படி ரூ.650, முழுப் படிப்பிற்கும்<br>3. விடுதிக் கட்டணம் ரூ.40, பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |
| பொறியியல் (Engineering) | .. 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்.<br>2. புத்தகப் படி ரூ.550, முழுப் படிப்பிற்கும்<br>3. விடுதிக் கட்டணம் ரூ.40, பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |
| மருத்துவம் (Medical) | .. 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்.<br>2. புத்தகப் படி ரூ.1,081, எம்.பி.பி.எஸ்-க்கு ரூ.1,087, பி.டி.எஸ்.-க்கு ரூ.487 பி. பார்மஸிக்கு.<br>3. விடுதிக் கட்டணம் ரூ.40, பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |



1999 பிப்ரவரி 24]

| | |
|---|---|
| சட்டம் (Law) | .. 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்<br>2. புத்தகப் படி ரூ.51 எம்.எல்.-க்கு, ரூ.73 பி.எல்-க்கு.<br>3. விடுதிக் கட்டணம் ரூ.40 பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |
| ஆசிரியர் பயிற்சி (Teachers Training) | .. 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்.<br>2. விடுதிக் கட்டணம் ரூ.40, பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |
| கால்நடை அறிவியல் (Veterinary) | .. 1. பயிற்சி மற்றும் தனிக் கட்டணம்<br>2. புத்தகப் படி ரூ.1,000 முழுப் படிப்பிற்கும்<br>3. விடுதிக் கட்டணம் ரூ. 40, பிரதி மாதம் 10 மாதங்களுக்கு. |

2. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து புத்தகப்படி முன்னாள் படைவீரர்/விதவைகளின் ஆண்டு வருமானம் ரூ.50,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

| | | ஒரு வருடத்திற்கு (ரூபாய்) |
|---|---|---|
| 1. 1ஆம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை | .. | 100 |
| 2. 6ஆம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை | .. | 150 |
| 3. 9 மற்றும் 10ம் வகுப்பிற்கு | .. | 200 |
| 4. மேல்நிலைப் பள்ளி வகுப்பிற்கு | .. | 300 |
| 5. இளநிலை பட்டப் படிப்பிற்கு | .. | 400 |
| 6. முதுநிலைப் பட்டப் படிப்பிற்கு | .. | 500 |

3. தொகுப்பு நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை முன்னாள் படைவீரர்/விதவைகளின் ஆண்டு வருமானம் ரூ.42,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தொழிற்கல்வி தொழில்நுட்பக் கல்வி, வாழ்க்கைத் தொழில் கல்வி (Technical, Professional and Vocational Course)

1. அரசுக் கல்லூரிகளில்/நிறுவனங்களில் வசூலிக்கப்படும் படிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம்.
2. பல்கலைக்கழகங்கள்/தேர்வுக் குழுவினால் வசூலிக்கப்படும் தேர்வுக் கட்டணம்.

[1999 பிப்ரவரி 24

3. விடுதியில் தங்கிப் பயில்வோர்க்கு மாதம் ரூ.200 வீதம் ஓராண்டில் 10 மாதங்களுக்கு மட்டும் விடுதிக் கட்டணம்.

4. புத்தகப் படியாக ஆண்டிற்கு ரூ.300 வீதம்.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்:

1. முன்னாள் படை வீரர்களுக்கு மாதம் ரூ.250.

2. முன்னாள் படை வீரர்களைச் சார்ந்தோருக்கு மாதம் ரூ.25-ம், புத்தகப் படியாக ஆண்டுக்கு ரூ.15-ம்.

| | |
|---|---|
| தட்டச்சு/சுருக்கெழுத்து | .. ஒவ்வொரு பயிற்சிக்கும் தலா ரூ.240 ஒரே சமயத்தில் இரண்டு பயிற்சிகளுக்கு மட்டும். |
| ஆசிரியர், புலவர், பண்டிதர் பயிற்சிகள் | .. ரூ.500 ஒரு வருடத்திற்கு. |
| கூட்டுறவுப் பயிற்சி | .. மாதம் ரூ.25 வீதம். |
| மோட்டார் வாகனம் ஓட்டுநர் பயிற்சி | |
| முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்களுக்கு— | |
| இலகு வாகன ஓட்டுநர் | .. முழுப் பயிற்சிக்கும் ரூ.1,250 |
| கனரக வாகன ஓட்டுநர் | .. முழுப் பயிற்சிக்கும் ரூ.1,500 |
| இரண்டுச் சக்கர வாகன ஓட்டுநர் | |
| முன்னாள் படைவீரர் | .. முழு பயிற்சிக்கும் ரூ.25. |
| சார்ந்தோர் | .. முழுப் பயிற்சிக்கும் ரூ.150 |
| கணிப்பொறி பயிற்சி | .. ஒவ்வொரு கணிப்பொறி மொழி பயிற்சிக்கும் தலா ரூ.1,200 |

அஞ்சல் வழிக் கல்வி மற்றும் மாலை நேரக் கல்லூரிகள் மூலம் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு முன்னாள் படை வீரர் மற்றும் அவரது விதவையர்களுக்கு மட்டும்.



1999 பிப்ரவரி 24]

அரசுக் கல்லூரி அரசு நிறுவனங்களில் வசூலிக்கப்படும் அளவிற்கு

1. படிப்புக் கட்டணம்
2. சிறப்புக் கட்டணம்

பல்கலைக்கழகங்கள் தேர்வுக் குழுக்களால் வசூலிக்கப்படும்

3. தேர்வுக் கட்டணம்
4. விடுதிக் கட்டணம்
(தங்கிப் பயில்வோருக்கு மாதம் ரூ.200 வீதம் ஓர் ஆண்டில் 10 மாதங்களுக்கு)
5. மாலை நேர வகுப்புகளில் பயில்வோருக்கு மட்டும் புத்தகப் படியாக ஆண்டிற்கு ரூ.300 மட்டும்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியும், தொகுப்பு நிதியும் முன்னாள் படைவீரர் நல இயக்கத்தால் பேணப்பட்டு வரும் அறக்கட்டளை நிதிகளாகும்.

12—

## தொழில் கல்லூரிகளில் கிராமப்புறப் பள்ளி மாணவர்கள்

**வினா 20775—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் கிராமப்புறப் பள்ளி மாணவர்களுக்குத் தொழில் கல்லூரிகளில் ஒதுக்கப்படும் 15 சதவீதத்தில் எவ்வளவு மாணவர்கள் பயன் அடைகிறார்கள்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் கிராமப்புற மாணவர்களுக்கான தொழிற் கல்வி கல்லூரிகளுக்கான 15 சதவீத இட ஒதுக்கீட்டின்கீழ் இவ்வாண்டில் 13 பேர் பயன் அடைந்துள்ளனர்.

13—

## துணை சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 14894—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மற்றும் ஒன்றியத்தைச் சேர்ந்த ஆடையூர், பக்கநாடு ஆகிய இரண்டு ஊராட்சிகளில் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

**(1) (அ)** மற்றும் **(ஆ)** ஆடையூர் கிராமம்: சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மற்றும் ஒன்றியத்தைச் சார்ந்த ஆடையூர் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்தத் துணை சுகாதார நிலையத்தில் 9 கிராமங்களைச் சேர்ந்த 4,088 மக்கள் தொகைக்கும் கிராம சுகாதார செவிலியர், தாய் சேய் நலம், தடுப்பு மருந்து மற்றும் மருத்துவப் பணியாற்றி வருகிறார்.

**(2)** பக்கநாடு கிராமம்: பக்கநாடு கிராமம், வேப்பமரத்தூர் துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய ஒரு கிராமம் ஆகும். பக்கநாடு கிராம மக்கள் தொகை 957. வேப்பமரத்தூர் துணை சுகாதார நிலையத்தில் மொத்தம் 11 கிராமங்கள் உள்ளன. இந்த துணை சுகாதார நிலையத்தில் 4,913 மக்கள் தொகைக்கும் கிராம சுகாதார செவிலியர், தாய் சேய் நலம், தடுப்பு மருந்து மற்றும் மருத்துவப் பணியாற்றி வருகிறார். ஆகவே ஆடையூர், பக்கநாடு ஆகிய இரண்டு கிராமங்களை உள்ளடக்கி தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**14—**

### மருத்துவக் கல்லூரிகளில் வெளிநாட்டினருக்கு இட ஒதுக்கீடு

**வினா 16714—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மருத்துவக் கல்லூரிகளில் வெளிநாட்டினருக்கு (NRI) அதிகக் கட்டணத்தில் இட ஒதுக்கீடு செய்யும் முறை நிறுத்தப்பட்டுள்ளதை மீண்டும் தொடர்ந்திட அரசு முன்வருமா?





விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இது தொடர்பாக கருத்துரு ஒன்றும் அரசின் ஆய்வில் இல்லை.

**15—**

### துணை சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 16718—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எட்டிக்கோட்டைமேட்டில் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எட்டிக்கோட்டைமேடு கிராமம் பள்ளிப்பட்டி துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய கிராமம் ஆகும். பள்ளிப்பட்டி துணை சுகாதார நிலையத்தின் மக்கள் தொகை 4,822 ஆகும். மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற வரையறையின்படி பள்ளிப்பட்டியில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதால் எட்டிக்கோட்டைமேடு கிராமத்தில் தனியாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

16—

## துணை சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா 16723—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்ணந்தேரியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்ணந்தேரியில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இச்சுகாதார நிலையத்தின்கீழ் 12 கிராமங்கள் அடங்கிய மொத்த மக்கள் தொகைக்கும் (5122) கிராம சுகாதார செவிலியர், தாய் சேய் நலம், தடுப்பு மருந்து மற்றும் மருத்துவப் பணியாற்றி வருவதால் மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்ணந்தேரி கிராமத்தில் மீண்டும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

17—

## மருத்துவமனையில் படுக்கை வசதிகள் உயர்த்துதல்

**வினா 18720—திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*வட்ட மருத்துவமனையான தாராபுரம் நகர மருத்துவமனையில் 99 படுக்கை வசதிகளே உள்ளதால் அதனை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



தாராபுரம் அரசு மருத்துவ மனையின் தேவைக்கேற்பவும் மற்றும் அரசின் நிதி நிலையைக் கருத்திற்கொண்டும் மேற்கண்ட அரசு மருத்துவமனையின் படுக்கை வசதிகளை உயர்த்துவது குறித்து அரசு கருத்திற்கொள்ளும்.

18—

## சுகாதார மையம் அமைத்தல்

**வினா 18748—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், பம்மதுகுளம் ஊராட்சியில் அடங்கிய அனைத்து கிராமங்களுக்கும் ஒரு சுகாதார மையம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள்நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், பம்மதுகுளம் ஊராட்சி மக்கள் தொகை 6,675 ஆகும். பம்மதுகுளம் கிராமம், வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. பம்மதுகுளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், 4 கிலோ மீட்டர் தொலைவில் பாடியநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் நாரவாரிகுப்பம் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் கொள்ளுமேடு ஆரம்ப சுகாதார நிலையமும், 13 கிலோ மீட்டர் தொலைவில் ஆவடி அரசு மருத்துவமனையும் செயல்படுவதால், பம்மதுகுளம் ஊராட்சியில் கூடுதலாக சுகா்தார மையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

19—

## எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைத்தல்

**வினா 19614—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 24

எடப்பாடி தொகுதி, கடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், கடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகும். எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு ஆரம்ப சுகாதார நிலைய அளவில் அமைக்கப்படுவதில்லை. மாவட்ட அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவ மனைகள் அளவில்தான் அமைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து நோய்களுக்கும் முதலுதவி அளிக்கப்பட்டு பின்னர் சம்பந்தப்பட்ட வட்டார மருத்துவமனை/மாவட்ட அரசு மருத்துவமனை/மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் மேல்சிகிச்சைக்காக அனுப்பப்படுகிறார்கள். எனவே ஆரம்ப சுகாதார நிலையங்களில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

20—

### ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்துதல்

**வினா 19625—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**



1999 பிப்ரவரி 24]

எடப்பாடி தொகுதி, எடப்பாடி வட்டத்தில், எடப்பாடி அரசு மருத்துவமனை உள்ளது. மேலும் கொங்கணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் (Main) முதன்மையாகவும், கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாக வேலப்புரத்தில் உள்ளதால் கொங்கணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்த அவசியம் இல்லை.

21—

### சுற்றுப்புறச் சுவர் கட்டுதல்

**வினா 20143—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்ட அரசினர் புதிய மருத்துவமனைக்குச் சுற்றுப்புறச் சுவர் (Compound Wall) கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்ட அரசினர் புதிய மருத்துவமனைக்குச் சுற்றுப்புறச் சுவர் (Compound Wall) கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

22—

### வெளி நோயாளிகள் பகுதி கட்டடம் கட்டுதல்

**வினா 20147—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்ட புதிய அரசினர் மருத்துவமனைக்கு வெளி நோயாளிகள் பகுதி கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[1999 பிப்ரவரி 24

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்ட புதிய அரசினர் மருத்துவமனைக்கு புதிதாக வெளி நோயாளிகள் பகுதி கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) புறநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதைப் பொறுத்து அவசியம் ஏற்பட்டால் பகுதி-2 திட்டங்களின்போது இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

**23—**

**கச்சுவளியனூரில் ஏழை மக்களுக்குப் பட்டா**

**வினா 18511—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், செம்மன்கூடல் ஊராட்சியிலுள்ள கச்சுவளியனூரில் வாழும் ஏழைகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், செம்மன்கூடல் ஊராட்சி, கச்சுவளியனூரில் வாழும் ஏழை மக்கள் வீட்டுமனை கோரும் பகுதி, கரடு புறம்போக்கு. அதை வீட்டுமனையாக ஒப்படை வழங்குவது குறித்து மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்படுகிறது.

**24—**

**வாணாங்கரடு மக்களுக்குப் பட்டா**

**வினா 18517—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 24]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், அரூர்பட்டி ஊராட்சியிலுள்ள வாணாங்கரடு பகுதியில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில், இந்த நிதியாண்டில் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, அரூர்பட்டி ஊராட்சியிலுள்ள வாணாங்கரடு பகுதியில் வசிப்பவர்கள் வீட்டுமனை கோரியுள்ள இடம் கல்லாங்குத்து புறம்போக்கு ஆகும். வீட்டுமனை ஒப்படை செய்வது குறித்து மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்படுகிறது.

**25—**

**பட்டா வழங்குதல்**

**வினா 18518—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், ராமிரெட்டிப்பட்டி ஊராட்சியிலுள்ள மந்தைத் தோப்பூரில் இருப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீட்டுமனை கேட்கப்பட்டுள்ள புல எண் 155 இல் உள்ள நிலம் நீர்நிலைப் புறம்போக்கு என்று தடை செய்யப்பட்ட நிலம் என்பதால் வீட்டுமனை ஒப்படை வழங்க இயலாது.

**26—**

**பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பட்டா வழங்குதல்**

**வினா 18524—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, சிக்கம்பட்டி ஊராட்சியில் உள்ள கரட்டுக்கொரை 72/1 சர்வே எண்ணில் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை நத்தமாக மாற்றி மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கால்நடை மருத்துவமனை ஒன்று இந்நிலத்தில் உள்ளது. அதன் விரிவாக்கப் பணிகளுக்கு எதிர்காலத்தில் நிலம் தேவைப்படும் என்பதால் வீட்டுமனை ஒப்படை செய்ய இயலாது.

**27—**

**புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா**

**வினா 19538—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியிலுள்ள அனைத்து புறம்போக்கு நிலங்களிலும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டி வாழ்ந்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் வட்டம், தாரமங்கலம் கிராமம், தாரமங்கலம் பேரூராட்சியிலுள்ள நத்தம் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருந்து வந்த அனைத்து நபர்களுக்கும் நத்தம் நிலவரித் திட்டத்தில் நத்தம் நில அளவை தனி வட்டாட்சியரால் முழுமையான அளவில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதர புறம்போக்குகளில் வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்படுகிறது.





**28—**

**புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா**

**வினா 19539—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கோனகாபாடி ஊராட்சியிலுள்ள கே.ஆர். தோப்பூரில் புறம்போக்கு இடத்தில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கோனகாபாடி கே.ஆர். தோப்பூரில் வாழும் மக்கள் வீட்டுமனை கோரியுள்ள இடம் வண்டிப் பாதை புறம்போக்கு ஆகும். இதில் வீட்டுமனை தருவது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

**29—**

**கோட்டைமேடு மக்களுக்குப் பட்டா**

**வினா 19540—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சியிலுள்ள கோட்டைமேடு என்னுமிடத்தில் வாழ்ந்து வரும் 200 குடும்பங்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் வட்டம், கருக்கல்வாடி ஊராட்சி, கோட்டைமேட்டில் உள்ளவர்கள் வீட்டுமனை கோரியுள்ள நிலம்

களர்பூமி புறம்போக்கு ஆகும். இது குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர் அளவில் ஆய்வு நடைபெறுகிறது.

30—

**பட்டா வழங்குதல்**

**வினா 19542—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சியிலுள்ள அண்ணா நகர் என்னுமிடத்தில் வீடு கட்டி உடனடியாக பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஓமலூர் வட்டம், பாப்பம்பாடி ஊராட்சியிலுள்ள அண்ணா நகர் மக்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தில் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பிற இனங்களில் வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கு மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்படுகிறது.

31—

**இலவச வீட்டுமனைப் பட்டா**

**வினா 20106—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, வைகுந்தம் கிராமம் மலைப் பகுதி பெருமாள்கோவில் பகுதியில் உள்ளவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சங்ககிரி வட்டம், வைகுந்தம் கிராமம், மலைப் பகுதி பெருமாள்கோவில் பகுதியில் உள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா



வழங்குவது குறித்து நடவடிக்கை மாவட்ட அளவில் ஆய்வு செய்யப்படுகிறது.

32—

**ஊராட்சி ஒன்றியத்தை இணைத்தல்**

**வினா 20191—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்திலுள்ள மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தை எடப்பாடி வட்டத்துடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

*33—*

**நிபுணர் குழு அமைத்தல்**

**வினா 12924—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள், அவற்றைப் பயன்படுத்தவுள்ள தடைகள் குறித்து ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* தற்போது ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தமட்டில் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் குறித்து ஆய்வு செய்ய நிபுணர் குழு அமைக்கும் உத்தேசம் இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

34—

**குப்பைகளை அகற்றுதல்**

**வினா 14439—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சிக் குப்பைகளை கோட்டை பின்புற வழிச்சாலை, பாலாறு போன்ற இடங்களில் கொட்டி சுகாதாரக் கேட்டை உருவாக்குவதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி கோட்டை பின்புற வழிச் சாலை போன்ற இடங்களில் குப்பைகளைக் கொட்டுவது நிறுத்தப்பட்டு விட்டது. மேலும் பாலாறில் வேலூர் நகராட்சி குப்பைகளைக் கொட்டுவது கிடையாது.

35—

**டோபிகானா கட்டுதல்**

**வினா 14570—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி, சைதாப்பேட்டை மலையடிவாரத்தில் டோபிகானா கட்ட அரசு எப்போது நடவடிக்கை எடுக்கும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சியில் சைதாப்பேட்டை மலையடிவாரத்தில் டோபிகானா கட்ட 1998-99ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 50,000 மதிப்பீட்டில் மேற்கொள்ள வேலூர் நகராட்சி தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.



36—

**தொகுப்பு வீடுகள் விவரம்**

**வினா 17313—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் 1998-99 ஆம் ஆண்டில் கட்ட உத்தேசிக்கப்படவுள்ள தொகுப்பு வீடுகள் எத்தனை?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித் தரப்படும்?

(இ) இல்லையெனில் அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதி கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 65 தொகுப்பு வீடுகள் கட்ட நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(இ) கேள்வி எழவில்லை.

37—

**தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

**வினா 17317—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம் அ. புதூர் கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டு எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. புதூர் கிராமத்திற்கு 10 தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

38—

### வீடு கட்டுவதற்குக் கூடுதல் தொகை

**வினா 21100—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வீடொன்றுக்கு ரூ. 27,000 என்று உள்ளதை மேலும் உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தரமான ஆர்.சி.சி. கூரை போட மாநில அரசு அளித்து வந்த கூடுதலான தொகை ரூ. 7,000-லிருந்து 12,000 ஆக 1998-99 ஆம் ஆண்டிலிருந்து கட்டப்படும் வீடுகளுக்கு உயர்த்தி அரசாணை (நிலை) எண் 93, நாள் 19-5-1998-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை ரூ. 27,000 ஆக வழங்கப்பட்ட தொகை ரூ. 32,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

39—

### ஏல விற்பனை மையம் ஏற்படுத்துதல்

**வினா 14664—ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் சாமந்திப் பூக்களுக்காக ஏல விற்பனை மையம் ஒன்று காடையாம்பட்டி வட்டாரத்தில் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தற்போது இல்லை.

40—

### தரிசு நில மேம்பாடு

**வினா 17623—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டப் பணிக்கு அரசு எவ்வளவு தொகை செலவு செய்ய உத்தேசித்துள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) "சமுதாய தரிசு நிலமேம்பாட்டுத் திட்டம்" என்னும் பெயரில் திட்டம் ஏதும் மாநில மற்றும் மைய அரசுகளால் செயல்படுத்தப்படுவதில்லை. எனினும் தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த பயன்படுத்தாத நில மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 2119.21 இலட்சம் செலவு செய்ய உத்தேசித்துள்ளது. இதுதவிர தமிழ்நாட்டிலுள்ள பயன்படுத்தப்படாத நில மேம்பாட்டிற்காக சுமார் ரூ. 227.94 கோடிக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசு மற்றும் நபார்டு வங்கி நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டம் 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவை புதுக்கோட்டை, ஈரோடு, சிவகங்கை, கடலூர், வேலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், கோயம்புத்தூர் ஆகியவையாகும். இம்மாவட்டங்களில் 32,285 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான கால அளவு 4-5 ஆண்டுகள் ஆகும். இத்திட்டத்திற்கான மொத்த நிதி ரூ. 2119.21 இலட்சம் ஆகும். இதுவரை

[1999 பிப்ரவரி 24

ரூ. 586.519 இலட்சம் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் தகுந்த முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு மத்திய அரசு ஒப்பளிப்பு பெற்றவையாகும். இதற்கென தனியாக இம்மாநிலத்திற்கு வருடாந்திர அடிப்படையில் தொகை ஏதும் ஒதுக்கப்படுவதில்லை.

**41—**

**மானிய விலையில் பழ மரக் கன்றுகள் வழங்குதல்**

**வினா 18537—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தோட்டக்கலைத் துறை மூலமாக பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானிய விலையில் மா, கொய்யா, சப்போட்டா, மாதுளை, பலா, வாழை, அன்னாசி, மிளகு, கிராம்பு, காப்பி, சில்வர்ஓக் போன்ற கன்றுகளை வழங்க அரசு எடுத்த முயற்சிகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தோட்டக்கலைத் துறை மூலமாக பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டம், கல்ராயன்மலை, அரநூத்துமலை, சேர்வராயன்மலை, பச்சைமலை, கொல்லிமலையிலும், தர்மபுரி மாவட்டம், சித்தேரி மலையிலும், வேலூர் மாவட்டம் ஜவ்வாது மலையிலும், திருவண்ணாமலை மாவட்டம், விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலையிலும், சென்ற 31-3-1998 வரையில் பழச்செடிகளும், மிளகு, காப்பி, கிராம்பு, சில்வர்ஓக் செடிகளும் மானிய விலையில் அந்தந்தப் பகுதிக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினை 1998-99 ஆம் ஆண்டிற்கு நீட்டிப்பு செய்வது குறித்த முன்மொழிவு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஆதிவாசி விவசாயிகளின் நிலங்களில் ஒரு ஏக்கர் பரப்பில் தனிநபர் பழத் தோட்டங்கள் அமைப்பதற்கு ரூ. 1,750 மதிப்புள்ள பல்வேறு பழச் செடிகள், நிழல் தரும் மரங்கள் அந்தந்தப் பகுதிக்கு ஏற்றவாறு 100 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 3,000 ஏக்கர் பரப்பளவில் அமைப்பதற்குத் தேவையான மா, கொய்யா,



1999 பிப்ரவரி 24]

மாதுளை, சப்போட்டா, பலா, வாழை. அன்னாசி, மிளகு, கிராம்பு, காப்பி, சில்வர்ஓக் போன்ற கன்றுகள் முழு மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

**42—**

**ஏரி தூர் எடுத்தல்**

**வினா 11119—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள ஏலகிரி ஊராட்சிக்கு உட்பட்ட ஏலகிரி பெரிய ஏரி தூர் எடுத்து சீரமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்திலுள்ள ஏலகிரி ஊராட்சிக்குட்பட்ட ஏலகிரி பெரிய ஏரியை தூர் எடுக்கும் திட்டம் நடப்பு நிதியாண்டில் இல்லை.

**43—**

**ஏரி அமைத்தல்**

**வினா 16862—திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஓலக்கூர் ஒன்றியம், பாதிரி கிராமத்தில் ஏரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி தொகுதி, ஓலக்கூர் ஒன்றியம், பாதிரி கிராமத்தில் ஏரி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

44—

### அரசுப் பேருந்தை இயக்குதல்

**வினா 14733—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி, தொகுதியிலிருந்து எடப்பாடி, கொங்கணாபுரம், கண்ணந்தேரி, கோசாரிப்பட்டி, மகுடஞ்சாவடி, காகாபாளையம், ஆட்டையாம்பட்டி வரை செல்லும் நகரப் பேருந்து இரண்டு மாதங்களாக இயங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசுப் பேருந்து அத்தடத்தில் இயக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் தெரிவிக்கப்பட்டுள்ள தடத்தில் இயக்கப்பட்டு வந்த பேருந்து கடந்த இரண்டு மாதங்களாக சாலைப் பழுதின் காரணமாக மாற்று வழியில் இயக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது குறிப்பிட்ட வழித் தடத்தில் பாதை பழுதுப் பணி முடிந்ததால் இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் நான்கு நடைகள் 14-4-1998 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

45—

### பேருந்துகளின் இடையூறுகளைத் தடை செய்தல்

**வினா 15541—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் தனியார் பேருந்துகள் இடையூறு செய்யும் வகையில் செல்வது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் அனுமதிக்குப் புறம்பாக இயக்குதல், கால நிர்ணயம் கடைபிடிக்காது இயக்குதல், அங்கீகரிக்கப்படாத இடங்களில் பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கி இடையூறு செய்தல் போன்ற குற்றங்களுக்காக தணிக்கை மேற்கொண்டு 92 இனங்களில் உரிமையாளர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இம்மாதிரியான குற்றங்கள் ஏற்படாதவாறு தொடர்ந்து தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

46—

### போக்குவரத்துக் கழகத்திற்குப் பணிமனை

**வினா 15574—திரு. எஸ். எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரவக்குறிச்சியில் போக்குவரத்துக் கழகத்திற்குப் பணிமனை கட்டுவதற்காக நிலம் வாங்கி 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் பணிமனை கட்டாமல் இருப்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரவக்குறிச்சியில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பிற்காலத் தேவையின் அடிப்படையில் பணிமனை தொடங்க 2.50 ஏக்கர் நிலம் 8-12-1983 அன்று கையகப்படுத்தப்பட்டது. அரவக்குறிச்சியை மையமாகக் கொண்டு இயங்கும் பேருந்துகளின் எண்ணிக்கை ஒரு பணிமனை அமைக்க போதிய அளவில் இல்லை. வரும் ஆண்டுகளில் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்போது கழகத்தின் நிதி நிலையின் அடிப்படையில் பணிமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

47—

### வைத்தீஸ்வரன்கோயில் பேருந்து நிலையம்

**வினா 15855—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேருந்து நிலையத்தில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், வேண்டுகோளுக்கிணங்க வைத்தீஸ்வரன்கோயில் பேருந்து நிலையத்தில் நிறுத்தம் செய்து, பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லும் பணி நடைமுறையில் இருந்து வருகின்றது. வைத்தீஸ்வரன்கோயில் பேருந்து நிலையம் கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் அமைந்துள்ளதால் பயணிகள் அப்பேருந்து நிலையத்திற்குச் செல்வதில்லை. கோவிலுக்கு அருகாமையில் உள்ள இரண்டு பேருந்து நிறுத்தங்களில்தான் பயணிகள் நின்று பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். இருப்பினும் வைத்தீஸ்வரன்கோயில் பேருந்து நிலைய நிறுத்தத்தில் பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்ல தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம் 1), கும்பகோணம் தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**48—**

### புதிய பேருந்துகள் விடுதல்

**வினா 17912—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1 மற்றும் எடப்பாடி பணிமனைகளில் எத்தனை பேருந்துகள் பழுதடைந்த நிலையில் உள்ளன?

(ஆ) பழுதடைந்த பேருந்துகளை மாற்றிவிட்டு புதிய பேருந்துகள் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் கோட்டம்-1-ல் பழுதடைந்த நிலையில் 35 பேருந்துகள் உள்ளன. எடப்பாடி கிளையில் அதிக வயதுடைய பேருந்துகள் நான்கு உள்ளன.





(ஆ) இந்த நிதியாண்டில் அதிக வயதுடைய மற்றும் பழுதடைந்துள்ள பேருந்துகளைக் கழிவு செய்து, புதிய பேருந்துகளை இயக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**49—**

### நகரப் பேருந்தை நீட்டிப்பு செய்தல்

**வினா 17918—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரிலிருந்து கொல்லங்கரை வரை செல்லும் அரசு நகரப் பேருந்தை நடுவூர் வரை நீட்டிப்புச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நடுவூருக்கு ஏ 22-ன் மூலம் தினசரி 8 நடைகள் மற்றும் தடம் எண் 478எல் புறநகர்ப் பேருந்து மூலம் நடுவூர் வழியாக ஈச்சங்கோட்டைக்கு தினசரி 4 நடைகள், ஆக நடுவூருக்குக் கூடுதலாக 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே கொல்லங்கரை வரை செல்லும் மாநகரப் பேருந்தை நடுவூர் வரை நீட்டிப்புச் செய்ய சாத்தியக்கூறு இல்லை.

**50—**

### கூடுதல் நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 17922—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லானி ஒன்றியம், வாந்தை, கூடுங்குளம், எக்ககுடி, நல்லான்குடி, உத்தரகோசமங்கை, மேலாடை, கொம்பூதி, கருக்காத்தி ஆகிய பகுதிகளில் கூடுதல் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[1999 பிப்ரவரி 24

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடத்தில் ஏற்கெனவே போதிய நகரப் பேருந்துகள் வசதி இருப்பதால் மேற்கொண்டு நகரப் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**51—**

**நகரப் பேருந்துகளைச் செப்பனிடல்**

**வினா 17924—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், கம்பம் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இயக்கப்படும் நகரப் பேருந்துகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், கம்பம் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இயக்கப்படும் நகரப் பேருந்துகள் செப்பனிடப்பட்டு, பழைய பேருந்துகள் இயக்கத்திலிருந்து நிறுத்தப்பட்டு, புதிய நகரப் பேருந்துகள் வழங்கப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றன.

**52—**

**பேருந்து கூடுதலாக இயக்குதல்**

**வினா 18699—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து குளிச்சப்பட்டு, காட்டூர் வழியாக ஒரத்தநாட்டிற்கு மூன்று முறை இயக்கப்பட்டு வரும் அரசுப் பேருந்து தடம் எண் 39-ஐ மேலும் இரண்டு முறை கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையின் அடிப்படையில் தஞ்சாவூரிலிருந்து வாழமரக்கோட்டை, குளிச்சப்பட்டு, காட்டூர் வழியாக ஒரத்தநாட்டிற்குக்



1999 பிப்ரவரி 24]

கூடுதல் நடைகள் இயக்க இயலாத நிலையில், தஞ்சாவூரிலிருந்து பருத்தியப்பர் கோவிலுக்கு வஸ்தா சாவடி வழியாக இயக்கப்பட்ட இரண்டு நடைகளை மாற்றி வாழமரக்கோட்டை, குளிச்சப்பட்டு, காட்டூர் வழியாக பருத்தியப்பர் கோவில் வரை இரண்டு நடைகள் 15-8-1998 முதல் இயக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தஞ்சாவூர்—ஒரத்தநாடு தடத்தில் பெரும் பகுதி இரண்டு நடைகள் கூடுதலாகப் பேருந்து வசதி பெற்று உள்ளது.

**53—**

**கூடுதல் நகரப் பேருந்து விடுதல்**

**வினா 20219—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தாலுகாவாக மாற்றப்பட்டதால், பொதுமக்கள் வந்து செல்லப் போதுமான அளவிற்கு நகரப் பேருந்துகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தக் குறைபாட்டைப் போக்கப் போதுமான நகரப் பேருந்து விட அரசு ஏற்பாடு செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடியினை மையமாகக் கொண்டு தற்போது 5 பகுதிகளில் 30 நகரப் பேருந்துகள் கீழ்க்கண்டவாறு இயக்கப்பட்டு வருகின்றன. அதன் பயணிகள் போக்குவரத்து சராசரி விகிதமும், ஒரு நாள் நடைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன:

| வழித்தடம் | பேருந்துகள் எண்ணிக்கை | நடைகள் எண்ணிக்கை | பயணிகள் விகிதாச் சாரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) (சதவீதம்) |
| 1 எடப்பாடி-சங்ககிரி (வழி) சுண்ணாம்புக்குட்டை | 3 | 82 | 71.80 |
| 2 எடப்பாடி-குமாரபாளையம் | 8 | 87 | 53.82 |
| 3 எடப்பாடி-பூலாம்பட்டி | 5 | 50 | 46.70 |
| 4 எடப்பாடி-கொங்கணாபுரம் | 10 | 128 | 58.03 |
| 5 எடப்பாடி-ஜலகண்டாபுரம் | 4 | 71 | 56.85 |

[1999 பிப்ரவரி 24

(ஆ) தற்போது இயக்கப்படும் நகரப் பேருந்துகளிலேயே பயணிகள் விகிதாச்சாரம் (Occupancy ratio) குறைவாக இருப்பதால், கூடுதல் நகரப் பேருந்து இயக்கத் தேவை எதுவும் நிலவவில்லை.

54—

### கொழப்பலூர் வரை பேருந்தை நீட்டித்தல்

**வினா 20461—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறிலிருந்து ஆவணியாபுரம் சாலை வரை வரும் நகரப் பேருந்தை பெரிய கொழப்பலூர் வரை நீட்டித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணைப்படி நகரத் தடம் 30 கி.மீ. தூரம் வரை தான் இயக்க முடியும். ஆனால் கோரிக்கை வழித்தடத்தின் நீளம் 36.5 கி.மீ. ஆக இருப்பதால் நகரப் பேருந்தை பெரியகொழப்பலூர் வரை நீட்டித்து இயக்க இயலாது. மேலும் பெரியகொழப்பலூர் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

55—

### போக்குவரத்து ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்கும் திட்டம்

**வினா 21052—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் ஓட்டுநர், நடத்துநர் மற்றும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 பிப்ரவரி 24]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

56—

### கூடுதல் பேருந்து இயக்குதல்

**வினா 21066—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் தொகுதி, ஓசூரிலிருந்து தளிவேம்பள்ளி அணைக்கட்டிற்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம் 2) லிட்., தருமபுரி மூலம் ஓசூரிலிருந்து அணைக்கட்டுஉள்ள வேம்பள்ளி கிராமத்திற்குள் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் கொள்ளளவு 48.5 விழுக்காடுகளே உள்ளதால் மேற்படி நடைகளே வேம்பள்ளி கிராமத்திற்குப் போதுமானதாகக் கருதப்படுகிறது. தற்சமயம் கூடுதல் நடைகள் இயக்க இயலாத நிலை உள்ளது.

57—

### நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 21095—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், கொல்லங்கரை ஊராட்சியில் தஞ்சையிலிருந்து கொல்லங்கரை செல்லும் 54 எண் நகரப் பேருந்தை பள்ளிக்கூடம் வரை சென்று வருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூரிலிருந்து கொல்லங்கரை செல்லும் 54 எண் நகரப் பேருந்தை பள்ளிக்கூடம் வரை இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**58—**

**நகரப் பேருந்து இயக்குதல்**

**வினா 21096—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஒரத்தநாட்டிலிருந்து வல்லம் வரைக்கும் தஞ்சை மருத்துவக் கல்லூரி வழியாக ஒரு நகரப் பேருந்து அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு-தஞ்சாவூர்-மருத்துவக் கல்லூரி-வல்லம் வழித்தடத்தின் நீளம் 39 கி.மீ. ஆகும். 30 கி.மீட்டருக்கு மேல் உள்ள வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க விதியில் இடமில்லை. மேலும் ஒரத்தநாடு முதல் வல்லம் வரையில் உள்ள பகுதி ஏற்கெனவே போதுமான அளவு பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே வினாவில் கோரியுள்ளவாறு நகரப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**59—**

**பாலத்தை அகலப்படுத்துதல்**

**வினா 15701—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் நகரம், ஓமலூர்-சங்ககிரி ரோட்டில் கோட்டை மாரியம்மன் கோவிலுக்கருகிலுள்ள குறுகிய பாலத்தை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**



வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலமானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள ஓமலூர்-சங்ககிரி எனும் முக்கிய மாவட்ட சாலையில் கி.மீ. 1/4-ல் அமைந்துள்ள குறுகிய பாலமாகும். இப்பாலம் மேற்கு சரபங்கா நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இப்பாலமானது 25 அடி அகலம் உள்ள மூன்று கண்கள் கொண்ட வளைவுப் பாலமாகும். (ஆர்ச் பிரிட்ஜ்) இக்குறுகிய பாலத்திற்குப் பதிலாக, புதிய பாலம் கட்ட தோராயமாக ரூ. 244 இலட்சம் தேவைப்படும். நிதிநிலைக்கு ஏற்ப எதிர்காலத்தில் பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**60—**

**சாலை செப்பனிடல்**

**வினா 19741—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் இருந்து வெள்ளையம்பாளையம் வழியாகச் செல்லும் பாதையை அகலப்படுத்திச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை நாமக்கல் நெடுஞ்சாலை கோட்டத்தைச் சார்ந்த வைகுந்தம்-கொங்கணாபுரம் சாலையாகும். இச்சாலை 6.80 கி.மீ. நீளம் மற்றும் 3.75 மீ. அகலம் கொண்ட அரசின் இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையை இருவழிப் பாதையாக மாற்ற தோராயமாக ரூபாய் 50 இலட்சம் தேவைப்படும். நிதிப் பற்றாக்குறை காரணமாக இச்சாலை முழுவதையும் அகலப்படுத்தும் பணியை எடுத்துச் செய்ய இயலாது. இருப்பினும் போக்குவரத்து செறிவிற்கு ஏற்றவாறு மேற்படி சாலையினை அகலப்படுத்த வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

[1999 பிப்ரவரி 24

61—

### படவெட்டி அம்மன் கோவிலைப் பராமரித்தல்

**வினா 18857—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு ஊராட்சி, படவெட்டி அம்மன் கோவில் கட்டடம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) 20 ஏக்கர் உள்ள கோவில் நிலத்தை ஏலத்தில் விட்டு கோவிலைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தெசவிளக்கு கிராமத்தில் உள்ள அருள்மிகு படவெட்டி அம்மன் கோவிலின் முன்மண்டபம் மற்றும் சுற்றுச் சுவர்கள் பழுதடைந்துள்ளதால், இதனை சீர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) திருக்கோவிலுக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலம் 10 பூசாரிகளுக்கு மானியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இதனை பொது ஏலத்தில் விட இயலாது. பூசாரிகளே, அந்நிலங்களைச் சாகுபடி செய்து அதிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து பூசை செய்து வருகின்றனர்.

62—

### கோவிலுக்கு விடுதிகள் கட்டித் தருதல்

**வினா 18814—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில் சார்பாக பக்தகோடிகள் தங்கிச் செல்ல விடுதி கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?



1999 பிப்ரவரி 24]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் மற்றும் நகர் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில் சார்பாக, அக்கோவிலின் உபகோவிலான அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில் முன்புறமுள்ள மைசூர் மகாராஜா் மண்டபத்திற்கு அருகிலுள்ள காலிமனையில் சுமார் ரூ. 10,50,000 மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கிச் செல்ல புதியதாக தங்கும் விடுதி கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

63—

### நஞ்சுண்டேஸ்வரர் கோவில் விவரம்

**வினா 18825—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நஞ்சுண்டேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான கட்டடங்கள், நிலங்கள் எவ்வளவு உள்ளன?

(ஆ) அதன் மூலம் கோவிலுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நஞ்சுண்டேஸ்வரர் கோவிலுக்குக் கீழ்க்காணும் அசையாச் சொத்துக்கள் உள்ளன:

(i) மனைகள்

(1) ச.எண் 508/2—0.99.0 ஹெக்டேர்.

(2) ச.எண் 83/1 ஏபி—0.01.0 ஹெக்டேர்

(ii) புன்செய் நிலங்கள்:

ச.எண்.35/2—0.52 ஏக்கர்.

(iii) கட்டடங்கள்—3 கட்டடங்கள்.

(ஆ) மேற்படி சொத்துக்களிலிருந்து ரூ. 30,010 ஆண்டு வருவாயாகக் கிடைக்கிறது.

[1999 பிப்ரவரி 24

64—

## கைலாசநாதர் கோயில் வருமான விவரம்

**வினா 18823—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் கைலாசநாதர் கோயிலுக்குச் சொந்தமான கட்டடங்கள் நிலங்கள் எவ்வளவு உள்ளன?

(ஆ) அதன்மூலம் கோவிலுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமாக கீழ்க்காணும் அசையாச் சொத்துக்கள் உள்ளன:

| நில விவரம் | ச.எண் | கிராமம் | பரப்பளவு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 திருவாதிரை கட்டளை | 83/3 | தாரமங்கலம் | 3.92 |
| 2 பிரதோஷ கட்டளை | 202/1 | ராமவெட்டிப்பட்டி | 1.66 |
| 3 பிரதோஷ கட்டளை | 203/1 | ராமவெட்டிப்பட்டி | 1.36 |
| 4 சிவராத்திரி கட்டளை | 39/4 | குருக்கப்பட்டி | 0.36 |
| | 110/8 | தாரமங்கலம் | 1.54 |
| | 156/2 | தாரமங்கலம் | 0.05 |
| | 106/7 | தாரமங்கலம் | 0.55 |
| | 173/3 | தாரமங்கலம் | 1.24 |
| | 176/5 | தாரமங்கலம் | 0.13 |
| | | மொத்த ஏக்கர் | 10.81 |

53 கடைகள் உள்ளன.



1999 பிப்ரவரி 24]

(ஆ) மேற்படி சொத்துக்களிலிருந்து ரூ. 2,44,495 ஆண்டு வருமானமாகக் கிடைக்கிறது. இதில் ரூ. 1,536 தஸ்திக் தொகையும் அடங்கும்.

65—

## கோயில் நிலத்தைப் பொது ஏலம் விடுதல்

**வினா 18855—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஆரூர்பட்டி ஊராட்சி, ஸ்ரீ கரியகாளியம்மன் கோயில் மானிய நிலம் சுமார் 16 ஏக்கர் உள்ளதை பொது ஏலத்திற்குக் கொண்டு வந்து அறநிலையத் துறைக்கு வருமானத்தைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஆரூர்பட்டி, அருள்மிகு கரியகாளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக ச.எண். 101-ல் 10 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. இந்த நிலம் மூன்று நபர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பரம்பரை அறங்காவலரால் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

(ஆ) எதிர்வரும் காலங்களில், சட்ட விதிகளின்படி பொது ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படும்.

66—

## கோயில் நிலத்தைப் பொது ஏலம் விடுதல்

**வினா 18856—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஆரூர்பட்டி ஊராட்சி ஈஸ்வரன் கோயிலுக்கு மானியமாக உள்ள 6 ஏக்கர் நிலத்தை பொது

[1999 பிப்ரவரி 24

ஏலத்தில் கொண்டு வந்து வருவாயை அதிகரித்து கோவிலைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் உள்ள ஆரூர்பட்டி ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஈஸ்வரன் கோயில் இத்துறையின் ஆளுகையின் கீழ் இல்லை.

67—

**நிலங்கள் பொது ஏலத்தில் விடுதல்**

**வினா 20051—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சியிலுள்ள அருள்மிகு விநாயகர் சுவாமிக்கு ச.எண் 192/2-ல் 3.61 ஏக்கர் புஞ்சை நிலம் தனியார் வசம் உள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிலத்தைப் பொது ஏலத்தில் விட்டு கோவிலுக்கு வருமானத்தைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தெசவிளக்கு ஊராட்சியில் உள்ள அருள்மிகு விநாயகர் திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்கு உட்படாத திருக்கோயில் ஆகும்.

(ஆ) எழாது.



1999 பிப்ரவரி 24]

68—

**தமிழ் மொழியில் பெயர்ப் பலகை வைத்தல்**

**வினா 20805—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் தமிழ் மொழியில் பெயர்ப் பலகை வைக்காத வணிக அங்காடி. உரிமையாளர் எவ்வளவு பேர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(ஆ) தமிழ்மொழியில் பெயர்ப் பலகை வைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழில் பெயர்ப் பலகைகள் வைத்திராத 65 கடை நிறுவனங்கள் மற்றும் 21 உணவு நிறுவனங்கள்மீது தொழிலாளர் துறை ஆய்வாளர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஆம். தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

69—

**கோவில் நிலம் ஏலம்**

**வினா 20047—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சியிலுள்ள அருள்மிகு சென்றாய பெருமாள் சுவாமி திருக்கோயிலுக்கு புல எண் 520/1, 520/3, 557/1-ல் 10.42 ஏக்கர் நிலம் தனியார் வசம் உள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிலத்தை பொது ஏலத்தில் விட்டு, கோவிலுக்கு வருவாயைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

[1999 பிப்ரவரி 24

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தெசவிளக்கு அருள்மிகு சென்றாய பெருமாள் திருக்கோவில் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் ஆகும்.

(ஆ) எழாது.

**70—**

**நியாயவிலைக் கடை அமைத்தல்**

**வினா 9475—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலகரம் பேரூராட்சிப் பகுதியில் பாரதி நகர், என்.ஜி.ஓ. காலனி, ஸ்டேட் பாங்க் காலனி, விவேகானந்தா காலனி ஆகிய பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைகளை தனியாகப் பிரித்து, அப்பகுதியில் ஒரு நியாயவிலைக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, மேலகரம் பேரூராட்சிப் பகுதியைச் சேர்ந்த பாரதி நகர், என்.ஜி.ஓ. காலனி, ஸ்டேட் பாங்க் காலனி, விவேகானந்தா காலனி, ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 773 குடும்ப அட்டைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் மேலகரத்தில் நடத்தி வந்த நியாயவிலைக் கடையிலிருந்து பிரித்து மேலகரத்தில் வேறொரு புதிய முழுநேர நியாயவிலைக் கடை அமைக்கப்பட்டு 2-12-1998 முதல் செயல்பட்டு வருகிறது.



1999 பிப்ரவரி 24]

**71—**

**நியாயவிலைக் கடைகள் கட்டுதல்**

**வினா 13594—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், நம்பிநகர், தோட்டாகுடி, ஆழ்வார்நேரி, அ. சாத்தான்குளம், தே. நாங்குநேரி, மூலக்கரைப்பட்டி, நாகல்குளம், சிந்தாமணி, காடன் குளம், முனைஞ்சிபட்டி, இராமகிருஷ்ணாபுரம், திருமலாபுரம் ஆகிய இடங்களில் நியாயவிலைக் கடைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமங்களான ஆழ்வார்நேரி, திருமலாபுரம், காடன்குளம், தோட்டாகுடி ஆகிய நான்கு இடங்களில் 1998-99ஆம் நிதியாண்டில் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் தலா ரூ. 1.29 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் வேலை உறுதியளிப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அரசு விதிமுறைகளின்படி செயல்படுத்த இயலாது என்பதால் பேரூராட்சிப் பகுதியான மூலக்கரைப்பட்டியில் மேற்கண்ட திட்டங்கள் மூலம் நியாயவிலைக்கடை கட்டடங்கள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**72—**

**நியாயவிலைக் கடைகள் கட்டுதல்**

**வினா 13597—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 24

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், செட்டிகுளம், அச்சம்பாடு, ஆண்டாள்குளம், மன்னார்புரம் சிவந்தியாபுரம், வ. பாப்பான்குளம், செண்பகராமநல்லூர், தளபதி சமுத்திரம், திருவேங்கடநாதபுரம் மற்றும் இளையநயினார்குளம் ஆகிய இடங்களில் நியாய விலைக்கடைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியத்தைச் சேர்ந்த வடக்கு பாப்பான்குளம், செண்பகராமநல்லூர் மற்றும் இளையநயினார்குளம் ஆகிய மூன்று ஊர்களிலும் நியாயவிலைக்கடைகள் பஞ்சாயத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் வாடகையின்றி இயங்கி வருகிறது. மேலும் இவ்வினாவில் கேட்கப்பட்டுள்ள கிராமங்களான சிவந்தியாபுரம், திருவேங்கடநாதபுரம் ஆகிய இடங்களில் 1998-99ஆம் நிதியாண்டில் வேலைவாய்ப்புத் உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் தலா ரூ. 1.29 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலைக்கடை கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

**73—**

### கூட்டுறவு வங்கிகளில் பாதுகாப்பு அறை அமைத்தல்

**வினா 20427—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98ஆம் ஆண்டு எத்தனை கூட்டுறவு வங்கிகளில் இரும்புப் பெட்டகப் பாதுகாப்பு அறை மற்றும் இரும்புக் கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன?

(ஆ) இந்த நிதியாண்டில் எத்தனை கூட்டுறவு வங்கிகளில் இரும்புப் பெட்டகப் பாதுகாப்பு அறை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?



1999 பிப்ரவரி 24]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98ஆம் ஆண்டு 1,360 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பாதுகாப்புக் கதவுகளுடன் கூடிய பாதுகாப்பு அறை அமைக்கவும், 570 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்புப் பாதுகாப்புக் கதவுகள் பொருத்தவும் இதுவரை அனுமதி அளிக்கப்பட்டது. இது தொடர்பான பணிகள் முன்னேற்றத்தில் இருந்து வருகின்றன.

(ஆ) இந்த நிதியாண்டில் கூட்டுறவு வங்கிகளுக்கு இரும்பு பெட்டகப் பாதுகாப்பு அறை அமைக்க உத்தேசம் இல்லை.

**74—**

### பகுதிநேர அங்காடியாகப் பிரித்தல்

**வினா 20459—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெம்மேலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் நடத்தப்படும் அங்காடியை திப்பியக்குடி, சங்கரன் தெரு கிராமங்களுக்கு பகுதிநேர அங்காடியாகப் பிரித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், நெம்மேலி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும், நெம்மேலி, திப்பியக்குடி அங்காடியில் 602 குடும்ப அட்டைகள் உள்ளன. இத்துடன் உள்ளடக்கிய கிராமமான சங்கரன் தெருவில் 166 குடும்ப அட்டைகளும், திப்பியக்குடி கிராமத்தில் 135 குடும்ப அட்டைகளும் உள்ளன. பகுதிநேர கடை அமைக்க குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் மற்றும் இரண்டு ஊர்களுக்கிடையே உள்ள தூரம் 2 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். இந்நேர்வில் இடைவெளிதூரம் 2 கி.மீ இருந்தும்,

[1999 பிப்ரவரி 24

குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இல்லை என்ற காரணத்தால் திப்பியக்குடி மற்றும் சங்கரன்தெரு கிராமங்களில் பகுதிநேரக் கடை அமைத்திட வாய்ப்பு இல்லை.

**75—**

### புதிய நியாயவிலைக் கடை

**வினா 20502—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியத்திலுள்ள பச்சணம்பட்டி ஊராட்சியிலுள்ள திமிரி கோட்டைக்கு புதிய நியாய விலைக்கடை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியத்திலுள்ள பச்சணம்பட்டி ஊராட்சி, திமிரி கோட்டையில் நியாய விலைக்கடை ஏதும் செயல்படவில்லை. இப்பகுதியில் உள்ள குடும்ப அட்டைகள் பச்சணம்பட்டி ஸ்ரீபழனியாண்டவர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தி வரும் பச்சணம்பட்டி 2 என்ற நியாய விலைக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. திமிரி கோட்டையில் நியாய விலைக்கடை ஏதும் செயல்படாததால் அங்கு நியாயவிலைக் கடைக்கான கட்டடம் கட்ட வாய்ப்புகள் இல்லை. மேலும் பச்சணம்பட்டி 2 நியாயவிலைக்கடைக்கு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட வங்கியிடம் போதிய நிதி வசதி இல்லை என்பதால் அங்கும் சொந்தக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**76—**

### நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டுதல்

**வினா 20503—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 24]

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஊ. மாரமங்கலம் ஊராட்சியிலுள்ள காளிப்பட்டிக்கு புதிய நியாயவிலைக் கடை கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ப்பி.காளிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது காளிப்பட்டி என்ற நியாயவிலைக் கடையை நடத்தி வருகின்றது. மேற்படி வங்கியானது, நமக்கு நாமே திட்டத்தின்கீழ் காளிப்பட்டியில் நியாயவிலைக் கடை கட்ட மொத்த மதிப்பீட்டில் 1/3 பங்கு ரூ. 50,000-ஐ செலுத்தத் தயாராக உள்ளது. கட்டடம் கட்ட அரசு புறம்போக்கு நிலம் பெற ஊ. மாரமங்கலம் ஊராட்சித் தலைவரை சங்கம் அணுகி முறையான தீர்மானம் பெற நடவடிக்கை எடுத்து வருகிறது. புறம்போக்கு நிலம் ஒதுக்கப்பட்ட பின்னர் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**77—**

### நியாய விலைக் கடை கட்டுதல்

**வினா 20504—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பச்சளம்பட்டி ஊராட்சியிலுள்ள மோட்டூர் என்னுமிடத்தில் புதிய நியாய விலைக்கடை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டிலா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பச்சளம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால்

பச்சளம்பட்டி என்ற நியாய விலைக்கடை நடத்தப்பட்டு வருகிறது. அந்நியாயவிலைக் கடையில் மோட்டூர் என்ற கிராமம் இணைக்கப்பட்டுள்ளது. மோட்டூர் என்ற கிராமத்திற்கும், பச்சளம்பட்டிக்கும் இடையே 1 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. எனவே மோட்டூரில் நியாயவிலைக் கடை கட்ட வாய்ப்பில்லை.

**78—**

**கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்**

**வினா 20787—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காணூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருக்காணூர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்கீழ் அலுவலகத்துடன் கூடிய கிடங்கு கட்டித்தர அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**79—**

**தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம் நன்மைகள்**

**வினா 19127—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விற்பனை அபிவிருத்திக்காக வீடு வீடாகச் சென்று பொருட்களை விற்பனை செய்ய நியமிக்கப்படுகின்ற பெண்களுக்குத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம் நன்மைகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?





விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம், தொழிலாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சட்ட விதிகளின்கீழ் பொருட்கிடங்குகள், கடைகள் ஆகியவற்றில் பணி செய்யும் தொழிலாளர்களும் இவ்விடங்களிலிருந்து பொருட்களை வெளியில் வியாபாரத்திற்காக எடுத்துச் சென்று விற்பனை செய்பவர்களும் அடங்குவர். எனவே இவ்வகைத் தொழிலாளர்களுக்கு மேற்படி கடைகள் நிறுவனங்கள் சட்ட விதிகளின் மூலம் இவர்கள் நலன் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மருந்துகள் விற்பனை செய்யும் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் பிரதிநிதிகளுக்கென தனியாக 1976ஆம் ஆண்டு விற்பனை அபிவிருத்தித் தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் உருவாக்கப்பட்டு அமல்படுத்தப்படுகிறது.

**80—**

**மாணவ-மாணவியர்களுக்கு உதவி**

**வினா 13531—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997-ல் ஆங்கில வழிக் கல்வித் திட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்குக் கல்வி பயில அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?

(ஆ) இதுவரை எவ்வளவு மாணவ மாணவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன?

(இ) எவ்வளவு பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசு/அரசு உதவி பெறும் தனியார் கல்வி நிறுவனங்களில், அங்கீகரிக்கப்பட்ட பாடமுறைகளில்

பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ/மாணவியர்களுக்கு, அவர்கள் தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய எந்த வழிக் கல்வி திட்டத்தில் பயின்றாலும், பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 25,000-க்கு மிகைப்படாமல் இருப்பின், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் கல்வி பயில உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். போன்ற மூன்றாண்டு பட்டப்படிப்பு வகுப்புகளில் பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ/மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாமல் இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் அனைத்து சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கும் தமிழ் வழி, ஆங்கில வழி என எவ்விதப் பாகுபாடும் கிடையாது. எனவே ஆங்கில வழிக் கல்வித் திட்டத்திற்கென உதவித்தொகைகள் மற்றும் இலவசக் கல்வித் திட்டங்கள் ஆகியவைகளுக்கு தனியே நிதி ஒதுக்கீடு எதுவும் பிரித்து ஒதுக்கப்படுவதில்லை.

(ஆ) மற்றும் (இ) இத்திட்டத்தின்கீழ் தகுதியுடைய மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர் அனைவருக்கும் சலுகைகள் வழங்கப்படுகின்றன. எவருக்கும் நிதிப் பற்றாக்குறை காரணமாக சலுகைகள் மறுக்கப்படுவதில்லை. 1997-98-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தனியார் பள்ளிகளில் ஆங்கில மொழி வழிக் கல்வித் திட்டத்தில் பயின்ற 18,969 மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் இன மாணவ/மாணவியர்களுக்கு மொத்தம் ரூ. 53,74,913 படிப்புக் கட்டணமாக ஈடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு உள்ளது.

**81—**

### இலவச வீட்டு மனைகள் வழங்குதல்

**வினா 20604—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் இந்த வகைப் பொதுமக்களிடம் இருந்து மனைப்பட்டா கோரி மனுக்கள் எத்தனை வந்துள்ளன?





விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களிடமிருந்து மனைப்பட்டா கோரி 357 மனுக்கள் வரப்பெற்றன.

**82—**

### இலவச கணிப்பொறிப் பயிற்சி அளித்தல்

**வினா 20672—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட/மிகப் பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினருக்கு இலவச கணிப்பொறிப் பயிற்சி அளிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 1,000 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் தேர்ந்து எடுக்கப்பட்டு அவர்களுக்கு கீழ்க்காணும் நிலையம்/பல்கலைக்கழகங்கள் மூலம் கணிப்பொறிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(i) சென்னையிலுள்ள மெட்ராஸ் இன்ஸ்ட்டியூட் ஆப் டெக்னாலஜி.

(ii) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

(iii) மதுரை-காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.

(iv) பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

(v) பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

[1999 பிப்ரவரி 24

இந்தப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மேற்படி மாணவ, மாணவியருக்கு, பயிற்சிக் கட்டணமாக ரூ. 4,500-ம் உண்டி உறையுள் கட்டணமாக நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ. 193/198 வீதம் 6 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சியில் சேலம் மாவட்டத்திலிருந்து விண்ணப்பம் செய்யும் தகுதியுடைய பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ மாணவியரும் போதுமான வாய்ப்புகள் பெற்று பயன்பெற்று வருகின்றனர். எனவே சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கு இலவச கணிப்பொறிப் பயிற்சி அளிக்க வேறு புதிய திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**83—**

**நுழைவுத் தேர்வுக்கு இலவசப் பயிற்சி அளித்தல்**

**வினா 20673—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவம், பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கு நுழைவுத் தேர்வுக்கு இலவசப் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட/மிகப்பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர் மாணவ/மாணவியர்களுக்கு மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற் கல்விப் பயிற்சிகளில் சேருவதற்கு இலவச நுழைவுத் தேர்வுப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏற்கெனவே இத்துறை மூலம் எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி மாநிலம் முழுவதும் 72 அரசு உதவி பெறும் உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளில் விண்ணப்பம் செய்யும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சேர்ந்த மாணவ/மாணவியருக்கு நுழைவுத் தேர்வுக்கு முன் 15 நாட்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



1999 பிப்ரவரி 24]

**84—**

**ஏழைகளுக்குக் கடனுதவி**

**வினா 20683—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு, கடன் வேண்டுமென விண்ணப்பிக்கும் ஏழைகளுக்குக் கடன் தர மறுத்தால் அதற்கான காரணத்தை எழுத்து மூலம் தெரிவிக்க ஆணையிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் கடன்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தலைவராகக் கொண்ட உயர்மட்டக் கூர்ந்தாய்வுக் குழுவால் (Screening Committee) பரிசீலனை செய்யப்பட்டு, தகுதி வாய்ந்த விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வழி முகமைகளுக்கு (Channelising Agencies) கடன் வழங்குவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றன. தகுதியுள்ள பயனாளிகளின் கடன் விண்ணப்பங்கள் பற்றிய விவரங்கள் திட்டவாரியாக, தொகைகள் கேட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு அனுப்பப்படுகின்றன. சம்பந்தப்பட்ட பயனாளிகளிடம் இருந்து தேவைப்படும் ஆவணங்கள் அனைத்தையும் பெற்றபின் கழகத்தால் வழங்கப்படும் தொகைகள் வழி முகமைகளால் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன. இச்சூழ்நிலையில் கழகம் கடன், விண்ணப்பதாரர்களுக்கு மறுக்கப்படும்பொழுது கழகம் அதுபற்றி எழுத்து மூலமாக தனியாகத் தெரிவிப்பது சாத்தியமானதல்ல.

[1999 பிப்ரவரி 24

85—

## மேல்மட்டக் குழு அமைத்தல்

**வினா 17065—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகக் காடுகளில் வன விலங்கினங்கள் அழியாமல் பாதுகாக்க ஆலோசனை வழங்க மேல்மட்டக் குழு அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

வன உயிரினம் மற்றும் வன உயிரினப் பொருட்களைப் பாதுகாக்க மற்றும் வனவிலங்குகளை வேட்டையாடுதல் போன்ற சட்ட விரோதமான வணிகம் செய்வதைத் தடுக்க மாநில அளவிலான சுற்றுச் சூழல் தீவிர கண்காணிப்பு ஒருங்கிணைப்புக் குழு சுற்றுப்புறம் மற்றும் வனத்துறையில் 24-4-98 நாளிட்ட அரசாணை எண் 113-ல் அமைக்கப்பட்டுள்ளது. அதில் வனத்துறை அல்லாது இதர துறைகளுக்கான சுங்கத் துறை, காவல் துறை, துறைமுக மற்றும் விமான நிலையத் துறை, இரயில்வே துறை ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் அங்கத்தினர்களாக உள்ளனர். மேலும் மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு வனத் துறை, கால்நடை மற்றும் மீன்வளத் துறை, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, கல்வித் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைச் செயலாளர்கள் மற்றும் வனத் துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழ்நாடு மாநில வன உயிரின ஆலோசனை வாரியம் (Tamil Nadu State Wild Life Advisory Board) சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையின் 14-12-1995 நாளிட்ட அரசு ஆணை எண் 398-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வன உயிரினப் பாதுகாப்புக்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் கௌரவ வன உயிரினக் காப்பாளர்கள், வன உயிரினப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் பற்றி ஆலோசனைகள் வழங்க நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் வன உயிரினப் பாதுகாப்பு அபிவிருத்தி, முன்னேற்றம் குறித்து ஆலோசனை வழங்க ஆளுகைக் குழு, (Governing Board) ஒன்றும் செயல்பட்டு வருகிறது.



1999 பிப்ரவரி 24]

எனவே தமிழகக் காடுகளில் வன விலங்குகள் அழியாமல் பாதுகாக்கவும், ஆலோசனை வழங்கவும், மேலும் ஒரு மேம்பாட்டுக் குழு அமைக்கத் தேவையில்லை.

86—

## சார் பதிவாளர் அலுவலகம்

**வினா 15110—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டம், வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் சார்பதிவாளர் அலுவலகங்கள் அரசுக் கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டம், வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதுமில்லை.

87—

## பட்டு வளர்ப்புக்கு மானியத்தொகை

**வினா 18548—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பட்டு வளர்ப்புக்காக அரசு வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

(ஆ) இதற்காக அரசு அளித்துள்ள மானியத் தொகை எவ்வளவு?

[1999 பிப்ரவரி 24

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பட்டு வளர்ப்புக்காக வழங்கப்பட்ட கடன் தொகை விவரம்:—

| | | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சங்களில்) | பயன் பெற்ற விவசாயிகள் |
|---|---|---|---|
| 1. தருமபுரி மாவட்டம் | .. | 140.92 | 894 |
| 2. சேலம் மாவட்டம் | .. | 19.37 | 98 |
| மொத்தம் | .. | 160.29 | 992 |

(ஆ) 1997-98 ஆம் ஆண்டில் தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் வங்கிக் கடனுக்காக அரசு அளித்துள்ள மானியத் தொகை விவரம்:—

| | | வழங்கப்பட்ட மானித் தொகை (ரூபாய் இலட்சங்களில்) | பயன் பெற்ற விவசாயிகள் |
|---|---|---|---|
| 1. தருமபுரி மாவட்டம் | .. | 20.686 | 253 |
| 2. சேலம் மாவட்டம் | .. | 4.715 | 48 |
| மொத்தம் | .. | 25.401 | 301 |

**88—**

**சத்துணவு மையம் அமைத்தல்**

**வினா 21033—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், கோணகாபாடி ஊராட்சியிலுள்ள அத்திகட்டாலூர் பள்ளி அருகில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 பிப்ரவரி 24]

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்படி பள்ளியில் சத்துணவு மையமும் குழந்தைகள் நல மையமும் பள்ளி அருகில் இயங்கி வருகின்றன.

**89—**

**கால்நடை மருந்தகத்தில் மருந்து கிடைக்கச் செய்தல்**

**வினா 17940—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி கால்நடை மருந்தகத்தில் போதிய அளவு மருந்து கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் கால்நடை மருந்தகத்திற்கு 1997-98ஆம் ஆண்டுக்கு மருந்துகள் வாங்குவதற்கு ரூ. 30,000-லிருந்து ரூ. 35,000 ஆக நிதி உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

**90—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 17943—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், நச்சவாயனூரைத் தலைமையிடமாக்க் கொண்டு ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 பிப்ரவரி 24

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், நச்சுவாயனூர் கிராமத்தில் கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடைக் கிளை நிலையமோ ஏதும் இல்லாத நிலையில் மேற்படி கிராமத்தில் முதன் முதலாகக் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

91—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 19987—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், பூங்குணம் கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பூங்குணம் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

92—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 20338—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 24]

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், விளார் ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், விளார் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை கட்டித்தர சாத்தியக்கூறுகள் இல்லை.

93—

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 20981—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சி, நாகத்தம்பட்டியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

94—

**மறுவாழ்வு இல்லங்கள் திறத்தல்**

**வினா 19892—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் மறுவாழ்வு இல்லங்கள் திறக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து 110 கி.மீ. தூரத்தில் தேவியாக்குறிச்சியில் மறுவாழ்வு இல்லம் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது.

| | அனுமதிக்கப்பட்ட இல்லவாசிகள் எண்ணிக்கை | தற்போது பயன் பெறுவோர் |
|---|---|---|
| தேவியாக்குறிச்சி | 450 | 201 |

அரசு அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் சுமார் 50% மட்டும் பயன்பெறுவதாலும் இன்னும் பலர் பயன்பெற இட வசதி உள்ளதாலும் சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் மேலும் ஓர் அரசினர் மறுவாழ்வு இல்லம் புதியதாகத் தோற்றுவிக்கத் தேவையில்லை.

**95—**

### ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குக் கட்டடம்

**வினா 13538—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கடலாடியிலுள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்பப் பரிசீலிக்கப்படும்.

**96—**

### "தாட்கோ" மூலம் தொழிற்சாலை ஏற்படுத்துதல்

**வினா 19288—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 1998-99 ஆம் ஆண்டு விசைத்தறி உதிரி பாகங்கள் தயாரிக்க "தாட்கோ" மூலம் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**97—**

### தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா 19291—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் தாட்கோ மூலமாக தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**98—**

### தமிழகத்தின் சுற்றுலாத் தலங்கள்

**வினா 19916—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் எத்தனை இடங்கள் சுற்றுலாத் தலமாக இயங்கி வருகின்றன?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் மொத்தம் 43 மையங்கள், மாவட்ட சுற்றுலாத் தலமாக இயங்கி வருகின்றன.

(ஆ) தமிழகத்தில் இயங்கி வரும் சுற்றுலாத் தலங்கள் பெயர் விவரம்;

01 பூண்டி நீர்த்தேக்கம்
02 அமிர்தி நீர் வீழ்ச்சி
03 ஏலகிரி மலை
04 சாத்தனூர் அணை
05 ஜவ்வாது மலை
06 கல்வராயன் மலை
07 செஞ்சி
08 ஸ்ரீமுஷ்ணம்
09 கொல்லிமலை
10 பவானி கூடுதுறை
11 தீர்த்தமலை
12 கிருஷ்ணகிரி அணை
13 வன்னியார் அணை
14 திருமூர்த்தி மலை
15 செங்குபதி நீர்வீழ்ச்சி
16 கொடநாடு பார்வை மையம்
17 கல்லஹர்த்தி நீர்வீழ்ச்சி
18 கங்கை கொண்ட சோழபுரம்





19 முக்கொம்பு
20 சித்தன்னவாசல்
21 புளியஞ்சோலை
22 மணல்மேல்குடி
23 மனோரா
24 கல்லணை
25 வீரகாட்டூர்
26 கும்பக் கரை
27 பிளவக்கல் அணை
28 குல்லூர் சந்தை அணை
29 பாபனாசம் நீர்வீழ்ச்சி
30 உவரி கடற்கரை
31 தொண்டி
32 ஆத்தங்கரை
33 ஏர்வாடி
34 பேச்சிப் பாறை அணை
35 திற்பரப்பு நீர்வீழ்ச்சி
36 தொட்டிபாலம்
37 திருமலைக்கேணி
38 பரப்பலாறு அணை (அ) தாண்டிக்குடி
39 பிரான்மலை
40 காளையார் கோவில்
41 கட்டபொம்மன் நினைவுக்கோட்டை
42 அய்யனார் சுணை
43 எட்டயபுரம்

[1999 பிப்ரவரி 24

99—

பனைப் பொருள் பயிற்சிப் பள்ளி தொடங்குதல்

**வினா 18540—திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சாணாரப்பட்டியில் பனைப் பொருள் பயிற்சிப் பள்ளி ஒன்று தொடங்க அரசு ஆவன செய்யுமா—

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

கடலூரில் உள்ள மண்டல பனை பொருள் பயிற்சி மையத்தில் ஆண்டு முழுவதும் பனைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தவிர மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக நிதியுதவியுடன் தேவையான இடங்களில் அவ்வப்போது இப்பயிற்சி அளிக்கப்படுவதால், எடப்பாடி தொகுதியில் பயிற்சிப் பள்ளி தொடங்க இயலாது. எடப்பாடித் தொகுதியைச் சேர்ந்தவர்கள் விரும்பினால் மேற்குறிப்பிட்ட மையத்தில் இப்பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

100—

தேன் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்

**வினா 18577—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்புப் பெட்டிகளை மானிய விலையில் கொடுத்து தேன் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்புப் பெட்டிகளை மானிய விலையில் கொடுத்து தேன் உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 பிப்ரவரி 24]

## நான்காம் பட்டியல்

1—

அரசு வேலை கிடைக்கச் செய்தல்

**வினா 17897—திரு. சி.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்ஃபில்., பிஹெச்டி., போன்ற மேற்படிப்புப் படித்துள்ள இளைஞர்களுக்கு எந்தவிதமான நுழைவுத் தேர்வுகளோ, நேர்முகத் தேர்வுகளோ வைக்கப்படாமல் அரசு அலுவலகங்களில் அரசு வேலை கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

அரசமைப்புச் சட்டப்படி, மாநில அரசின் பல்வேறு பணிகளுக்கான நேரடி நியமனங்கள், மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் போட்டித் தேர்வுகள் மூலமே செய்யப்படவேண்டும். எனவே எந்தவிதமான தேர்வும் இன்றி அரசுப் பணி வழங்க இயலாது.

2—

காவல் துறை உதவி ஆய்வாளர் குடியிருப்பு புதுப்பித்தல்

**வினா 19607—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் உள்ள மேச்சேரி காவல் நிலையத்தில் பணிபுரியும் உதவி ஆய்வாளர் தங்கும் குடியிருப்பு மிகவும் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு புதுப்பிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் மேச்சேரி, காவல் உதவி ஆய்வாளர் குடியிருப்பை இடித்து

விட்டு அந்த இடத்தில் புதிய கட்டடம் கட்டவும், புதியதாக ஆய்வாளர் குடியிருப்பு ஒன்று கட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3—

**காவல் நிலையங்களை அரசுக் கட்டடத்தில் இயங்கச் செய்தல்**

**வினா 19696—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் எத்தனை காவல் நிலையங்கள் இயங்குகின்றன?

(ஆ) இந்த நிதியாண்டில் அரசுக் கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் கீழ்வரும் நான்கு காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன:

1. புதுச்சத்திரம் காவல் நிலையம்
2. திருச்செங்கோடு காவல்நிலையம் (ஊரகம்)
3. பேருக்குறிச்சி காவல் நிலையம்
4. மொளசி காவல் நிலையம்.

(ஆ) அரசு ஆணை எண் 841, உள் (காவல்.10) துறை, நாள் 3-6-1997-ன்படி புதுச்சத்திரத்தில் புதியதாக காவல் நிலையக் கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கி, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. திருச்செங்கோடு (ஊரகம்), பேருக்குறிச்சி மற்றும் மொளசி ஆகிய காவல் நிலையங்களுக்கு அரசுக் கட்டடம் கட்ட தற்போது நிலம் கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் இக்காவல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4—

**காவலர்களுக்கு வீடு கட்டுதல்**

**வினா 19702—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையத்தில் உள்ள காவல் நிலையத்தில் உள்ள காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கொமாரபாளையம் காவல் நிலையக் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்ட தற்போது நிலம் காவல் துறை வசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், குடியிருப்புகள் கட்டித் தர தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

**ஆசிரியர் பணியில் வேலைவாய்ப்பு**

**வினா 14592—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலிருந்து கர்நாடக மாநிலத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று 50-க்குக் குறைவான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு ஆசிரியர் பணியில் வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் இடைநிலை ஆசிரியர் பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு குறைந்த அளவு 50% மதிப்பெண்கள் பெற வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், தமிழ்நாட்டிலிருந்து கர்நாடக மாநில இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று 50%-க்குக் குறைவான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஆசிரியர் பணியில் வேலைவாய்ப்பு வழங்க இயலாது.

6—

**அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா 15508—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 24

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டிணம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24-7-1998-ல் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மல்லிப்பட்டிணம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக இரு வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க ரூ.4.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

7—

**உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டுதல்**

**வினா 19191—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அடுத்து வரும் ஆண்டில் நிதி ஒதுக்கக் கூடிய வாய்ப்பைப் பொறுத்து இப்பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

**தியாகி சங்கரலிங்கனார் பெயர் சூட்டுதல்**

**வினா 4929—திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 24]

விருதுநகரில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திற்கு தியாகி சங்கரலிங்கனார் பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

விருதுநகரில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள மின்வாரிய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திற்கு இதுவரை எந்தவிதமான பெயரும் சூட்டப்படவில்லை. அரசுக் கட்டடங்கள், அரசின் பொது நிறுவனங்களின் கட்டடங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவுத் துறை சார்ந்த கட்டடங்களுக்கு பெயர் வைப்பதில் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் இருப்பதால் பொதுவாக மேற்படி கட்டடங்களுக்கு பெயர்கள் வைப்பதற்கு ஊக்கப்படுத்த வேண்டாமென மேற்கண்ட அனைத்துத் துறைகளுக்கும் சமீபத்தில் அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

9—

**மின்வாரிய செயற் பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்துதல்**

**வினா 16283—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரசிகாமணி சுரண்டை, ஆலங்குளம் ஆகிய உப மின் நிலையங்களை இணைத்து சுரண்டையை மையமாகக் கொண்டு மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், வீரசிகாமணி சுரண்டை, ஆலங்குளம் ஆகிய உப மின் நிலையங்களை இணைத்து சுரண்டையை

மையமாகக் கொண்டு மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**10—**

**எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைத்தல்**

**வினா 19613—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசினர் பொது மருத்துவமனையில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனையின் தேவையினை கருத்திற்கொண்டும், மருத்துவச் சேவைக்கென வரும் பணியாளர்களின் வருகையினை கருத்திற்கொண்டும், அரசின் நிதி நிலையினைப் பொறுத்தும் இக்கருத்துருபற்றி அரசு ஆவன செய்யும்.

**11—**

**எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைத்தல்**

**வினா 19615—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் கொங்கணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் எலும்பு சம்பந்தமாக மருத்துவப் பிரிவு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கொங்கணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் பிரதான ஆரம்ப சுகாதார



நிலையமாகும். எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளவில் அமைப்பதில்லை. மாவட்ட அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவமனைகள் அளவில்தான் அமைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து நோய்களுக்கும் முதலுதவி அளிக்கப்பட்டு பின்னர் சம்பந்தப்பட்ட அரசு வட்டார மருத்துவமனை/மாவட்ட அரசு மருத்துவமனை/ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நோயாளிகள் அனுபப்படுகிறார்கள். எனவே கொங்கணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**12—**

**மகுடஞ்சாவடியில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு**

**வினா 19616—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகும். எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளவில் அமைக்கப்படுவதில்லை. மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும், மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவமனைகள் அளவில்தான் அமைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து நோய்களுக்கும் முதலுதவி அளிக்கப்பட்டு பின்னர் சம்பந்தப்பட்ட வட்டார மருத்துவமனை/ மாவட்ட அரசு மருத்துவமனை/ மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் அனுப்பப்படுகிறார்கள். எனவே மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் எலும்பு சம்பந்தமான மருத்துவப் பிரிவு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

[1999 பிப்ரவரி 24

13—

### பட்டா வழங்குதல்

**வினா 15977—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி 15வது வார்டில் வசிக்கும் தொளசம்பட்டி பிரிவு ரோட்டில் 50-க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் தொளசம்பட்டி பிரிவு சாலையில் வசிக்கும் குடும்பங்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்குவது குறித்து மாவட்ட அளவில் நடவடிக்கை ஆய்வில் உள்ளது.

14—

### ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா 15253—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மல்லியகுந்தம் ஊராட்சியில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



1999 பிப்ரவரி 24]

(அ) மற்றும் (ஆ): 1998-99ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டத்திற்கு முதல் மற்றும் இரண்டாம் கட்ட தொகுப்பு வீடு ஒதுக்கீடு பெறப்பட்டு நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுவிட்டது. மூன்றாவது கட்ட ஒதுக்கீடு பெறப்பட்டால் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு மல்லியகுந்தம் ஊராட்சிக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15—

### ஐ.ஆர்.டி.பி. கடனுதவி வழங்குதல்

**வினா 16300—திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்கள் ஐ.ஆர்.டி.பி. (ஒருங்கிணைந்த ஊரக அபிவிருத்தித் திட்டத்திற்கு) கடனுதவி வழங்குவது போல் பேரூராட்சிக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1996ஆம் ஆண்டு ஜூன் முதல், பேரூராட்சிகள் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தின்கீழ் இயங்கி வருவதால், ஐ.ஆர்.டி.பி. போன்ற கடனுதவிகள் பேரூராட்சிகளில் வழங்கப்படுவதில்லை. இருப்பினும் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்பு (சுவர்ண ஜெயந்தி சாகரி ரோஜ்கார் யோஜனா) திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் மானியத்தோடு கூடிய வங்கிக் கடன் உதவி நடப்பு நிதியாண்டில் (1998-99) வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

16—

### முந்திரி மரங்களைக் காப்பாற்ற இலவச மருந்து

**வினா 19334— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முந்திரி மரங்களைக் காப்பாற்ற விவசாயிகளுக்கு இலவச மருந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பொதுவாக முந்திரி மரங்களுக்குத் தண்டு துளைப்பானால் பெரும்பாலும் சேதம் ஏற்படுகின்றது. இதனைத் தடுக்க ஒருங்கிணைந்த முந்திரி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பாதிக்கப்பட்ட மரங்களில், "செவின்" மருந்து (அல்லது) 5 சத வேப்பெண்ணையைத் தடவி, தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்த ஒரு எக்டேருக்கு ரூ.480/- மானியமாக வழங்கப்படுகிறது.

தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்தத் தேவையான பயிர் பாதுகாப்பு முறை ஓர் ஆண்டில் 4 முறை மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றில் இரண்டு முறை மேற்கொள்ள மேற்கண்டவாறு மானியம் அளிக்கப்படுகிறது. மீதம் இரண்டு முறை விவசாயிகள் தாங்களாகவே தங்கள் செலவில் மேற்கொள்ள வேண்டும்.

இதேபோன்று இலை மற்றும் பூக்களைத் தாக்கும் இதர பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஆண்டுக்கு 3 முறை மருந்து தெளிக்க வேண்டும். இதற்கு எக்டேருக்கு ரூ.300/- மானியமாக வழங்கப்படுகிறது. இதில் இரண்டு முறை தெளிக்க ஏற்படும் பயிர் பாதுகாப்பு மருந்திற்காக, மேலே குறிப்பிட்ட மானியம் வழங்கப்படுகிறது. மீதம் ஒருமுறைக்கான பயிர் பாதுகாப்பு மருந்திற்கான செலவை விவசாயி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**17—**

### பவானி ஆற்று நீரை நிரப்புதல்

**வினா 11955—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொறவலூர் குளத்திற்கு பவானி ஆற்று நீரை இட்டு நிரப்பும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**18—**

### ஆய்வு மாளிகையை பயணியர் மாளிகையாக மாற்றம் செய்தல்

**வினா 16873—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதிக்குட்பட்ட திருமானூரில் உள்ள பொதுப் பணித் துறையின் ஆய்வு மாளிகையை பயணியர் மாளிகையாக மாற்றம் செய்து புதுப்பித்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருமானூரில் உள்ள பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகை பொதுப்பணித் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆய்வுப் பணிகள் தொடர்பாக முகாமிடும்போது தங்குவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இந்த ஆய்வு மாளிகை பொதுப்பணித் துறையின் பொறுப்பில் இருப்பது அவசியமாகிறது. எனவே இந்த ஆய்வு மாளிகையை பயணியர் மாளிகையாக மாற்ற உத்தேசம் எதுவும் இல்லை.

**19—**

### குமுடிமூலை வடிகால் வாய்க்காலை அகலப்படுத்துதல்

**வினா 16897—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில், இருபது மீட்டர் அகலமுள்ள குமுடிமூலை வடிகால்வாய்க்கால் தற்சமயம் குறுகி உள்ளதை அரசு அறியுமா?

[1999 பிப்ரவரி 24

(ஆ) ஆம் எனில், அதனை அகலப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) குமுடிமூலை ஏரி வடிகால் வாய்க்காலை அகலப்படுத்தி சீர் செய்யும் பணி மற்றும் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனத் திட்டத்திலுள்ள ஏரிகள் மற்றும் வடிகால்கள் ஆகியவற்றை நீர்வள ஆதாரத்திட்டத்தின்கீழ் ரூ.117 இலட்சம் செலவில் மராமத்து செய்வதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் உலக வங்கி நிறுவனத்திற்கு வரைவு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதற்கான ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், தேவையான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**20—**

**கரை அரிப்பைத் தடுத்தல்**

**வினா 17281—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, மேல்மூங்கிலடி மதுரா தையாக்குப்பம் வெள்ளாறு தென்கரை 50 மீ. தூரம் அரிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள அரிப்பினைத் தவிர்த்து பாதுகாத்திட வெள்ளாற்றின் வலது கரையில் மூன்று 'கிராயின்கள்'



1999 பிப்ரவரி 24]

கட்டவும், அவற்றின் இடையில் அலை தாங்கிச் சுவர் கட்டவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**21—**

**பாசன வாய்க்கால் தூர் எடுத்தல்**

**வினா 19581— திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், ஆழிவாய்க்கால் தெற்கு நத்தம் கிராமத்தில் ராஜாமடம் ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் பாசன வாய்க்காலில் கரைகளைச் செப்பனிட்டு, தூர் எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

ஆம். வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ராஜாமடம் ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் 3ஆம் எண் கிளை வாய்க்காலில் தற்போது தடையின்றி தண்ணீர் சென்று கொண்டுள்ளது. எனினும் இவ்வாய்க்காலில் சில இடங்களில் பழுதடைந்துள்ள கரைகளைச் செப்பனிடவும், வாய்க்காலில் தூர் வாரும் பணியும், வரும் ஆண்டில் (1999-2000) முன்னுரிமை அடிப்படையில் செய்யப்படும்.

**22—**

**காயாவூர் வாய்க்கால் செப்பனிடல்**

**வினா 19582—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான காயாவூர் வாய்க்கால் பழுதடைந்துள்ளதைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

[1999 பிப்ரவரி 24

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

ஆம். காயாவூர் வாய்க்காலில் முழு நீளத்திற்கும் தூர்வாரும் பணி (இயந்திரம் மூலம்) ரூ. 1,39,700/- மதிப்பீட்டுத் தொகையில் இவ்வாண்டு செய்து முடிக்கப்பட்டுள்ளது. வாய்க்கால் கரைகள் செப்பனிடப்பட்டுள்ளன. இவ்வாய்க்காலில் உள்ள பழுதடைந்துள்ள மதகுகள் மற்றும் சறுக்கைக் கட்டைகள் வரும் 1999-2000 அடைப்புக் காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் செப்பனிடப்படும்.

**23—**

**புதிய பேருந்து இயக்குதல்**

**வினா 15551—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து சென்னைக்கு கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக புதிய பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

**24—**

**நெடுஞ்சாலை சீரமைத்தல்**

**வினா 13779— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வைகுந்தம்-கொங்கணாபுரம் நெடுஞ்சாலை 2 கிலோ மீட்டர் தூரம் பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**



1999 பிப்ரவரி 24]

வினாவில் குறிப்பிடப்படும் சாலை பிரதான மாவட்டச் சாலையான எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/4 இல் பாலத்தைத் திரும்பக் கட்ட நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.150.00 லட்சங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பாலப்பணி முடிந்ததும் பழுதடைந்துள்ள சாலையைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**25—**

**ஓமலூரில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல்**

**வினா 19737—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரில் ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்திருந்தும் இதுவரை இன்னும் மேம்பாலம் கட்ட வேலை ஆரம்பிக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை இந்த நிதியாண்டில் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மேம்பாலம், ஓமலூர்-சங்ககிரி சாலையில், சேலம் (நெடுஞ்சாலை) கோட்டத்தில் உள்ள முக்கிய மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/10-ல் ஆளில்லா இரயில்வே சந்திக்கடவு உள்ளது. மேற்படி இடத்தில் மேம்பாலம் கட்ட 1997-98-ல் இரயில்வே அமைச்சகத்திற்கு அரசால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரயில்வே அமைச்சகத்தின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் மேற்கொண்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

**26—**

**காட்டுவாரி பாலம் செப்பனிடல்**

**வினா 19807—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 பிப்ரவரி 24

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் ஒன்றியம், குருங்குளம் கிழக்கு கிராம முகப்பில் உள்ள காட்டுவாரி பாலத்தை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் கட்ட தோராயமாக ரூ. 50 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதிநிலைக்கேற்ப இனிவரும் காலங்களில் இப்பணியை பகுதி-2 திட்டத்தில் சேர்த்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**27—**

### அர்த்தநாரீஸ்வரர் கோவில் விவரம்

**வினா 18824—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, அர்த்தநாரீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான கட்டடங்கள், நிலங்கள் எவ்வளவு உள்ளன?

(ஆ) அதன் மூலம் கோவிலுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில் பட்டியலில் சேர்ந்த திருக்கோவில் ஆகும். அத்திருக்கோவிலுக்குச் சொந்தமாக 70 கட்டடங்களும், 7 மனைகளும், 8.64 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளது.

(ஆ) கட்டடங்கள் மூலம் 6,48,052 ரூபாயும், மனைகளிலிருந்து 26,184 ரூபாயும் நிலத்திலிருந்து 2,575 ரூபாயும் ஆண்டு வருவாயாகக் கிடைக்கிறது.



1999 பிப்ரவரி 24]

**28—**

### கோவில்களில் மின்தூக்கி வசதிகள் செய்தல்

**வினா 19744—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள திருக்கோவில்களில் எத்தனைக் கோவில்களில் மின்தூக்கி வசதிகள் உள்ளன?

(ஆ) இந்த ஆண்டு எத்தனை கோவில்களில் மின்தூக்கி வசதிகள் செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் உள்ள இழுவை இரயில் தவிர வேறு எந்தத் திருக்கோவிலிலும் மின்தூக்கி வசதி இல்லை.

(ஆ) இந்த ஆண்டு வேறு எந்தக் கோவிலிலும் மின்தூக்கி வசதிகள் செய்ய கருத்துரு அரசிடம் இல்லை.

**29—**

### நிலம் பொது ஏலத்தில் விடுதல்

**வினா 20048—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தெசவிளக்கு கிராமத்திலுள்ள அருள்மிகு உலகேசுவரசுவாமி கோவிலுக்கு ச.எண்410/1, 411/2, 561/1, 467/2ஏ, 476/2பி, 2சி, 2டி, 477/8ஏ, 8பி ஆகிய சர்வே எண்களில் உள்ள 26.04 ஏக்கர் நிலம் தனியார் வசம் உள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், பொது ஏலத்தில் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் ஊராட்சி தெசவிளக்கு அருள்மிகு உலகேஸ்வரர் திருக்கோவில், பட்டியலில் சேராத திருக்கோவில். இத்திருக்கோவிலுக்கு 410/5, 411/2, 561/1, 476/2பி, 2சி, 2டி, 477/8ஏ, 8பி ஆகிய புல எண்களில் மொத்தம் 26.04 ஏக்கர் நிலங்கள் உள்ளன. மேலும் இந்நிலங்கள் 25 ஆண்டுகளுக்குப் பரம்பரை அறங்காவலரால் 16 நபர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

(ஆ) எதிர்வரும் பசலிகளில் (வருவாய் ஆண்டுகளில்) சட்ட விதிகளின்படி பொது ஏலத்தில் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

## கோவில் நிலம் ஏலத்தில் விடுதல்

**வினா 20050—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு ஊராட்சியிலுள்ள அருள்மிகு பாளியப்பன் கோவிலுக்கு ச.எண் 246/1-ல் 3.33 ஏக்கர் நிலம் தனியார் வசம் உள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நிலத்தை பொது ஏலத்தில் கொண்டு வந்து கோவிலுக்கு வருமானத்தைப் பெருக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், தெசவிளக்கு கிராமத்தில் அருள்மிகு பாளியப்பன் திருக்கோவில் எனும் கோவில் ஏதுமில்லை. அருள்மிகு மாரியம்மன்





திருக்கோவில் உள்ளது. அத்திருக்கோவிலும் இந்த சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் வராத திருக்கோவில் ஆகும்.

(ஆ) எழாது.

31—

## வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கும் விவரம்

**வினா 14171—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் விவசாயக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயத்திற்கு ஒதுக்கிய கடன் தொகை எவ்வளவு?

(ஆ) சேலம் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயத்திற்கு எவ்வளவு கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) எத்தனை நபர்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் விவசாயக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயத்திற்கு ஒதுக்கிய கடன் தொகை ரூ. 800 கோடி. (தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலம் குறுகிய கால பயிர்க் கடன்கள் வழங்க 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 800 கோடி குறியீடாக நிர்ணயிக்கப்பட்டது).

(ஆ) சேலம் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயத்திற்கு ரூ. 76 கோடி கடன் வழங்க திட்டமிடப்பட்டது. (1997-98 ஆம் ஆண்டில் சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ரூ.76 கோடியளவிற்குக் குறுகிய கால பயிர்க் கடன்கள் வழங்கப்பட வேண்டுமென குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது).

(இ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் இணைந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் 62,856 நபர்களுக்கு 71.70 கோடி ரூபாய் அளவிற்கு 1997-98 ஆம் ஆண்டில் குறுகிய கால பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**32—**

## காய்கறி கொள்முதல்

**வினா 14539—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் காய்கறி விலையைச் சீராக வைத்திருக்க அரசே காய்கறிகளைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோடை வெய்யில் காரணமாக காய்கறி உற்பத்தி மையங்களிலிருந்து காய்கறிகள் வரத்து வெகுவாகக் குறைந்து வெளிச்சந்தை காய்கறிகளின் விற்பனை விலைகள் உயரும்பொழுது, இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக அரசின் அவ்வப்போதைய அறிவுரைகளுக்கேற்ப, சென்னையில் செயல்பட்டு வரும் டி.யு.சி.எஸ்., பூங்காநகர், வடசென்னை மற்றும் காஞ்சிபுரம் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மூலம் காய்கறி உற்பத்தியாகும் பகுதிகளிலிருந்து தருவித்து, மிகக் குறைவான அளவில் இலாபம் வைத்து, மலிவு விலையில் 50-க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்கள் மூலமாகவும் 100-க்கும் மேற்பட்ட மூன்று சக்கர சைக்கிள் வண்டிகள் மூலமாகவும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

2. காய்கறி விலை அதிகம் உயர்ந்த 15-6-98 முதல் 31-7-98 வரையிலான காலத்தில், கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் விற்பனை செய்த்தால் காய்கறி வெளிமார்க்கெட் நிலவரம் வெகுவாக குறையத் தொடங்கியது. வெங்காய விலை கிலோ ஒன்றிற்கு ரூ.35 தாண்டிய நிலையில் பெங்களூரிலிருந்து 29,381





கிலோ கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு விற்பனை இடங்கள் மூலமாக விநியோகம் செய்யப்பட்டது. அதேபோல் 1,16,236 கிலோ காய்கறிகள் கொள்முதல் செய்து விற்கப்பட்டன.

3. தற்போது டி.யு.சி.எஸ். நிறுவனம் சார்பில் பெங்களூருக்குச் சென்று காய்கறி நிலவரம் விசாரித்ததில் விலை நிலவரம் அதிகமாக இருந்ததால் அங்கிருந்து கொள்முதல் செய்யப்படவில்லை. தற்பொழுது சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிலிருந்து காய்கறிகள் பெறப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன.

**33—**

## நியாயவிலைக் கடை அமைத்தல்

**வினா 14753—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரில் உள்ள வார்டுகளுக்கு, ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனியாக ஒரு நியாய விலைக் கடை அமைத்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி நகராட்சியில் மொத்தம் 33 வார்டுகள் உள்ளன. தருமபுரி நகருக்கென 7 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நியாய விலைக் கடைகளும், கூட்டுறவுத் துறையின் மூலம் 12 நியாய விலைக் கடைகளும் ஆகமொத்தம் 19 நியாய விலைக் கடைகள் தற்போது இயங்கி வருகின்றன. அரசு ஆணையின்படி நகராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு 800 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இணைக்கப்பட வேண்டும். 33 வார்டுகளிலும் ஏப்ரல் 98 மாத நிலவரப்படி 15,643 குடும்ப அட்டைகள் உள்ளன. அவற்றை 33 வார்டுகளுக்குப் பிரித்தால், சராசரியாக 475 குடும்ப அட்டைகள் வருகின்றன. 475 அட்டைகளைக் கொண்டு ஒரு நியாய விலைக் கடை ஏற்படுத்துவது அரசு ஆணையின்படி இயலாது. எனவே தற்போதைக்கு தருமபுரி நகராட்சிப் பகுதியில் நடைமுறையிலுள்ள

[1999 பிப்ரவரி 24

குடும்ப அட்டைகளுக்கு மேற்கண்ட 19 நியாய விலைக் கடைகள் போதுமானது.

**34—**

**குடிமைப் பொருள் அங்காடிகள் அரசுக் கட்டடத்தில் இயங்குதல்**

**வினா 16924—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியில் அனைத்துக் குடிமைப் பொருள் அங்காடிகளும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அரசுக் கட்டடத்தில் இயங்கி வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் தொகுதியில் உள்ள 89 நியாயவிலைக் கடைகளில் ஏற்கெனவே சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் 23 நியாய விலைக் கடைகள் நீங்கலாக, மீதமுள்ள 66 நியாய விலைக் கடைகளில், 1998-99 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் மூலமாக அவற்றிற்கு எதிரே குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகளுக்கு அரசு சார்பில் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

| திட்டத்தின் பெயர் | | நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | | (2) |
| 1. வேலைவாய்ப்புத் திட்டம் | .. | 8 |
| 2. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் | .. | 1 |
| 3. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் | .. | 2 |
| மொத்தம் | .. | 11 |

மேற்கண்ட 11 நியா விலைக் கடைகளுக்கு நடப்பாண்டில் கட்டடம் கட்டி முடிக்கப்படும் என்பதையும், மீதமுள்ள நியாய விலைக்



1999 பிப்ரவரி 24]

கடைகளுக்கு நிதியாதாரம் பெறப்பட்டவுடன் மேற்கண்ட திட்டங்களின் மூலம் கட்டடம் கட்டப்படவுள்ளது.

**35—**

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கடன் விவரம்**

**வினா 18675—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் தொழில் தொடங்க எத்தனை பேருக்கு கடன் அளிக்க அரசு நிர்ணயித்துள்ளது? அதேபோல் எந்தெந்த வகையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மக்களுக்கு உதவிகரமாக உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்திலுள்ள 380 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 1998-99 ஆம் ஆண்டில் 1,740 பேருக்கு 700 இலட்சம் ரூபாய் அளவிற்கு பண்ணைச் சாராக் கடன்கள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மக்களுக்கு உதவிகரமாக கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகின்றன:

1. கடன் வழங்குதல்:

   1. குறுகிய காலப் பயிர்க் கடன்
   2. வேளாண் சார்ந்த காரியங்களுக்கு மத்திய காலக் கடன் (உதாரணம்) கறவை மாடு,
      ஆட்டுப் பண்ணை,
      கோழிப் பண்ணை,
      இதரம்
   3. பண்ணைச் சாராக் கடன்கள்
   4. நகைக் கடன்கள்
   5. தானிய ஈட்டுக் கடன்கள்

6. விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து வழங்குதல்

7. கிராமப்புறங்களில் முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைகள் மூலம் கிராம மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகித்தல். இதுமட்டுமின்றி வைப்புத் தொகைகளின் அடிப்படையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கீழ்க்கண்ட கடன்களை அதன் உறுப்பினர்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. | பழைய கட்டிய வீட்டை பழுது பார்க்கவும், விரிவாக்கவும் | .. ரூ.25,000 முதல் ரூ.50,000 வரை |
| 2. | நுகர் பொருட்கள் வாங்க | .. ரூ.25,000 வரை |
| 3. | இரு சக்கர வாகனங்கள் வாங்க | .. ரூ.35,000 வரை |
| 4. | முன்கடனைத் தீர்க்கவும், திருமண செலவுகளுக்காகவும் | .. ரூ.1 இலட்சம் வரை |
| 5. | விவசாய நிலம் வாங்க | .. ரூ.1 இலட்சம் வரை |
| 6. | சிறுவியாபாரிகளுக்கும்/ சிறுதொழில் புரிவோருக்கும் காசுக் கடன் | .. ரூ.50,000 வரை |
| 7. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்விச் செலவிற்கு | .. ரூ.1,000 முதல் ரூ.5,000 வரை |
| 8. | நாள் ஒன்றுக்கு ஒரு தவணை வீதம் 100 தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் சிறு வியாபாரிகளுக்கு (Petty Traders) தினத் தண்டல் கடன் | .. ரூ.5,000 வரை |

36—

## தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு

**வினா 19391—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களின் வாரிசுகளுக்கோ, மனைவியர்க்கோ வேலைவாய்ப்பு உடனடியாக வழங்க அரசு முன்வருமா?





விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கோ மனைவியர்க்கோ வேலை வாய்ப்பு வழங்குவது தொடர்பாக தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் விதிகள், வருங்கால வைப்புநிதிச் சட்டம், மேலும் தொழிலாளர் நலச் சட்டங்கள் இவற்றில் எந்த சட்டத்திலும் வழிவகை செய்யப்படவில்லை.

37—

## இலவச வீடு கட்டும் திட்டம்

**வினா 19141—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதிக்குட்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு, சென்ற மூன்று ஆண்டுகளில் இலவச வீடு கட்டும் திட்டத்தின்படி எத்தனை நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

கைத்தறித் துறையின் மூலம் நெசவாளர்களுக்கு இலவச வீடு கட்டி வழங்கும் திட்டம் எதுவும் செயல்படுத்தப்படுவதில்லை. எனினும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தொடர்ந்து நெய்து வரும் உறுப்பினர்களில் சொந்தமாக வீடு கட்ட நிலம் வைத்திருந்தால் அவர்களுக்கு மத்திய, மாநில அரசு மானியம் மற்றும் ஹட்கோ கடன் உதவியுடன் நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டி வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் புவனகிரி தொகுதிக்குட்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 15 நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

38—

## தள்ளுபடி மானியம் விவரம்

**வினா 19153—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு சரகத்திலுள்ள பிரதம கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு 1996-97 ஆம் ஆண்டில் வழங்கப்பட வேண்டிய தள்ளுபடி மானியம் நிராகரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை அரசு பிரதம நெசவாளர் சங்கங்களுக்கு வழங்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு வழங்கி வரும் தள்ளுபடி மானியம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டு வருவதால், அரசாணை எண் 115, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, நாள் 28-4-1993-ல், 1992-93 ஆம் ஆண்டில் சங்கங்கள் கோரிய தள்ளுபடி மானிய ரூ.40.85 கோடியை அடுத்து வரும் ஆண்டுகளுக்கு உச்சவரம்பாக நிர்ணயித்து அரசாணை பிறப்பித்தது. மேலும் அவ்வாணையில் உச்ச வரம்பிற்கு மேல் தள்ளுபடி மான்யம் வழங்கி விற்பனை செய்யும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட சங்கங்களே தங்களது சொந்த நிதியிலிருந்து உச்ச வரம்பிற்கு மேல் தள்ளுபடியென வழங்கிய தொகையை ஈடு செய்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்குறிப்பிட்ட அரசு ஆணையின் அடிப்படையில் 1996-97 ஆம் ஆண்டுக்கு அரசு தள்ளுபடி மானியத்திற்காக ஒதுக்கீடு செய்த தொகை ரூ.40.85 கோடி, கோ-ஆப்டெக்சுக்கும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டு விட்டது. இருப்பினும் ஈரோடு சரகத்திலுள்ள சில நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பிற்கு அதிகமாக தன்னிச்சையாக தள்ளுபடி வழங்கி விற்பனை செய்துள்ளது. உச்சவரம்பிற்குட்பட்டு ஈரோடு உதவி இயக்குநரால் பரிந்துரை செய்யப்பட்ட தொகை முழுமையாக வழங்கப்பட்டுவிட்டது.

ஈரோடு சரகத்திலுள்ள அநேக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உச்சவரம்பிற்கு அதிகமாகக் கோரப்பட்ட தள்ளுபடி மானியத் தொகையை ஒரே ஆண்டில் ஈடு செய்தால் சங்க உறுப்பினர்கள் போனஸ் வழங்க இயலாது என்ற காரணத்தால் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் சங்கத்தின் சொந்த நிதியிலிருந்து சம தவணைகளில் லாபக் கணக்கில் ஈடு செய்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.





**39—**

## இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 17571—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டி எத்தனை பேர் விண்ணப்பித்துள்ளார்கள்?

(ஆ) இதுவரை எத்தனை பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சலவைத் தொழிலாளர்கள் மற்றும் முடிதிருத்துவோர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டி விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை 296.

(ஆ) இதுவரையிலும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 165.

**40—**

## லாரிகள், கார்கள் பறிமுதல் விவரம்

**வினா 19710—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் சந்தனக் கடத்தலில் ஈடுபட்ட லாரிகள், கார்கள் பறிமுதல் செய்யப்பட்டவை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

1997-98ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சந்தனக் கடத்தலில் பிடிபட்டு பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களின் விவரம்:-

| வ.எண் | பிடிபட்ட வாகனங்களின் விவரம் | பறிமுதல் செய்யப்பட்டவை |
|---|---|---|
| 1 | லாரி | 21 |
| 2 | டெம்போ, மேக்சி கேப் | 7 |
| 3 | ஜீப், கார் | 18 |
| | மொத்தம் | 46 |

**41—**

**பட்டு வளர்ப்புத் தளவாடச் சாமான்கள் இலவசமாக வழங்குதல்**

**வினா 18312—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டு வளர்ப்பில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக பட்டு வளர்ப்புக்குத் தேவையான தளவாடச் சாமான்களை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் போன்ற பகுதி மேம்பாட்டுத்



திட்டங்களின்கீழ் பயன்பெறும் அனைத்து பட்டு விவசாயிகளுக்கு ஒவ்வொரு வருடமும் பட்டு வளர்ச்சித் துறையானது இலவசமாக அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்களை வழங்கி வருகிறது.

(ஆ) 1998-99 ஆகிய நடப்பு ஆண்டில் பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளுக்கு மூங்கில் தட்டுக்களையும், சந்திரிகைகளையும் வழங்குவதற்குகந்தவகையில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.8.50 இலட்சத்திற்கும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 2.50 இலட்சத்திற்கும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | அரசு ஆணை எண்/நாள் | பயனாளிகள் எண்ணிக்கை | ஒரு நபருக்கு வழங்கப்படும் தொகை ரூ. | மொத்தத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | அரசாணை எண் 54 திட்டம் (ம) வளர்ச்சித் துறை நாள்: 25.9.98 | 340 | 2500 | 8.50 |
| 2. | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | அரசாணை எண் 77 திட்டம் (ம) வளர்ச்சித் துறை நாள்: 4-6-98 | 100 | 2500 | 2.50 |

**42—**

**சத்துணவு சமையல் கூடம் கட்டுதல்**

**வினா 20346— திரு.மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திப்பியகுடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சத்துணவு சமையல் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

[1999 பிப்ரவரி 24

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

1999-2000 நிதி ஆண்டில் வேலை வாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தில் செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப, முன்னுரிமை அடிப்படையில் சமையல் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப் படும்.

**43—**

### சத்துணவுக் குழந்தைகள் காப்பகம் அமைத்தல்

**வினா 20352—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, சிக்கிம்பட்டி ஊராட்சியிலுள்ள, சின்னக்காடாம்பட்டியில் புதிய சத்துணவுக் குழந்தைகள் காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, சின்னக்காடாம்பட்டி துணை கிராமத்தில் புதிய சத்துணவு மையம் அமைக்கப் போதுமான குழந்தைகள் இல்லாததால் அங்குள்ள குழந்தைகள், அருகிலுள்ள புதூர் காடாம்பட்டி சத்துணவு மையத்தில் பயன்பெற்று வருகின்றனர்.

**44—**

### கால்நடை துயர்துடைப்புக் கழகம் விவரம்

**வினா 15276—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 பிப்ரவரி 24]

(அ) தமிழகத்தில் கால்நடை துயர்துடைப்புக் கழகம் எத்தனை மாவட்டங்களில் செயல்படுகிறது? அதில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அதன் சொத்தின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 12 மாவட்டங்களில் 18 கால்நடை வதை தடுப்புச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 40 ஆய்வாளர்களும் 13 மற்ற பணியாளர்களும் பணிபுரிகின்றனர்.

| (ஆ) | அசையும் சொத்து | அசையாச் சொத்து |
|---|---|---|
| அறந்தாங்கி | பஜாஜ் மூன்று சக்கர வண்டி-1 | 7 சென்ட் நிலத்தில் கால்நடைக் கொட்டகை. |
| சென்னை | ரூ. 63,000 மதிப்புள்ள அறைகலன்கள் மற்றும் 2 கால்நடை ஊர்திகள் | ரூ. 18.59 இலட்சம் மதிப்புள்ள நிலம், கட்டடம், நாய்க்காப்பகம், கார் நிறுத்துமிடம், கால்நடை நல மையம் மற்றும் கால்நடை கொட்டகை. |
| கோயம்புத்தூர் | ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள அறைகலன்கள் | ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள 1000 ச.அ. கட்டடம்; ரூ. 15 இலட்சம் மதிப்புள்ள 6000 ச.அ. கட்டடம். ரூ. 3 இலட்சம் மதிப்புள்ள 1.83 ஏக்கர் நிலம் |

| | அசையும் சொத்து | அசையாச் சொத்து |
|---|---|---|
| நாகப்பட்டினம் | பிக்சட் டெபாசிட்டில் ரூ. 15,878/- | ரூ.50,000/- மதிப்புள்ள அலுவலகக் கட்டடம்; ரூ. 25,000/- மதிப்புள்ள கால்நடைக் கொட்டகை. |
| சேலம் | ரூ.8,000/- மதிப்புள்ள அலுவலகப் பொருட்கள் | ரூ.2,60,000/- மதிப்புள்ள இடம் மற்றும் கட்டடம். |
| தஞ்சாவூர் | வங்கியில் பிக்சட் டெபாசிட்டில் ரூ.7,00,000/- | 11 ஏக்கர் நிலம் மற்றும் ஒரு பழைய கட்டடம். |
| திருச்சிராப்பள்ளி | ... | ரூ.50,000/- மதிப்புள்ள நிலம் மற்றும் கட்டடங்கள். |
| ஈரோடு | ... | ஒரு அறையுடன் கூடிய ஒரு கட்டடம்; ஒரு ஜெட்கா நிலையம். |
| வேலூர் | ரூ. 42/- இலட்சங்கள் | .... |

**45—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா 17945—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி, பச்சனம்பட்டி, செம்மங்கூடல், ஆகிய இடங்களுக்கு முத்துநாயக்கன்பட்டியை மையமாகக் கொண்டு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்று உள்ளது. இக்கிராமத்திற்கு அருகில் 3 கி.மீ. தூரத்தில் ஓமலூர் கால்நடை மருந்தகமும், 5 கி.மீ. தூரத்தில் சிக்கம்பட்டி கால்நடைக் கிளை நிலையமும், 5 கி.மீ. தூரத்தில் கே.ஆர்.தோப்பூர் கால்நடைக் கிளை நிலையமும் உள்ளன. எனவே கால்நடை மருந்தகமே இல்லாத முத்துநாயக்கன்பட்டியில் நேரடியாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறு ஏதுமில்லை.

**46—**

**கால்நடை சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா 17938—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பள்ளிப்பட்டியில் கால்நடை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில், மேச்சேரி மற்றும் வெள்ளார் ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகமும், குட்டப்பட்டி, மல்லிகுந்தம், அரங்கனூர் ஆகிய கிராமங்களில் கால்நடைக் கிளை நிலையமும், எம்.என். பட்டி, கானாண்டியூர் மற்றும் அமரம் ஆகிய கிராமங்களில் பார்வைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. எனவே பள்ளிப்பட்டியில் கால்நடை சுகாதார நிலையம் அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**47—**

**கால்நடை வளர்ப்புக்குக் கடன் வழங்குதல்.**

**வினா 19977—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் கால்நடை வளர்ப்புக்கு ஏற்ற சூழ்நிலையுள்ளதால் அங்கு ஆடு, மாடு வளர்க்கும்

தொழிலுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இல்லை. சிறப்பு மத்திய உதவித் திட்டத்தின்கீழ் இந்து ஆதிதிராவிட மக்களுக்கு 50% மானிய உதவியுடன் ஆடு, மாடு வளர்க்கும் திட்டம் சேலம் மாவட்டத்திலும் மற்றும் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. வேறெந்த மானியம்/கடன் திட்டங்களும் கால்நடைப் பராமரிப்புத் துறையால் செயல்படுத்தப்படுவது இல்லை.

**48—**

**கால்நடைக் கிளை மருத்துவமனை வழங்குதல்**

**வினா 20027—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெரியேரிப்பட்டி ஊராட்சியிலுள்ள ரட்டியப்பட்டி என்னுமிடத்தில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**49—**

**தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டுமனைகள் வழங்குதல்**

**வினா 14516—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வேலூர் நகரில் வாழும் வீட்டுமனையற்ற தாழ்த்தப்பட்டோருக்கு வீட்டுமனைகள் வழங்க பக்கத்து கிராமங்களில் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வேலூர் நகரில் வாழும் வீட்டுமனையற்ற தாழ்த்தப்பட்டோருக்கு நகரில் வீட்டுமனைகள் வழங்க இடம் இல்லையெனில், பக்கத்து கிராமங்களில் நில எடுப்பு செய்து வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

**50—**

**சுற்றுலாப்பயணிகளுக்கு வசதிகள்**

**வினா 17820—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் குறைந்த வாடகைக்கு சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்கும் விடுதியும் மற்றும் நீச்சல் குளமும், குடில்களும் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எண். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் குறைந்த வாடகைக்கு சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதியும் மற்றும் நீச்சல் குளமும், குடில்களும் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஏற்கெனவே 33 அறைகள் கொண்ட ஒரு சுற்றுலா விடுதியும் 31 படுக்கை வசதி கொண்ட இளைஞர் விடுதியும் ஏற்காட்டில் இயங்கி வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1999 பிப்ரவரி 24

## 2. அறிவிப்பு

### சாத்தான்குளம் விபத்து குறித்து முன்னறிவிப்பு கொடுத்தோர்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் திரு. எஸ்.எஸ். மணி நாடார் கோரிக்கையை ஏற்று ஸ்ரீவைகுண்டம் அருகே லாரி கவிழ்ந்து பலர் மரணம் அடைந்ததற்கு 50 ஆயிரம் ரூபாய் ஒவ்வொருவருக்கும் கொடுப்பதாக அறிவித்தார்கள். இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. எஸ்.வி. கிருஷ்ணன், திரு. சி. வேலாயுதன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஐ. கணேசன் மற்றும் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் ஆகியோரும் தீர்மானங்கள் கொடுத்து இருந்தார்கள் என்பதை அவைக்குறிப்பிலே ஏற்றுமாறு அறிவிக்கின்றேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) மலேசியா நாட்டில் தமிழர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. மலேசியா நாட்டில் தமிழர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நா. பெரியசாமி, திரு. லா. சந்தானம், திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. சி. வேலாயுதன் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். தீர்மானங்கள் கொடுக்காத சில தலைவர்களும் பேச விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள். முதலில் திரு. நா. பெரியசாமி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலே இருக்கிற வேலைவாய்ப்பற்ற சில இளைஞர்கள் வெளிநாடுகளிலே வேலை தேடி அலையும் நிலையைப் பயன்படுத்தி, மனசாட்சியற்ற சில முகவர்கள் சுற்றுலா விசாவின் அடிப்படையிலே வெளிநாட்டிலே கொண்டுபோய் விட்டுவிட்டு வந்து விடுகிறார்கள். இது இன்று நேற்றல்ல; தொடர்கதையாக நடக்கிற ஒரு நிகழ்வு ஆகும். இப்படித்தான் மலேசியா நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட நூற்றுக்கணக்கான



தமிழர்கள் சிறைச்சாலையிலே துயரப்பட்டு வரும் செய்தியை அங்கிருந்து ஒரு டிராவல்ஸ் நிறுவனத்தின் உதவியோடு தப்பி வந்து இருக்கிற 3 பேர் செய்தியாளர் கூட்டத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அதிலே ஒருவர் ஆண்; மற்ற இருவர் பெண்கள். பெண்கள் இருவரும் தங்களுடைய பெயரைக்கூட வெளியே சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டு அச்சப்பட்டு இருக்கிறார்கள். அந்த அளவிற்குத் தமிழர்கள் வெளிநாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்டு ஏமாற்றப்படுகிறார்கள். இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்தவுடன், நமது முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். அந்த நாட்டுத் தூதரகத்தின் மூலமாக தமிழர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டுக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் தமிழகக் காவல் துறையையும் மிக உஷாராக இதன்மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார்கள். அதற்காக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று மாலை மாண்புமிகு முதல்வர் டெல்லி செல்லப் போவதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. டெல்லி செல்கிற நம்முடைய முதல்வர் அவர்கள் நம்முடைய மத்திய வெளி விவகாரத்துறை அமைச்சரைச் சந்தித்து, மலேசியச் சிறைச்சாலைகளில் மட்டுமல்ல, மற்ற நாடுகளிலும், இப்படித் தமிழர்கள் அவதிப்படுவதைக் கண்டறிந்து, அந்தத் தமிழர்களை விடுவித்து, தமிழ் மண்ணிற்குக் கொண்டு வருகிற கடமையைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி, அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

(முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் சொந்த நாட்டில் வேலை கிடைக்காத காரணத்தால் அயல்நாட்டில் வேலை தேடி, Agent-கள் மூலம் பணத்தைப் பறிகொடுத்து, அயல் நாடுகளிலே சுற்றுலாப் பயணிகளாக வீதியிலே அலையக்கூடிய அவல நிலை ஏற்பட்டு இருப்பதைக்கண்டு நாம் வெட்கப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல மலேசியாவில் வேலை வாங்கித் தருவதாக பணத்தைப் பறித்துக் கொண்டு, அவர்களைச் சுற்றுலாப் பயணிகளாக வீதியிலே விட்டுவிட்டு வந்துவிட்டார்கள். அவர்கள் வீதியிலே சுற்றித் திரிந்து, தற்போது சிறைச்சாலையிலே அடைந்திருக்கக்கூடிய

கொடுமையைப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன். அதைக் கண்டு நம்முடைய வெளிநாட்டு விவகாரத் துறை மந்திரியிடம், தமிழ்நாட்டு இளைஞர்களைப் பத்திரமாக தமிழகத்திற்குத் திருப்பி அனுப்ப தகுந்த ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டு, நம்முடைய முதலமைச்சர் கடிதம் எழுதி இருப்பதைப் பத்திரிகை வாயிலாகப் பார்த்து எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்தநேரத்திலே நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப்போன்ற பித்தலாட்ட Agent-கள்மீது நம்முடைய முதல்வர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து, ஏழையெளியவர்களிடம், படித்துவிட்டு, வேலை கிடைக்காத துர்பாக்கியமான இளைஞர்களிடம் கொள்ளை அடிக்கக்கூடிய போக்கினைத் தடுத்து, அவர்களுக்குத் தகுதியான வேலை அளிக்கக்கூடிய வகையில் தமிழக அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் வெளிநாட்டிற்குச் செல்வதற்குத் தேவையான Passport வழங்கக்கூடிய அலுவலகங்களை வைத்திருக்கிறது. ஆனால் Passport வாங்கித் தருகிறேன். என்று சொல்லி ஒவ்வொரு நகரத்திலும் Broker-கள் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு வேறு வேலை கிடையாது. எங்கள் ஊரில் ஆள் மேல் கிருஷி என்று சொல்வார்கள். அதாவது மனிதர்களைக் கிண்டிப் பிழைப்பது என்று சொல்வார்கள். அந்தமாதிரி வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்கிறேன், வேலை வாங்கித் தருகிறேன் என்று சொல்லி அவர்களிடமிருந்து பணத்தை வாங்கி மோசடி செய்து, பெரிய நகரங்களுக்கு-மும்பை போன்ற நகரங்கள் வரை அழைத்துச் சென்று விட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள். பின்னர் அவர்கள் தெருவில் அலைந்து, கஷ்டப்பட்டு திரும்பி வரக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படி வெளி நாட்டிற்கு வேலைக்கு அனுப்புகிறேன் என்று சொல்பவர்கள், வெளிநாட்டிற்கு அவர்களை அனுப்பும்போது, அவர்களுக்குச் சரியான வேலை அங்கே கிடைக்காமல் ஏதோ காரணங்களைச் சொல்லி சிறையில் அடைப்பது என்பது மலேசியாவில் மட்டுமல்ல; மற்ற பல நாடுகளிலும் இருக்கிறது. எனவே அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, இந்த Broker system போன்றவற்றை ஒழிப்பதற்கு—சட்டப்படி அங்கீகாரம் பெற்றவர்கள் இதைச் செய்யலாம்-வேலை வாங்கித் தராமல் ஏமாற்றுகிற Broker-களின் மீது நடவடிக்கை





எடுக்க வேண்டும். ஆங்காங்கே இத்தகையவர்கள்மீது காவல்துறையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அம்மாதிரியானவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து இந்த வழக்கத்தைத் தமிழகத்திலே இருந்து அறவே ஒழிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள்தான் பேச அழைக்கப்பட வேண்டும என்பது விதி. இருந்தாலும் 2,3 உறுப்பினர்கள் இன்று அவை தொடங்கிய பின்னர் வந்து இதில பேச வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதை முன்மாதிரியாக இனி எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒவ்வொரு உறுப்பினரும் 2 நிமிடத்திற்குமேல் பேசக் கூடாது. இப்போது திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

முற்பகல் 10-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாங்கித் தருவதாக தமிழகத்தில் சில மோசடிப் பேர்வழிகள் சிலபேரிடம் Passport வாங்குவதற்கென்றும், மற்றவற்றிற்கெல்லாம் அவர்களிடம் காசை வாங்கி, அவர்களை மும்பை போன்ற நகரங்களில் கொஞ்ச நாள் வைத்திருந்து பிறகு எப்படியாவது அவர்களை Tourist Visa-விலே வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அந்தவகையிலே நிறைய தமிழர்கள் மலேசியாவிற்கு போனவர்கள் Visa time முடிந்த பின்னால் அகதிகளாக அங்கே பல முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதுகுறித்து நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்

நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தமிழகத்திலிருந்து எவ்வளவு தமிழர்கள் இதுவரை மலேசியா போன்ற மற்ற நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, இப்படி வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கணக்கை நம்முடைய அரசு மத்திய அரசிடம் அணுகிப் பெறுவது கொஞ்சம் சாத்தியமா என்று பார்த்து அவர்களையெல்லாம் மீட்பதற்கு இந்த அமைச்சரவை முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி மோசடிப் பணிகளில் ஈடுபட்டு அவர்களைக் கொண்டுபோய் அடைத்து வைத்த மோசடிப் பேர்வழிகள் யார் யார் என்பதைக்கூட நம்முடைய அரசு ஒரு பட்டியலிட்டு,

அதைக் கண்டுபிடித்து அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்து அவர்களை நீங்கள் சிறையில் தள்ளினால்தான் இதுபோன்ற அயோக்கியத்தனமான வேலைகளை இனிமேல் செய்யாமல் இருப்பார்கள். Tourist Visa-வில் அழைத்துப் போய் அவர்களையெல்லாம் வேலைக்கு அனுப்புவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் வேலை இல்லை என்ற காரணத்தால், பலபேர் எப்படியாவது வேலை கிடைத்தால் போதும் என்று ஓடிவிடுகிறார்கள். ஆகவே, தயவுசெய்து நம்முடைய முதல்வர் அவர்கள் மத்திய அரசோடு பேசி—வேண்டுமானால் நிதியுதவிகூடக் கோரலாம். ஏதோ சில நிறுவனத்தினர் பணம் செலவு செய்து கொஞ்சம் பேரைக் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். இன்னும் எத்தனை பேர் அங்கு இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை.—அந்தச் செலவினத்தைக்கூட நம்முடைய அரசே ஏற்றுக் கொண்டு அவர்கள் அனைவரையும் மீண்டும் தாயகத்திற்குக் கொண்டு வருவதற்கு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை நெடுங்காலமாக ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து கொண்டிருப்பதோடு. அது வளர்ந்து வருகிற ஒரு பிரச்சினையாகவும் நம்மைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. Passport வாங்கித் தருகிறோம், Visa வாங்கித் தருகிறோம் என்ற பெயரிலே நாட்டிலே பெரிய மோசடியே நடந்து கொண்டிருக்கிறது. நிறைய சமுதாயம் இதனால் ஏமாற்றப்பட்டு மிகவும் அலமலந்து நிற்கிறது. மலேசியாவில் இரண்டு வகையிலே நம்முடைய இளைஞர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருசிலர் Visa காலம் முடிந்த பின்னர் திரும்பி வராமல் அங்கேயே தங்கிவிடக் கூடியவர்கள். இன்னொரு பிரிவினர் சிலரால் ஏமாற்றப்பட்டு, சட்டப்புறம்பாக அழைத்துச் செல்லப்பட்டு, நிலையாக தங்குவதற்கு இடமும், நிலையான வேலையும் இல்லாமல் நிர்க்கதியாக நிற்கக்கூடியவர்கள். அவர்களையெல்லாம் மலேசிய அரசு ஓரிடத்திற்குச் சென்று கண்காணிக்கிறது. ஆனால் பொதுவாக கோலாலம்பூரைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கக்கூடிய சிராங்குவம் நெடுஞ்சாலையில் உள்ள மாரியம்மன் கோயில் எதிரிலேதான் இப்படிச் செல்பவர்களெல்லாம் கூடுகிறார்கள். சனிக்கிழமைதோறும் அங்கே கூடுகிறார்கள். அங்குதான் அந்த அரசு அவர்களையெல்லாம் கண்டுபிடித்து பலபேரைக் கைது செய்கின்றது. இப்படிக் கைது செய்யப்படுபவர்கள் பலர் இப்போது அங்கு சிறையிலே இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி இருப்பதாகத் தகவல் வந்துள்ளது. மத்திய அரசை வற்புறுத்தி அங்கிருக்கிற அரசோடு முறையாகப் பேச்சுவார்த்தை நடத்தி, இரண்டுவிதமாக இதற்குத் தீர்வு காணவேண்டும். ஒன்று, கைது செய்யப்பட்டு இருப்பவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். அதற்கான பேச்சு வார்த்தையை நம்முடைய மத்திய அரசு அவர்களோடு நடத்தவேண்டும். இரண்டாவது, இப்படி ஏமாற்றி வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லக்கூடியவர்கள் பெரும்பணத்தைப் பெறுகிறார்கள். 50 ஆயிரம், 60 ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு Passport-களையெல்லாம் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். வருடக் கணக்கிலே அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. வேலை வேண்டுமென்று கேட்டால் அல்லது பணத்தைத் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், பணம் கொடுக்க முடியாது; எங்களுக்கு வசதியான நேரத்தில்தான் திருப்பிக் கொடுக்க முடியும்;. அப்படியென்றால் உங்களுடைய Passport கிடைக்காது என்று பயமுறுத்துகிறார்கள். இதனால் பல சிக்கல்கள் உருவாகின்றன. இதுகுறித்து அரசு அந்த Agency-களைக் கண்காணித்து அவர்களுடைய நடைமுறை என்னென்ன என்பதைக் கண்டுபிடித்து அதற்கு ஏற்றவாறு விதிமுறைகளை ஏற்படுத்தவேண்டும். இது மிக மிக அவசரமான காரியம் என்ற அளவுக்கு இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, தற்போது சிறையில் இருக்கக்கூடிய, மலேசியா மற்றும் பல நாடுகளில் இருக்கக்கூடிய நம்முடைய இளைஞர்களை மீட்டுக் கொண்டுவர உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கறையை நான் பாராட்டி, முறையான பேச்சு வார்த்தைமூலமாக அவர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

முற்பகல் 10-40

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் எல்லாம் வெளிநாடுகளில் வேலை வாங்கித் தருவதாகவும், ஊரைச் சுற்றிக் காண்பிப்பதாகவும், வெளிநாடுகளைச் சுற்றிக்

காண்பிப்பதாகவும் சொல்லி சிலர் பணத்தை வசூல் செய்கிறார்கள். ஆனால் வெளி நாடுகளுக்கு வேலைக்கும் அழைத்துப் போக மாட்டார்கள், சுற்றிப்பார்க்கவும் அழைத்துப் போகமாட்டார்கள். கடைசியில் பணத்தை ஏமாற்றிவிடுகிறார்கள். இந்நிலை சென்னையில் அதிகமாக இருக்கிறது. பணத்தைத் திருப்பிக் கேட்டால், கொடுப்பதில்லை. இதுசம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்கள், தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்கிறார்கள். ஏமாற்றுபவர்கள் நாங்கள் சொன்னாலும் கேட்பதில்லை. பணம் கேட்பவர்களை ஆட்களை வைத்து அடிக்கிறார்கள், தாக்குகிறார்கள். இதுபோன்ற ஏமாற்று நிறுவனங்கள் நிறைய இருக்கின்றன. எனவே தமிழ்நாட்டில் எந்தெந்த நிறுவனங்கள் இத்தகைய தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள், தமிழக அரசிடமிருந்து அவர்கள் அங்கீகாரம் வாங்கியிருக்கிறார்களா என்பதை அரசு கவனிக்க வேண்டும். அப்படி அங்கீகாரம் ·வாங்காத நிறுவனங்களைத் தடை செய்ய வேண்டும். வெளிநாடுகளுக்கு வேலை பார்க்கப் போகின்றவர்கள் அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டுமென்று ஒரு கண்டிப்பான ஆணையை அரசாங்கம் பிறப்பித்தால்தான் நல்லது. இது ஒரு தொழிலாக வளர்ந்து விட்டது.

நான்கூட 'இஸ்கஸ்'-ல் உறுப்பினராகச் சேர்ந்தேன். என்னை ரஷ்யாவுக்கு அழைத்துக்கொண்டு போகிறோம் என்று சொல்லிவிட்டு ஒரு மாதம் டெல்லியிலே வைத்துவிட்டார்கள். விமானம் வரவில்லை என்று சொல்லி என்னை டெல்லியிலே வைத்துவிட்டார்கள். அப்போது நான் டெல்லியில் 10 நாட்கள் பட்டினியில் கிடந்தேன். அப்போது, அலக் என்ற இராஜபாளையத்துக்காரர் 'இஸ்கஸ்' மூலமாக ஆட்களை அழைத்துச் செல்பவராக இருந்தார். M.L.A.-வாக இருக்கும்போது நானும், முன்னாள் M.L.A.-வான சேலம் ஆறுமுகம் போன்றவர்கள் எல்லாம் சென்றிருந்தோம். ரஷ்யாவுக்கு அழைத்துக் கொண்டு போகிறோம் என்று சொல்லி எங்களைப் போன்ற M.L.A.-க்களாக இருந்தவர்களையே ஏமாற்றிவிட்டார்கள். பொதுமக்கள் ஏமாறத்தான் செய்வார்கள். எனவே. அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும், அங்கே சிறையிலே சிலபேர் இருப்பதாகச் சொல்கிறார்கள். சிலபேர் Visa எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். சில பேர் Visa இல்லாமல் போயிருக்கிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டில் இருந்தால் ஒன்றும் தெரியாது. அங்கே சென்று நம்முடைய நாட்டை கேவலப்படுத்துகின்ற அளவில் சாப்பாடு, தண்ணீர் இல்லாமல் பாவம் பிச்சைக்காரர்களாக அலைந்து கொண்டிருக்கிறார்கள். மலேசிய அமைச்சரிடம் நம்முடைய



முதலமைச்சருக்கு நல்ல பழக்கம் இருக்கிறது. அவர்கள் இங்கு தொழில் தொடங்குவது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வந்தார்கள். மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு அங்குள்ள தூதரகத்தின் மூலமாக பாதிக்கப்பட்டவர்களை மீட்பது ஒருபக்கம் இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மலேசிய ·அமைச்சரிடம் தொலைபேசியில் பேசி அந்தத் தமிழர்களுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாத அளவில் சாப்பாடு, தண்ணீர் கொடுத்து பழையபடி அவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று கேட்டு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். டெல்லிக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குப் போகிறார்கள். அங்கே மத்திய அமைச்சரிடம் பேசி, இந்திய தூதரகத்தில் சொல்லி உடனடியாக பாதிக்கப்பட்டவர்களை இங்கே கொண்டுவந்து, அவர்களுக்கு இங்கே வேலைவாய்ப்பு அல்லது தொழில் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று மற்ற நாடுகளுக்குப் போவதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற அளவில் இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி, நகராட்சியாக உயர்ந்தபோது முதன்முதலாக நகர்மன்றத் தலைவராக இருந்த திரு. அற்புதம் அவர்களைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குக்கூட நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். அவருடைய மகனும் மருமகன் அமல்ராஜ் என்பவரும் சேர்ந்து சென்னை நகரில், துரைப்பாக்கம் பகுதியில் சிங்கப்பூருக்கு ஆட்களை அனுப்புகின்ற ஓர் அருமையான தொழிற்கூடத்தை ஏற்படுத்தி, அதில் பல இலட்ச ரூபாயை முதலீடு செய்து நடத்தி வருகிறார்கள். டெல்லியில் அப்போது ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருந்த திரு. அருணாசலம் அவர்களிடம் சொல்லி 'Licence' வாங்கி சிறந்த முறையில் அவர்கள் சிங்கப்பூருக்கு கட்டடத் தொழிலாளர்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 6 மாதங்களுக்கு முன்பாக என்னிடத்திலே வந்து அந்தத் தொழிற்கூடத்தை தொடங்கி வைக்கச் சொன்னார்கள். அப்போது 20 நபர்கள் அனுப்பப்பட்டார்கள்.

இப்போது 100, 200 என்ற அளவில் ஆட்கள் அனுப்பப்படுகிறார்கள். என்னுடைய கைராசிதான் காரணம் என்று பெருமையாக மாதா மாதம் அவர்கள் என்னிடத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதை நான் ஏன் முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சொல்கிறேன் என்றால், இதுபோன்ற எந்த ஏமாற்றும்செயலும் இல்லாமல், உண்மையாக தொழில் நடத்துகின்றவர்களுக்கு இந்த அரசாங்கம் ஊக்கம் அளிக்க வேண்டும். நம்முடைய அதிகாரிகள் அதைப் போய் பார்த்து மிகுந்த உற்சாகத்தோடு இப்படிப்பட்ட நல்லவர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம் என்று சொல்லி வந்திருக்கிறார்கள். முடிந்தால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதை ஒரு முறை பார்வையிட்டு அவர்களுக்கு முறையாக தமிழ்நாடு அரசின் 'Licence'-ஐ வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் 'Diploma Course' போன்று அங்கே நடத்துகிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், சிங்கப்பூரிலிருந்து பொறியாளர்களை வரவழைத்து முறைப்படி ஆட்களைத் தேர்வு செய்கிறார்கள். கேரளாவிலிருந்து செங்கற்கள் வருகின்றன. நம்முடைய செங்கற்கள் அதற்குப் பயன்படவில்லை என்று சொல்கிறார்கள். அதைப்போல கம்பி கட்டுவதற்கு முறையான பயிற்சி கொடுக்கிறார்கள். இரண்டு மாதங்கள் முறையான பயிற்சி கொடுத்து, நல்லமுறையில் மாதந்தோறும் ஆட்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே அவர்களுக்கு மாதம் 20,000 ரூபாய் சம்பளம். ஆண்டுதோறும் 20 சதவிகிதம் சம்பள உயர்வு. பத்தாண்டுக் காலத்திற்கு நிரந்தரமாக வேலை செய்வதற்கு உத்தரவாதம் என்றெல்லாம் உறுதி செய்யப்பட்டு, நல்லமுறையில் நடக்கின்ற அந்தத் தொழிற்கூடத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பார்வையிடுவதோடு, அதையும் அங்கீகாரம் செய்து, அதுபோன்ற ஒரு நல்ல சூழ்நிலையைத் தமிழகத்தில் உருவாக்கி, நம்முடைய தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பை வெளிநாடுகளில் உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் குறிப்பாக, மலேசியாவில் ஏமாற்றுகின்றவர்களால் ஏமாளிகளாக ஆக்கப்பட்டு, இன்று ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிற தமிழ் மக்களைப் பாதுகாத்து மீட்டுக்கொண்டு வரவேண்டும் என்கின்ற உள்ள உணர்வின் அடிப்படையில், மாண்புமிகு



உறுப்பினர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பெரியசாமி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கணேசன் அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் வேலாயுதன் அவர்களும் மற்றும் விசேஷ அனுமதி பெற்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அ.தி.மு.க. சார்பில் தாமரைக்கனி அவர்களும், இந்திய தேசிய லீக் சார்பில் லத்தீப் அவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஞானசேகரன் அவர்களும் பல நல்ல கருத்துக்களை இங்கே எடுத்துக்கூறி, வெளிநாட்டில் அவதிப்படுகின்ற தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற உணர்வை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மாத்திரம் அல்லாமல், வெளி மாநிலங்களில், வேறு பல நாடுகளில் இத்தகைய அல்லல் நம்முடைய தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து இருந்து வருகின்றது. குறிப்பாக, நான் அண்மையில் சிங்கப்பூர் சென்றிருந்தபோது, இப்படி இடைத்தரகர்களால் மோசடிக்கு ஆளாக்கப்பட்டு, வேலை தருவதாக அவர்கள் கூறியதை நம்பி, தங்களுடைய வீடுகளை, வீட்டிலேயிருந்த நகைநட்டுக்களையெல்லாம்கூட விற்று, அந்த இடைத்தரகர்களிடத்திலே பணத்தைக் கொடுத்து, அவர்களும் முறைப்படி இங்கிருந்து சிங்கப்பூருக்கு அவர்களை அழைத்துச் சென்று, அங்கே சென்றதும் அவர்களை நடுவீதியிலே விட்டுவிட்டு வந்து விட்டார்கள் என்றும், அப்படி நடுத்தெருவிலே இருக்கின்ற தமிழர்களைக் காணுங்கள் என்று என்னிடத்திலே அங்குள்ள தமிழர்கள் சொன்னார்கள். அதையொட்டி அங்கே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலேகூட நான் குறிப்பிட்டேன்; இதுகுறித்து சிங்கப்பூர் அரசிடம் நான் எடுத்துச் சொல்வேன் என்று குறிப்பிட்டேன். அவ்வண்ணம், 5-1-1999 அன்று சிங்கப்பூர் பிரதமர் கோ சோக் தாங் அவர்களை, அவர்களுடைய இல்லத்தில் சந்தித்து உரையாடியபோது, இந்த வேதனையான நிலையை அவரிடத்திலே எடுத்துரைத்தேன். அவரும் அதை மிகுந்த உருக்கத்தோடு கேட்டு, அதற்கான சட்டங்கள் கொண்டுவர வேண்டுமென்று நான் சொன்னதையும் ஏற்று, மத்திய அரசோடு கலந்து, நம்முடைய மாநில அரசும் இதைத் தடுப்பதற்கான சட்டங்களைக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை நான் அவரிடத்திலே எடுத்துக் காட்டியதையும் அவர்களும் வரவேற்று ஆவன செய்வதாகக் குறிப்பிட்டார்கள்.

அதன் பிறகு, 14-1-1999 அன்று நான் தமிழகம் திரும்பிய பிறகு, சிங்கப்பூர் பிரதமர் அவர்களுக்கு அதுகுறித்து கடிதம் எழுதினேன்.

அதற்கு 28-1-1999 அன்று சிங்கப்பூர் பிரதமர் எனக்கு எழுதிய பதில் கடிதத்தில், "வேலை தருவதாக உறுதிகூறி, பிறகு அவர்களைக் கைவிட்டுவிடும் மனசாட்சியற்ற Agent-களினால் உருவாக்கப்படும் பிரச்சினை பற்றி இங்குள்ள மனிதவள அமைச்சகத்தோடு நான் கலந்து பேசினேன். தமிழ்நாட்டில் வேலை தேடுவோரிடையே அவர்கள் எப்படித் தவறான வழிகளில் இட்டுச் செல்லப்படுகிறார்கள் என்பதைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது முக்கியமானதாகும்." தமிழ்நாட்டிலே அந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று அவர் குறிப்பிடுகிறார். தனது பங்கிற்கு சிங்கப்பூர் அரசு பொறுப்பில்லாத இதுபோன்ற செயல்களைத் தடுத்து நிறுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும், மேலும் அந்நடவடிக்கைகள் தொடரும் என்றும் அந்தக் கடிதத்திலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-50*

உதாரணமாக, வேலை தேடித்தரும் எல்லா நிறுவனங்களும் உரிமம் பெற்றாக வேண்டும். தவறான வழியிலே செல்லும் நிறுவனங்களுடைய உரிமங்கள் இரத்து செய்யப்படும். வெளிநாட்டிலேயிருந்து வேலை தேடி வருபவர்களுக்கு வேலைவாய்ப்பு பற்றிய தகவல், வேலை பெறுவதற்கு அவர்கள் யாரோடு தொடர்பு கொள்ள வேண்டும், யாருடைய உதவியை நாட வேண்டும், போன்றவற்றைப் பற்றி அறிவுரைகள் வழங்கப்படுகின்றன, அதுவும் தொடரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பின்னர் வேலை தேடி வருவோர் கைவிடப்படுவது குறைந்து இருக்கிறது எங்கள் நாட்டில் என்றும் அவர் எனக்கு எழுதியிருக்கிறார். ஆனால் மலேசியா நாட்டைப் பொறுத்தவரையில் இங்கே குறிப்பிடப்பட்ட இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நீண்டகாலத்திற்கு முன்பே மலேசியா நாடு ஒரு சட்டத்தை இயற்றி இப்படி Visa போன்ற உரிய அனுமதிகள் பெறாமல் அங்கே வந்து உலவிக் கொண்டிருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று அறிவித்த பிறகும்கூட இடைத்தரகர்களுடைய ஏமாற்று மொழிகளிலே மயங்கி வேலையில்லாத வேதனையிலே வாடிக் கொண்டிருக்கிற இங்குள்ள தமிழ் இளைஞர்கள், தமிழ் மக்கள் அவர்களை நம்பிச் சென்று இன்னமும் துயரத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். மலேசிய நாட்டிலே இப்படி அங்கேயுள்ள அகதி முகாம்களில் சிறைப்பட்டவர்களைப் போல தமிழக மக்கள் வாடிக் கொண்டிருக்கிற



செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. குறிப்பாக, நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'தீக்கதிர்' பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்தது. நான் பத்திரிகைகள் அனைத்தையும் தவறாமல் படிக்கின்ற காரணத்தால் உடனடியாக இதுகுறித்து நம்முடைய மத்திய அரசினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஜஸ்வந்த்சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் 'மலேசியாவிலுள்ள தமிழர்களைப் பற்றி ஒரு முக்கியமான பிரச்சினையை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மலேசியாவிலே அகதிகள் முகாமில் தமிழர்கள் துன்புறுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. நிறைய பணத்தை வசூல் செய்து கொண்டு வேலை வாங்கித் தருவதாக உண்மைக்கு மாறான நம்பிக்கைகளை ஏற்படுத்தி இந்தியர்கள், அதிலும் குறிப்பாக தமிழர்கள் பலர் Agent-களால் ஏமாற்றப்படுகிறார்கள். மலேசியாவிற்குச் சென்றதும் அந்த அப்பாவித் தமிழர்கள் அவர்கள் கையிலே பணி அனுமதிச் சீட்டு Work permit எதுவும் இல்லாததால் வேலை எதையும் பெறமுடியாமல் அவதிக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இந்தத் தமிழர்கள் அகதிகள் முகாம்களில் மாதக்கணக்கில் அவர்களிடம் செல்லுபடியாகும் ஆவணங்கள் எதுவும் இல்லாத காரணத்தால் துன்புறுகின்றார்கள். மலேசியாவிலே உள்ள அகதிகள் முகாம்களில் ஏராளமான இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் இதுபோல வாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை உடனடியாக மலேசிய அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று தமிழர்களை விடுவித்து விரைவில் அவர்கள் தாயகம் திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்வீர்களானால் நான் மிகுந்த நன்றி செலுத்துவேன், என்று வெளியுறவு அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். அதற்கு உரிய பதில் இன்னும் எதுவும் வரவில்லை.

அதைப்போலவே, இதேபோன்ற ஒரு கடிதம் இந்திய அரசின் வெளியுறவுத் துறைச் செயலாளருக்கும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. வெளிநாட்டிலே துன்பத்திற்கு இவர்களை எல்லாம் உள்ளாக்குகிற இடைத்தரகர்கள் மீது கடுமையான குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு காவல் துறை இயக்குநருக்கும் D.G.P.-க்கும் சொல்லப்பட்டிருக்கிறது. சிங்கப்பூர், மலேசியாவிற்கு வேலை தேடிச் செல்வதைப்போலவே, துபாய் போன்ற அரபு நாடுகளுக்குச் செல்லுகின்ற தமிழர்கள் பலரும் அவதிக்கு ஆளாகிறார்கள். நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல அவர்களுக்கு எல்லாம் Visa வாங்கித் தருவதாகவும், அல்லது இருப்பதாகவும் அல்லது அங்கே

வேலை கிடைக்கும், அங்கே சென்றால் குபேரர்களாகிவிடலாம் என்றெல்லாம் ஏமாற்று மொழிகளைச் சொல்லி அவர்களையும் அங்கே கொண்டுபோய் துபாயிலும் தமிழர்கள் பலர் இப்போது அவதிக்குள்ளாகியிருக்கின்றார்கள் என்ற செய்திகளும் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன. ஏதோ Collector வேலைக்குப் போவதைப்போல போய் அங்கே Bus Conductor வேலைகூட கிடைக்காத சூழ்நிலையிலே அவதிப்பட்டுக்கொண்டிருக்கிற தமிழர்களைப் பற்றி ஏராளமான செய்திகள் உண்டு.

அதைப்போல, வெளிநாடுகளில் மாத்திரமல்ல, நம்முடைய இந்தியாவிலே வெளி மாநிலத்திலே கர்நாடகத்திலே 19 தமிழர்களுடைய கதி என்ன ஆயிற்று என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். தமிழன் வெளி மாநிலத்திலும் கஷ்டப்படுகிறான்; வெளிநாட்டிலும் இன்றைக்குக் கஷ்டப்படுகிறான். அன்றைக்குக்கூட அவர்களுக்கெல்லாம் வேலை கிடைத்துவிட்டது என்று நம்முடைய நண்பர் திரு. தாமரைக்கனி சொன்னார். இன்று காலையிலே நான் அது பற்றி தொலைபேசி வாயிலாக விசாரித்தேன். இதுவரையிலே யாருக்கும் அங்கே எந்த மாற்று வேலையும் தரப்படவில்லை, அந்த அலுவலகத்திலேகூட இந்த 19 பேருக்கும் வேலை தரப்படவில்லை. நம்முடைய அ.தி.மு.க. அமைச்சர் இருக்கின்ற அந்த இலாக்காவின் மூலமாக இடப்பட்டிருந்த அந்தக் கட்டளை திரும்பப் பெறப்படவில்லை. அந்த 19 பேரும் வேலையில்லாமல்தான் கர்நாடக மாநிலத்திலே இன்றைக்கு இருக்கிறார்கள்.

முற்பகல் 10-55

அதுபோலவே இன்னொரு பிரச்சினை. அடிக்கடி நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள்கூட அறிக்கைகள் மூலமாக, அந்த வேதனையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். நானும் பலமுறை கர்நாடக அரசுக்கு அதைப் பற்றி எழுதியிருக்கின்றேன். உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நான் நம்புகின்றேன். 19-8-1997 அன்று கர்நாடக முதலமைச்சர் அவர்கள் வீரப்பனைத் தேடிப்பிடிக்கின்ற விஷயமாக இங்கே வந்து என்னிடத்திலே விவாதித்தபோதுகூட கர்நாடக சிறையிலே அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற 12 பெண்கள் உட்பட 48 தமிழர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நான் நேரிடையாகவே கேட்டுக்கொண்டேன். உடனடியாக ஆவன செய்வதாக அவரும் சொல்லிவிட்டுச் சென்றார். அவர்களை தடா கைதிகளாக



தேவையில்லாமல் அங்கே அடைத்து வைத்து வேதனைப் படுத்துகின்றார்கள், அவர்களை விடுவிக்க வேண்டுமென்று கர்நாடக முதலமைச்சருக்கு 9-10-1997-ல் ஒரு கடிதம், 21-11-1998-ல் ஒரு கடிதம், 11-1-1999-ல் ஒரு கடிதம், இறுதியாக நேற்றையதினம் 23-2-1999-ல் ஒரு கடிதம்; இத்தனை நேர்முகக் கடிதங்களை எழுதியிருக்கின்றேன். இதுவரையில் அவர்கள் அங்கேயிருந்து விடுதலை செய்யப்படவில்லை. எந்தக் குற்றமும் இல்லாமல், அந்தக் காட்டுப் பகுதியிலே அவர்கள் கிடைத்தார்கள், கர்நாடகப் போலீசார் அவர்களைக் கைது செய்தார்கள் என்ற ஒன்றைத் தவிர, பல ஆண்டுகளாக, அவர்கள் அங்கே சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் விடுவிக்கின்ற வழி தெரியவில்லை.

அதைப்போலவே தமிழ்நாட்டிலே மீன் பிடிக்கின்ற தமிழர்கள் இருக்கின்றார்களே அவர்களும் பக்கத்திலே இருக்கின்ற இலங்கை அரசால், இலங்கை இராணுவத்தால் எந்த அளவிற்கு அவதிப்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே நம்மால் முடியவில்லை. அவர்கள் தாக்கப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள், அவர்களது படகுகள் உடைக்கப்படுகின்றன. எனவே, தமிழன் எந்தத் திசைக்குச் சென்றாலும், அவன் சிங்கப்பூருக்குச் சென்றாலும், மலேசியாவுக்குச் சென்றாலும், துபாய்க்குச் சென்றாலும், கர்நாடகத்திலே சிக்கிக் கொண்டாலும், கடலிலே மீன் பிடிக்கச் சென்றாலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் துபாய் இங்கேயெல்லாம் தமிழன் வேதனைப்படுகின்ற ஒரு சூழ்நிலைதான் இப்போது இருக்கிறது. அதற்காக இந்த அரசு எவ்வளவோ முயற்சி எடுத்தும்கூட அந்த முயற்சிகள் மதிப்பற்று போகின்றனவா அல்லது பாரதி பாடியதைப் போல, "விதியே என் தமிழ் ஜாதியை என்ன செய்ய நினைத்தாய்" என்று பாரதி பாடினானே அதைப்போல நாமும் பாடிக்கொண்டே நம்முடைய காலத்தை முடித்துவிடுவதா என்கின்ற வேதனையான வினா, நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, மலேசியா அரசும், சிங்கப்பூர் அரசும் தமிழக சட்டமன்றத்திலே இங்கே, எழுப்பிய இந்தக் குரலை மதிக்கும் என்று நான் நம்புகின்றேன். அவர்கள்மீது நாம் குற்றம் சொல்வதற்கும் எதுவுமில்லை. இங்கே இருக்கின்ற தமிழன், தமிழனை ஏமாற்றி அழைத்துச் செல்லுகின்றான். ஏமாளிகள் ஏமாற்றுக்காரர்களிடத்திலே ஏமாறிக்கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்திலேயே சாமியார்களிடத்திலே ஏமாறுகின்ற தமிழர்கள் அவர்களுடைய விபூதி, குங்குமம் இவற்றைப் பார்த்து ஏமாறுகின்ற தமிழர்கள், அவர்களுடைய வாக்குகளைக் கேட்டு ஏமாறுகின்ற

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 பிப்ரவரி 24

தமிழர்கள், ஒரு சாமியார் பிடிப்பட்டால் அதைப் பார்த்துக்கூட அடுத்த சாமியாரிடம் எச்சரிக்கையாக இல்லாத தமிழர்கள் இங்கே இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பணம் வருகின்றது. பொருள் கிடைக்கிறது, வேலைவாய்ப்பு கிடைக்கிறது. வாழ்க்கையில் நிம்மதி ஏற்படும் என்ற நம்பிக்கையூட்டப்படும்போது ஏமாறுவது இயல்புதான். அவர்கள் ஏமாந்தார்கள் என்பதற்காக அவர்களை நாம் தண்டிக்க முடியாது. அவர்களை நாம் விடுவித்தாக வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தாக வேண்டும். எனவே இங்கே, இந்தச் சட்டமன்றத்திலே எழுப்பியுள்ள இந்தக் குரலோடு என்னுடைய குரலையும் இணைத்து இருக்கின்றேன். கர்நாடகத்திலே தடா கைதிகளாக சிக்கிக் கொண்டிருக்கின்ற தமிழர்களை விடுவியுங்கள் என்று நான் கர்நாடக முதலமைச்சரை மீண்டும் இந்த அவையின் மூலமாக கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே இலங்கையிலே இருக்கின்ற இராணுவத்தினர், தமிழக மீனவர்களை அடிக்கடி சுட்டுக் கொல்வதை, படகுகளைக் கைப்பற்றுவதை, உடைத்தெறிவதை விட்டொழியுங்கள் என்று இலங்கை அரசை நான் இந்த அவையிலேயிருந்து மத்திய அரசின் வாயிலாக கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, மலேசியா, சிங்கப்பூர், துபாய் போன்ற இடங்களுக்கு ஏமாற்றப்பட்டு அழைத்துச் செல்லப்படுகின்ற தமிழர்களை, அந்த ஏமாற்றத்திலிருந்து மீட்பதற்காக தமிழக அரசினுடைய காவல் துறை கடுமையாக தன்னுடைய பணியை முடுக்கிவிட்டாலும்கூட, அதற்கு ஆதரவாக சட்டங்களை இயற்றுவதற்கு, ஏனென்றால் வெளிநாட்டு தொடர்புடைய சட்டங்கள் என்ற காரணத்தினால் மத்திய அரசின் ஒத்துழைப்பு தேவை என்பதை நான் உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு டெல்லி செல்லும்போது அங்கே இருக்கின்ற வெளி விவகாரத் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று நம்முடைய பெரியசாமியும் சொன்னார், தாமரைக்கனியும் சொன்னார். நான் இப்பொழுது எப்படி வெளி விவகாரத் துறையைப் பார்க்க முடியும்? அங்கு எத்தனையோ விவகாரங்கள் இப்போது? (சிரிப்பு) இந்த விவகாரத்திலே, நான் இந்த விவகாரத்தை எடுத்துக்கொண்டு போனால் அது எடுபடுமா, இல்லையா என்பது வேறு விஷயம். இருந்தாலும்கூட முடிந்த வரையிலே முயற்சிப்பேன். இந்த அவையிலே இன்றைக்கு எழுப்பியுள்ள இந்தக் குரலேகூட அவர்களுடைய காதுகளிலே விழும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.



1999 பிப்ரவரி 24] [கலைஞர் மு. கருணாநிதி]

இல்லாவிட்டால், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒருநாள் வெளி மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் வேதனைப்படுகின்ற தமிழர்களை விடுவிக்கின்ற நாள் என்று ஒரு நாளை நாம் எல்லாம்கூட கொண்டாடலாமா என்றுகூட யோசித்துக் கொண்டிருக்கிறேன். அதை அனைத்துக் கட்சிகளையும் கலந்து அப்படி ஒரு ஏற்பாட்டையும் அரசின் சார்பாகச் செய்யலாம் என்று நான் கருதிக் கொண்டிருக்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி). நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையிலே செயல்படுகின்ற ஒரு நிறுவனத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதைப்பற்றியும் கவனித்து, அதைப் பின்பற்றி மற்ற நிறுவனங்கள் செயல்படுவதற்கான ஆக்கபூர்வமான பணிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியையும் தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-00*

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொல்லும்போது, சாமியார், விபூதி என்று சொன்னார்கள். அது இந்துக்கள் மனதைப் புண்படுத்துகிற அளவில் இருக்கும். அதை நீக்கினால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஓர் இந்து. என்னுடைய மனது புண்படவில்லை. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Point. அதிலே ஏமாற்றக்கூடிய சாமியார்கள் என்று சேர்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துக்களைப் பண்படுத்த முயலுகிற ஒவ்வொரு முயற்சியும் இந்த மாதிரித்தான் புண்படுத்தப்பட்டுகொண்டே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) சேலம், நாமக்கல் மாவட்டங்களில் ஜவ்வரிசி மற்றும் சாயத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. சேலம், நாமக்கல் மாவட்டங்களில் உள்ள ஜவ்வரிசி மற்றும் சாயத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி.ஆர். சுந்தரம், திரு. கே. சுப்பராயன், திரு. சி. ஞானசேகரன், திரு. ஐ. கணேசன், திரு. ஆர்.ஆர். சேகரன், திரு. பி. வெங்கடசாமி, திரு. இரா. தாமரைக்கனி, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் ஆகியோர்

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களை முதலில் பேச அழைக்கின்றேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தருமபுரி, நாமக்கல், ஈரோடு போன்ற மாவட்டங்களில் இருக்கின்ற நூற்றுக்கணக்கான ஜவ்வரிசி ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. பல்வேறு காரணங்களைக் கொண்டு இந்த ஆலைகள் மூடப்பட்டு இருந்தாலும், அதிலே பணிபுரிந்து கொண்டிருக்கின்ற 25 இலட்சத்திற்கும் மேலான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக ஜவ்வரிசிக்குப் பயன்படுத்தக் கூடிய மரவள்ளிக் கிழங்கின் விலை மிகப் பெரிய வீழ்ச்சியைக் கண்டிருக்கிறது. கரும்புக்கு விலை நிர்ணயம் செய்து உதவிய அரசு, மரவள்ளிக்கிழங்கிற்கும், ஒரு சில பகுதிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தத் தொழிலின் மூலப் பொருளுக்கும் விலை நிர்ணயம் செய்து உதவ வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக நீதிமன்றங்களின் தலையீடு எல்லாவிதத்திலும் நம்முடைய வாழ்க்கையை பாதித்துக் கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். இப்போதுகூட Sterlite ஆலையை மீண்டும் திறப்பதற்கான உத்தரவை நீதிமன்றம் வழங்கி இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே இப்படி மாறி மாறி வருகின்ற சூழ்நிலைகள் அங்கே பணிபுரிகின்ற தொழிலாளர்களை நிச்சயமாகப் பாதிக்கின்றன. அன்புத் தலைவர் மூப்பனார் அவர்கள்கூட தனி நீதிமன்றங்களை அமைக்கின்றபோது, தமிழக அரசின் சட்டத் துறை விழிப்போடு செயல்பட வேண்டும் என்ற அச்சத்தைச் சொன்னார்கள். அத்தகைய விழிப்போடு சட்டத் துறை செயல்பட்டு, இத்தகைய நீதிமன்ற உத்தரவுகள் மூலம் மூடப்படாத ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அப்போதுதான் தடையாணை போன்ற பல்வேறு நடைமுறைகளின் மூலம் இத்தகைய நிலைமைகள் உருவாகாமல் நிச்சயமாக தடுக்க முடியும்.

அதேபோல் சாயத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், குடிசைத் தொழிலாக, சிறு தொழிலாக பல்வேறு மாவட்டங்களிலே சாயத் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பொதுவாக ஜவுளி மற்றும் துணித் தொழிலைப் பொறுத்தவரையில் time-bound orders, இந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளே Supply செய்ய



வேண்டுமென்ற ஒரு கட்டாயம் நெசவாளப் பெருமக்களுக்கு இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையிலே திடீரென்று சாயத் தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாகவோ அல்லது நீதிமன்றம் மூலமாகவோ மூடப்படும்போது பல நிலைகளிலே நெசவாளப் பெருமக்களும், ஏழை எளிய மக்களும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இந்த நிலையைப் போக்குவதற்கு தமிழக அரசு விழிப்போடு செயல்பட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் மூலமாக வெளியேற்றப்படுகின்ற கழிவு நீரை சுத்திகரிப்பதற்கு பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. திருவனந்தபுரத்திலேகூட இத்தகைய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் தீர்வான ஒரு முடிவு வருகிறபோது மற்ற சுத்திகரிப்பு நிலையங்களுக்கு உதவுவது போல தமிழக அரசும், மத்திய அரசும் subsidy வழங்கி ஊக்குவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், மின் இணைப்புத் துண்டிப்பு போன்ற பல்வேறு நிர்ப்பந்தங்கள் காரணமாக இந்தத் தொழிற்சாலைகள் மூடப்படும்போது, கடைசியாக, ultimate-ஆக அங்கே இருக்கின்ற தொழிலாளர் பெருமக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள், ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இதிலே முதலாளிகள் பாதிக்கப்பட்டாலும்கூட, அங்கே வேலை செய்கின்ற தொழிலாளிகள் பாதிக்கப்படும்போதுதான் அங்கேயிருக்கின்ற யதார்த்த நிலைமை மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. ஆகவே இத்தகைய நிலைமை உருவாகாமல் இருப்பதற்கு தமிழக அரசின் சட்டத் துறை சற்று விழிப்போடு செயல்பட்டு பல்வேறு முறைகளில் சிறந்த ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-05*

பொதுவாக கிராமப்புற மக்களுக்கு பயன்படக்கூடிய Mini bus போன்ற அருமையான திட்டங்களில்கூட நீதிமன்றம் தலையிட்டு இன்றைக்குச் செயல்பட முடியாமல் தடுத்து விடுகிறது. அத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு தமிழகத்தினுடைய சட்டத் துறை மிகவும் விழிப்போடும், அதேநேரத்தில் சுறுசுறுப்போடும் செயல்பட்டு ஒரு சிறந்த நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

[1999 பிப்ரவரி 24

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற உத்தரவின் காரணமாக சேலம் மற்றும் ஆத்தூர் பகுதிகளில் கிட்டத்தட்ட 90-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. நீதிமன்றம், வந்த முறையீட்டின் அடிப்படையில் அத்தகைய தீர்ப்பை அளித்திருக்கலாம். ஆனால் நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் ஏற்படுகிற சில விளைவுகள் நம்முடைய தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் மூடப்பட்டிருக்கின்ற ஏறத்தாழ 90-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில் வேலைசெய்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இப்போது வேலையிழந்து இருக்கிறார்கள். ஒருபுறம் குச்சிக்கிழங்கை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் குச்சிக்கிழங்கின் விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் வேலையிழந்து விட்டார்கள். மறுபுறம் அந்தத் தொழிற்சாலைகளை நம்பி செய்யப்பட்ட குச்சிக்கிழங்கு விவசாயம், இப்போது விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டு அவர்கள் ஒருபுறம் சென்னையிலே உண்ணாவிரதம் இருந்து, தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தியதை நாம் பார்க்கிறோம். ஆகவே நீதிமன்றத் தீர்ப்பு வந்துவிட்ட இந்த நிலையில் தமிழ்நாட்டினுடைய பொருளாதார வாழ்வில் விவசாயிகளும் சரி, தொழிலாளர்களும் சரி, பாதிக்கப்பட்டிருப்பது என்பது தமிழ்நாட்டின் பொருளாதார அடிப்படையை பாதிக்கிற ஒரு விஷயமாக அமைந்திருப்பதால், மாநில அரசு இதை ஒரு போர்க்கால அவசரமாக உணர்ந்து Court-லே Special Petition போட்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

நான் இதிலே தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், இந்த ஜவ்வரிசி ஆலைகள், சுத்திகரிப்பு நிலையங்களை தனித்து அமைப்பதிலே மானிய உதவிக்கு இப்போது வழிவகை செய்யப்படவில்லை. Common Effluent Treatment Plant இருந்தால் அதற்குரிய முறையில் 25:25 என்ற முறையில் மத்திய மாநில அரசுகள் மானியம் வழங்குகின்றன. ஆனால் தனிப்பட்ட முறையில் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்குரிய பொருளாதார வலிவற்ற நிலையில் உள்ள இத்தகைய ஜவ்வரிசி ஆலைகளை எல்லாம் மாநில அரசேகூட பொறுப்பு எடுத்து அத்தகைய சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்துக் கொடுத்து, தவணை முறையிலே அவர்களிடமிருந்து பணத்தைப் பிடித்தம் செய்வதற்குரிய வழிவகைகளை உருவாக்குவதுகூட பொருத்தமாக இருக்கும் என நான் சொல்லுகின்றேன். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பணம் இல்லை என்று சொல்கிறார்கள். பணம் இல்லை என்றாலும்,



1999 பிப்ரவரி 24] [திரு. கே. சுப்பராயன்]

மனம் இருந்தால் பணத்தை உருவாக்கிக்கொள்ள இயலும். எனவே அத்தகைய நிலையிலே செய்யவில்லையென்றால், தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்த நலன் பாதிக்கப்படும் என்பதால் இங்கே நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல பள்ளிப்பாளையத்திலே இப்போது பிரச்சினை எழுந்திருக்கிறது. பொதுவாக சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படாததை மட்டும் நீதிமன்றம் கவனிக்கிறதே தவிர, சமூகத்தில் அந்த நீதி வழங்கப்படுவதால் ஏற்படுகிற எதிர் விளைவுகளைப் பற்றி நீதிமன்றம் கவலை கொள்ளவில்லை. இந்த எதிர் விளைவுகளைப் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவ்ருவதில் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தவறிவிட்டது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். நீதிமன்றத்திற்கு முன்னால் இந்தத் தீர்ப்பால் ஏற்படுகிற பிற பல விளைவுகளை எடுத்துச்சொல்வதில் முழுக்கவனத்தை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும். அப்படி மேற்கொண்டு, மீண்டும் அந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கும், குச்சிக் கிழங்கை நம்பி விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சட்ட ரீதியான உத்திகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதில் தனியார் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் மாநில அரசு மானியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சேலம், தருமபுரி, நாமக்கல், ஈரோடு, விழுப்புரம், வேலூர் திருவண்ணாமலை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் 800 ஜவ்வரிசி ஆலைகள் இருக்கின்றன. ஆனால் சேலம், ஆத்தூர் பகுதிகளில் 58 ஜவ்வரிசி ஆலைகள் மாசுக் கட்டுப்பாட்டுத் துறையினால் மூடப்பட்டிருக்கின்றன, Supreme Court உத்தரவின் அடிப்படையில். இந்த ஆலைகளுக்குத் தேவையான மரவள்ளிக் கிழங்கை நேரடியாகவும், மறைமுகமாகவும் பயிர் செய்யக்கூடியவர்கள் 30 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இதிலே மரவள்ளிக் கிழங்கிற்கு விலையும் கிடையாது. முன்னால் மூட்டை ஒன்றுக்கு ரூ. 150 என இருந்தது. ஆனால் இப்போது ரூ. 75 ஆக இருக்கிறது. இதனால் மரவள்ளிக் கிழங்கு பயிரிடுகிற விவசாயிகள் உரிய விலை கிடைக்காமல் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அரசாங்கம் இதற்கான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

[திரு. இரா. தாமரைக்கனி] [1999 பிப்ரவரி 24

*முற்பகல் 11-10*

ஜவ்வரிசி ஆலைகள் மூடப்பட்டிருப்பதால் மரவள்ளிக்கிழங்கு சம்பந்தப்பட்ட அலுவலகமே இப்போது மூடப்பட்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கு பல இலட்சம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட மரவள்ளிக்கிழங்கினால் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் மாநில அரசினுடைய அலட்சியம். ஆகவே, விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஜவ்வரிசி ஆலைகளில் வெளியேறும் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யாததினால் 100 ஆலைகளை மூடுவதற்கு இதுவரைக்கும் உத்தரவு போட்டிருக்கிறது. Supreme Court. அதுமட்டுமல்லாமல் சுத்திகரிப்பு நிலையம் எந்த வகையில் அமைக்கப்பட வேண்டும் என்பது குறித்து திருவனந்தபுரத்தில் உள்ள மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் தொடங்கிய ஆராய்ச்சி இன்னும் முடியவேயில்லை. இது நீதிமன்றத்திலே விசாரணைக்கு வரும்போது அரசு உரிய கவனம் செலுத்தாத காரணத்தினால் கருத்துக்கள் சொல்லாத காரணத்தால் Court-லிருந்து இந்தமாதிரி உத்தரவு வந்திருக்கிறது. அதனால் நீதிமன்ற உத்தரவைக் காட்டி ஜவ்வரிசி ஆலையிலே வேலை பார்க்கும் 25 இலட்சம் தொழிலாளர்கள் வீட்டிற்குள்ளே மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு எல்லாம் cut பண்ணி விட்டார்கள். ஆகவே, இவர்களுக்கெல்லாம் மின் இணைப்பு கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சுத்திகரிப்பு செய்யாத ஆலைகளுக்கும் போதிய அவகாசம் கொடுக்க வேண்டும். தொழிலாளர் குடும்பங்களுக்கு ஏற்கெனவே சொன்னமாதிரி மின்சார வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். எந்தவிதமான இயந்திரங்களை வைத்து சுத்திகரிப்பு செய்ய வேண்டும் என்பதற்கு அரசே ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கெனவே ஆலைக்கு சுத்திகரிப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு அவை சரியான முறையிலே வேலை பார்க்காத காரணத்தினால் அரசாங்கமே இயந்திரம் வாங்கிக் கொடுத்தால் அதை நாங்கள் பொருத்துவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று ஜவ்வரிசி ஆலையினுடைய owner-கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, உடனே மாசுக் கட்டுப்பாட்டுத் துறையின் மூலமாக உள்ள தடையை Court மூலமாக நீக்கி அவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்து மீண்டும் வேலை தொடங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு



1999 பிப்ரவரி 24] [திரு. இரா. தாமரைக்கனி]

நஷ்டஈடும் கொடுக்க வேண்டும். மரவள்ளிக்கிழங்கிற்கு உரிய விலையும் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் எனக் கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குச்சிக்கிழங்கு என்றும், கேரளாவில் கப்பக் கிழங்கு என்றும், மரவள்ளிக்கிழங்கு என்றும் அழைக்கப்படுகிற இந்தக் கிழங்கு இப்போது பிரச்சினைக் கிழங்கு என்றும் பெயருக்கு ஆளாகியிருக்கிறது என்பதனை சொல்லும்போது வேதனையாக இருக்கிறது. ஒரு விவசாயி கிட்டத்தட்ட ஓராண்டுகாலம் கண்ணை இமைகாப்பதுபோல காத்தும், அந்தக் கிழங்கைப் பிடுங்குவதற்கான கூலியைக்கூட கொடுக்க இயலாமல் தற்போது சேலம், தருமபுரி, நாமக்கல், ஈரோடு, திருச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். சென்ற ஆண்டு, 75 கிலோ கொண்ட ஒரு மூட்டைக் கிழங்கிற்கு 150 ரூபாய் விலை இருந்தது. தற்போது ஒரு விவசாயி ஓராண்டு காலத்திற்குப் பிறகு அந்தக் கிழங்கை பிடுங்கக்கூட தயாராக இல்லை. Tractor-ஐப் போட்டு ஓட்டி அப்படியே கிழங்கைப் பிடுங்கி மாட்டுக்குப்போட வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு கிலோ கிழங்கு 40 பைசாவிற்கு விற்கிறது என்றால் அதனுடைய பிடுங்கு கூலிகூட விவசாயிக்குக் கிடைக்கவில்லை என்பதை இந்த அரசு உணர வேண்டும். எப்படி கரும்புக்கும் நெல்லுக்கும் குறைந்த விலையை நிர்ணயித்திருக்கிறார்களோ அதேபோல இந்தக் கிழங்குக்கும் ஒரு குறைந்த விலையையாவது நிர்ணயித்து, அந்த விவசாயிகளுடைய கண்ணீரைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று ஜவ்வரிசி உற்பத்தி ஆலைகள் கிட்டத்தட்ட 800-க்கும் மேலே தமிழ்நாட்டிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே 100 ஆலைகளுக்கு மேலே மாசுக் கட்டுப்பாடு துறையின் மூலமாக மூடப்பட்டு 40 இலட்சம் ஏழை எளியவர்களுக்கு வேலை கிடைக்காமல் அவதியுறக்கூடிய இன்னல் இப்போது ஏற்பட்டிருக்கிறது. எப்படி தோல் பதனிடும் தொழிலுக்கு மத்திய-மாநில அரசுகள் மானியம் வழங்கியும், மற்றும் வங்கிக் கடன் கொடுத்தும் உதவுகிறார்களோ அதே வழியிலே ஏழை விவசாயிகள் தங்களுடைய உழைப்பால் உற்பத்தி செய்யக்கூடிய ஜவ்வரிசித் தொழிலுக்கும் கருணை அடிப்படையிலே, அவர்களுக்கு

உதவியாக மத்திய மாநில அரசுகள் 50 சதவீதமும், வங்கிக் கடன் 50 சதவீதமும் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாற்பதாயிரத்திற்கும் மேலே, என்னுடைய தொகுதியிலே, நாமக்கல் மாவட்டத்திலே......

முற்பகல் 11-15

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, இந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்துவதற்காக தோல் தொழிற்சாலைகளுக்கு அரசு மானியம் கொடுக்கிறது என்ற பொருளிலே அவர்கள் பேசினார்கள். அந்தமாதிரியான ஒரு சட்டம் இருக்கிறது. ஆனால் இதுவரையில் எந்தத் தோல் தொழிற்சாலைக்கும் அரசு மானியம் வழங்கவில்லை. காரணம் அதை ஒரு நிபந்தனையின் அடிப்படையிலே மாநில அரசு கொடுப்பதாகச் சொல்கிறார்கள். மாநில' அரசு கொடுக்கிற அதே அளவு, மத்திய அரசும் அதற்கு மானியம் வழங்க வேண்டும். மாநில அரசு கொடுக்காவிட்டால் மத்திய அரசு வழங்காது என்ற நிலை இருக்கிறது. மாநில அரசு யாருக்கும் கொடுக்கவில்லை. அதனால், இன்றுவரையிலே சரியான ஒரு தீர்வு ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல தமிழ்நாட்டிலே TALCO நிறுவனத்தின் மூலமாக Common Effluent Treatment plant (C.E.T.P.) கிட்டத்தட்ட 6, 7 இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், தோல் பதனிடும் தொழிற்சாலை நடத்துகின்றவர்களுக்கு மாநில அரசினுடைய மானியம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**திரு.ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் பேசி முடித்துவிட்டீர்களே, அப்புறம் என்ன? (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இப்போதுதான் நான் பேச ஆரம்பிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் பேச ஆரம்பிக்கிறீர்களா?



**திரு. ஐ. கணேசன்:** ஆம். இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீண்ட நேரம் ஆகிவிட்டது நீங்கள் பேசத் தொடங்கி உங்களின் நீலத் துண்டு நீண்ட நேரமாக என் கண்ணில் தெரிந்து கொண்டிருக்கிறது.

**திரு. ஐ. கணேசன்:** இதேமாதிரி வேண்டுமானால், தங்களுக்கு தங்களின் பிறந்த நாளன்று அன்பளிப்பாக அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்களே, மிக வேதனையான பிரச்சினை. ஏழை எளிய குடும்பங்கள் இன்று பட்டினியாகக் கிடக்கின்ற ஓர் அவலநிலை எங்கள் பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய கொடுவாள் வீச்சால் அவர்கள் குற்றுயிரும் கொலை உயிருமாகக் கிடக்கிறார்கள் என்பதனை மட்டும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல சாயப் பட்டறைத் தொழிற்சாலைகள். எங்களுடைய பகுதிகளாகிய, குமாரபாளையம், பள்ளிபாளையம், எடப்பாடி, திருச்செங்கோடு ஆகிய பகுதிகளிலே மிக மிகக் கொடூரமான நடவடிக்கையால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதற்கொரு விடிவினை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து எடுக்க வேண்டும். தனியார் நடத்தும் சாயப் பட்டறைகளுக்குக் மத்திய அரசு 25 சதவீதம், மாநில அரசு 25 சதவீதம், வங்கிக் கடன் 50 சதவீதம் அளித்தும் சாயப் பட்டறைத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவுத் துறையிலே வழங்கப்படுகின்ற சலுகைகள் கிடைக்க இந்த அரசு பாடுபட வேண்டும்.

அதேபோல கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படக்கூடிய சாயப் பட்டறைகளை வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிக் கொடுப்பதைப் போல இடத்தைத் தேர்வு செய்து, நீர் மின்சாரம், தந்து மற்றும் அதற்குண்டான பெரிய இயந்திரங்கள் ஆகிய அனைத்தையும் அரசாங்கம் பொறுப்போடு பொருத்தித்தந்து, இந்தத் தொழில் செய்பவர்களிடம் ஒப்படைத்தால்தான் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் எண்ணக்கூடிய அந்த எண்ணம் நிறைவேறும்.

நீர், நிலம், காற்று ஆகியவை மாசுபடுவதை எங்களுடைய இயக்கம் நிச்சயமாக ஆதரிக்காது. இருந்தாலும் இலட்சக்கணக்கான ஏழைகள் தற்போது பாதிக்கப்பட்டிருப்பதை அரசு உணர்ந்து

[திரு. ஐ. கணேசன்] [1999 பிப்ரவரி 24

அவர்களுக்கு காலக் கெடுவினை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்பதனை இந்த அவையிலே சொல்லி, பரிதாபத்திற்குரிய அந்த சாயத் தொழிலை, கலைஞர் அவர்கள் மிகுந்த கருணை உள்ளத்தோடு பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால்,

"சாய்ஞ்சா சாயரப் பக்கம் சாயர செம்மறியாடுகளா;
உங்க சாயம் வெளுத்துப் போச்சு பழைய ஏடுகளா"

என்று பட்டுக்கோட்டையாரே பாடியிருக்கிறார்.

முற்பகல் 11-20

இன்று பெண்கள் சேலையை எடுப்பதற்காகக் கடைக்குச் சென்றால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான சேலைகளைப் புரட்டிவிட்டு அந்தக் கடையிலே மற்றொரு பெண்மணி கட்டிவரக்கூடிய சேலையைப் பார்த்து அந்தச் சேலை எனக்கு வேண்டும் என்று கேட்கக்கூடிய அளவிற்கு ஜவுளிக்கடைகளிலே வியாபாரம் இருக்கிறது. சாயத் தொழிற்சாலைகளை மூடிவிட்டால் இந்தப் பெண்மணிகள் வெள்ளையாகத்தானே அலைவார்கள். இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? தமிழ்நாட்டில் பெண்கள் வெள்ளையாக அலைவதை நம்முடைய அரசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாயத் தொழிற்சாலைக்கும் இதற்கும் என்ன தொடர்பு?

**திரு. ஐ. கணேசன்:** சாயப் பட்டறையிலிருந்துதான் தலைவரே. நீலம் வரும்; மஞ்சள் வரும்; சிவப்பு வரும்; பச்சை வரும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கும் சேலைக்கும் என்ன தொடர்பு இருக்கிறது?

**திரு. ஐ. கணேசன்:** அந்தத் தொழிற்சாலையிலிருந்துதான் சேலைக்குப் போடுகிற கலர்கள் வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் வேட்டியைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சரி. இந்தமாதிரி வெள்ளையாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.



1999 பிப்ரவரி 24]

**திரு. ஐ. கணேசன்:** ஆகையினாலே இது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தாய்மார்களையும் பாதிக்கக்கூடிய பிரச்சினை. இலட்சக்கணக்கான தொழிலாளர்களை பாதிக்கக்கூடிய பிரச்சினை; அவர்களின் வயிற்றுப் பிரச்சினை. எனவே நம்முடைய அரசு தயவுசெய்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர் நம்முடைய கருணையுள்ளங்கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, இந்தப் பிரச்சினையை முடிக்க வேண்டும். அதேபோல சாயப் பட்டறைத் தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பத்தே பத்து நிமிடம் சந்தித்துப் பேசுவதற்கான அனுமதியை நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான... '

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள் என்று சொன்னால் பேசிக்கொண்டே போகிறீர்களே?

**திரு. ஐ. கணேசன்:** சரி, பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தோடு பேச்சை முடியுங்கள்

**திரு. ஐ. கணேசன்:** நம்முடைய முதலமைச்சருக்குக் கெட்ட பெயர் வரக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் வராது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர். ஏற்பாடு செய்வார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஏற்பாடு செய்தால் நன்றி. ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, I would like to bring to the notice of the Hon. Chief Minister, the difficulties in the implementation of the Pollution Control Board's order. There are a large number of

[Thiru B. Venkatasamy] [1999 பிப்ரவரி 24

Tapie'ca factories at Salem, Erode and other surrounding districts. Nearly 300 dyeing factories are situated at Kumarapalayam and Pallipalayam in Namakkal district. All these factories have been now closed. Actually, they come under the category of cottage industry. These factories are situated by the side of their houses. How can these factories be separated from their houses? I have seen these factories personally. They are living in their houses. They operate these factories from their houses. All these days, the Pollution Control Board has completely neglected this area. They should have given proper instructions in the beginning itself to those who have started these factories. They have not done so. Lakhs of people are involved in these dyeing factories. Now, all those who were working there, are unemployed. It has become a social problem. I request the Hon. Chief Minister to see that this problem is solved.

Regarding Kumarapalayam, I came to know that Rs.6 crores have been sanctioned to the local Municipality for implementation of the pollution control project in association with the Pollution Control Board. It is learnt that Rs.5½ crores have been sanctioned for Pallipalayam, for controlling pollution from these dyeing factories. It was planned to flush out the polluted water from these factories. However, this scheme has not been implemented by the Town Panchayat. That is the reason why all these factories have been closed. I request the Hon. Chief Minister to see that the dyeing factories which have been closed by the order of the Government, are re-opened. Nearly one lakh people have been displaced, due to the closure of these factories. Weavers are not getting threads. Powerlooms are kept idle. I visited that place last week. They were telling me that all other business have come down in these areas.

*முற்பகல் 11-25*

The business of even the tea shops has come down because there is no economic activity in that area. You must, therefore, give some time for those people to set up treatment plants. The situation is not due to the fault of these people alone. Even though the Court has given the verdict, the Public Prosecutor must in the interest of the poeple get some time from the Court to implement the treatment scheme since nearly 2 lakh people are unemployed now and it has become a social problem...



1999 பிப்ரவரி 24]

*(சில உறுப்பினர்கள் மாண்புமிகு அமைச்சர்களின் இருக்கைகளுக்கு அருகில் நின்று கொண்டிருந்தார்கள்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வாறு உறுப்பினர்கள் குறுக்கிடக்கூடாது.

**THIRU B. VENKATASAMY:** I request that the Pollution Control Board should see that whenever industries are started, instructions are properly given to them in the first instance itself. Without that how can they be allowed to start new industries. You have allowed them to start the industries and now if they are not allowed to continue, those people have to starve. The Pollution Control Board should hereafter insist on getting prior permission for starting such industries. Even though there is a case before the Supreme Court, I request the Hon. Chief Minister to consider the issue on humanitarian grounds and see that at least 6 months or one year time is given to the people in Pallipalayam and Kumarapalayam areas so that the treatment plant could be set up. It can be set up with the Government help to the tune of Rs.6 crores in addition to the Panchayat's scheme so that people of that area get employment again. I request the Hon. Chief Minister to consider this.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of order?

**திரு. ஆர். ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜவ்வரிசித் தொழில் தொடர்பாக, சேலம் மாவட்டத்திலே இன்றையதினம் சுமார் 1000 பேர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of order என்ன என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அது தொடர்பாகச் சில . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன். தீர்மானம் கொடுத்த எல்லோருடைய பெயர்களையும் வாசித்துவிட்டேன். கட்சிக்கு ஒருவர் என்று ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும். உங்களுடைய

கொறடாவோ, துணைக் கொறடாவோ ஒழுங்காக வேலை பார்ப்பதில்லை. என்னிடத்தில் வந்து, யார் யார் பேசுவார்கள் என்று முதலிலேயே சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாமல் நான் ஒருவரைக் கூப்பிட்ட பிறகு, இல்லை, இல்லை, நான்தான் அந்த மாவட்டம், நான்தான் பேசுவேன் என்று வந்தால் என்னாலே சபையை நடத்த முடியாது. (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசுங்கள்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஜவ்வரிசித் தொழில் என்பது விவசாயினுடைய கண்ணோட்டத்திலே அணுகக்கூடிய ஒரு பிரச்சினை. சென்ற ஆண்டு இந்த ஜவ்வரிசி மூட்டை ஒன்றுக்கு 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை விலையிருந்தது. ஆனால் கடந்த மாதத்திலே 40 ரூபாய்க்கு அதனுடைய விலை குறைந்துவிட்டது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் முத்தரப்புக் கூட்டம் ஒன்றை அமைத்து அதில் எல்லோரையும் அழைத்துப் பேசி, மூட்டை ஒன்று 100 ரூபாய் அளவுக்கு விற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஆனால் 2, 3 நாட்களிலே இந்த ஜவ்வரிசி ஆலைகள் மூடப்பட்டதால் மீண்டும் அதனுடைய விலை வீழ்ச்சியடைந்துவிட்டது. கிட்டத்தட்ட 50 சதவீதம் கிழங்குதான் அறுவடையாகியிருக்கிறது. பாக்கியுள்ள கிழங்குகள் இன்னும் நிலத்திலேயே இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையிலே ஆலைகள் மூடப்பட்டுள்ளதால் விவசாயிகள் மிகவும் கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டு, மிகவும் வறுமையான ஒரு சூழ்நிலையை அடையக்கூடிய துர்பாக்கியமான நிலை ஏற்பட்டிருக்கிறது. சுமார் 20 இலட்சம் விவசாயிகள் எங்களுடைய மாவட்டங்களிலே இந்தப் பயிர் செய்கிறார்கள். 840 கிழங்கு மில்கள் இருக்கின்றன. ஆகவே, அரசு இதனை ஒரு சமுதாய சிந்தனையோடு கருத்திற்கொண்டு, மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்த வழக்கிலே அவர்களுக்குக் கால அவகாசம் வாங்கித் தந்து, இந்தத் தொழிலை தொடர்ந்து நடத்த அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சாயப் பட்டறைகளை, அவரவர்கள் வீடுகளிலே குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அரசு அவர்களுக்குப் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, அதற்கும் கால அவகாசம் கொடுத்து, இந்தத் தொழிலைத் தொடர்ந்து நடத்துவதற்கு அவகாசம் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் எந்த ஒரு தொழிற்சாலையையும் காரணமின்றி இந்த அரசு மூடவில்லை. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டியது தொழிற்சாலைகளின் பொறுப்பு. மாநிலத்தில் உள்ள ஜவ்வரிசி, சாயச் சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பது குறித்து பல்வேறு காலகட்டங்களில் அரசு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக வலியுறுத்தி வந்துள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தம் 794 ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 775 ஜவ்வரிசித் தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய இசைவாணையைப் பெற விண்ணப்பித்துள்ளன. சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையின் 30-3-1989 நாளிட்ட அரசாணை எண் 213-ன்படி, குறிப்பிடப்பட்டுள்ள 14 வகையான நீரை அதிக அளவில் மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் அரசாணை இணைப்பு 2இல் குறிப்பிட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திற்குள் அமைக்கப்படுவதைத் தடை செய்கிறது. 775 ஜவ்வரிசித் தொழிற்சாலைகளில் 116 தொழிற்சாலைகள் மட்டும் அந்த அரசு ஆணையின்கீழ் வருகின்றன. வேலூர் மக்கள் நலக்குழு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில், Writ Petition எண் 13433/96 என்ற வழக்கில், உயர்நீதிமன்ற உத்தரவின்படி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மேற்கூறிய அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள, நீர் ஆதாரங்களிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகள் பற்றிய விவரத்தினை, சென்னை உயர்நீதிமன்றம் கேட்டுக்கொண்டதற்கிணங்க 18-9-1998 அன்று சமர்ப்பித்துள்ளது.

முற்பகல் 11-30

23-9-1998 நாளிட்ட ஆணையில் மேற்சொல்லப்பட்ட 116 ஆலைகளில் வாரியத்தின் இசைவாணை கோரி விண்ணப்பிக்காத தொழிற்சாலைகளையும், விண்ணப்பம் செய்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படாத தொழிற்சாலைகளையும் மூடும்படி சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. அந்த ஆணையின்படி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூட ஆணையிட்ட தொழிற்சாலைகள் விவரம் பின்வருமாறு: சேலத்தில் 84,

தருமபுரியில் 6 மற்றும் ஈரோட்டில் 2 ஆகும். இவற்றில் சேலம் மாவட்டத்தில் மூடும்படி ஆணை பிறப்பிக்கப்பட்ட 84 தொழிற்சாலைகளில் 9 தொழிற்சாலைகள் மூடிவிட்டு இடத்தைக் காலி செய்துவிட்டன; 7 தொழிற்சாலைகள் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ளன. இவற்றிற்கு வாரியம் இசைவாணையைக் கொடுத்துள்ளது. மீதமுள்ள 68 தொழிற்சாலைகள் Seal இடப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 794 தொழிற்சாலைகளில் Seal இடப்பட்ட தொழிற்சாலைகள் 76 மட்டுமே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டில் மொத்தம் 4,173 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 2,185 தொழிற்சாலைகள் வாரிய இசைவாணையைப் பெற விண்ணப்பித்துள்ளன. சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையின் 30-3-1989 நாளிட்ட அரசாணை எண் 213-ன் இணைப்பு 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள, நீரை அதிக அளவில் மாசுபடுத்தும் 14 வகையான தொழிற்சாலைகள், அரசாணை இணைப்பு 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள நீர் ஆதாரங்களில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் அமைக்கப்படுவதைத் தடை செய்கிறது. சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள், இணைப்பு 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள அந்த 14 வகை தொழிற்சாலைகளில் அடங்கும். 4,173 சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளில் 1,390 தொழிற்சாலைகள் மேற்குறிப்பிட்ட அரசு ஆணையின்கீழ் வருகின்றன. வேலூர் மக்கள் நலக்குழு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்த Writ Petition வழக்கில், உயர்நீதிமன்ற உத்தரவின்படி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் மேற்கூறிய அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகள் பற்றிய விவரத்தினை, சென்னை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது. உயர்நீதிமன்றம் தனது 23-9-1998 ஆம் நாளிட்ட ஆணையில், மேற்குறிப்பிட்ட 1,390 தொழிற்சாலைகளில், வாரியத்தின் இசைவாணை கோரி விண்ணப்பிக்காத தொழிற்சாலைகளையும், மற்றும் விண்ணப்பம் செய்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்காத தொழிற்சாலைகளையும் மூடும்படி ஆணையிட்டது.

அந்த ஆணையின்படி சேலத்தில் 137, நாமக்கல்லில் 525, ஈரோட்டில் 118, கோவையில் 6, தஞ்சையில் 3, மதுரையில் 2, இராமநாதபுரத்தில் 29 மற்றும் தேனியில் 1. ஆக மொத்தம் 821 ஆலைகள் மூடப்படவேண்டும். ஆனால் இவற்றில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ள தொழிற்சாலைகள் 18-ம், மூடிவிட்டு





இடத்தைக் காலி செய்துவிட்ட தொழிற்சாலைகள் 395-ம், உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெற்ற தொழிற்சாலைகள் 38-ம் நீங்கலாக, 370 தொழிற்சாலைகளை மட்டும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் seal வைத்துள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 4,173 சாயத் தொழிற்சாலைகளில் seal வைக்கப்பட்டவை வெறும் 370 மட்டுமே. உயர்நீதிமன்ற ஆணைக்கொப்ப இத்தொழிற்சாலைகளை மூடாவிட்டால் உயர்நீதிமன்றத்தின் கண்டனத்தைத் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். இத்தொழிற் சாலைகள் தனியாகவோ அல்லது பிற தொழிற்சாலைகளுடன் இணைந்தோ பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க மாநில அரசு மொத்த திட்டச் செலவினத்தில் 25 சதவீதத்தை மானியமாக வழங்கும். அதே அளவு மானியம் மத்திய அரசிடமும் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினையின்மீது அமைச்சர் அவர்கள் பதிலுரை கூறும்போது, தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்கான காரணங்களை விளக்கமாகக் கூறினார்கள். அதை ஏற்றுக் கொள்கிறோம். அரசுக்கு வேறு வழியில்லை. இருந்தபோதிலும்கூட, மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு என்ன வழி இருக்கிறது என்று அதில் ஒரு வரிகூட சொல்லவில்லையே என்பது வருத்தமாக இருக்கிறது.

இத்தகைய தொழிற்சாலைகள் தனித் தனியாக, சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. அரசு புதிய தொழில்களை ஊக்குவிப்பதுபோக, இருக்கக்கூடிய தொழில்கள் நலிவடையாமல் இருப்பதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்திட வேண்டும். அப்படிச் செய்தால்தான், தமிழகத்திலே தொழில்களை ஆரம்பித்தால் எந்த நேரத்திலும் நம்மை நலிவு அடையச் செய்துவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை தொழிலில் முதலீடு செய்பவர்களுக்கு ஏற்படும். ஆகவே அந்த முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து இதை எப்படிச் செய்யலாம் என்றால், பொதுச் சுத்திகரிப்பு நிலையத்தை அமையுங்கள். அதை நீங்கள் இனாமாகச்

செய்ய வேண்டாம். அதனால் எந்தெந்தத் தொழிற்சாலைகள் பயன்பெறுகின்றனவோ அந்தந்தத் தொழிற்சாலைகளிடமிருந்து turnover அடிப்படையில் அந்தச் செலவீட்டுத் தொகையை வட்டியோடு சேர்த்து ஐந்தாண்டு காலத்தில் அல்லது பத்தாண்டு காலத்தில் திரும்பப் பெறுவதற்கான திட்டத்தைக் கண்டிப்பாக அமல் செய்தால்தான் இந்தத் தொழிற்சாலைகள் பாதுகாக்கப்படும். அதனால் விவசாயிகள் நலனும் பாதுகாக்கப்படும். எனவே அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு கண்டிப்பாகச் செய்யவேண்டுமென்று வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொழிற்சாலைகள் அருகருகே இருந்தால்தான் நீங்கள் சொல்கிறபடி நடக்கும். ஒரு தொழிற்சாலைக்கும், இன்னொரு தொழிற்சாலைக்கும் 10 மைல் தூரம் இருந்தால் எப்படி Common Effluent Treatment Plant அமைக்க முடியும்?

**திரு. ஆர். சொக்கர்:** பல நூறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரும்போது, சில கிலோ மீட்டர் தூரம் கழிவுநீரைக் கொண்டுபோய் சுத்திகரிப்பது என்பது நடைமுறையில் சாத்தியமானதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றா, இரண்டா, 500. சரி, மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் சரியான முறையில் விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். ஆனால் மாவட்ட சுற்றுப்புறச் சூழல் பொறியாளர் அவர்கள் சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சேலம் Sago பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைச் சேர்ந்த உரிமையாளர்களை ஆறு தடவைகள் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அதேபோல ஆத்தூர் வட்ட starch மற்றும் ஜவ்வரிசித் தொழிற்சாலை பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைச் சேர்ந்த 121 பேர்களை 9 தடவை அழைத்து, கூட்டங்கள் போட்டு அறிவுரைகளை வழங்கியிருக்கிறார்கள். அதேபோல நாமக்கல்லில் 30 நபர்களை 9 கூட்டங்கள் போட்டு சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். சேலம் வட்டம் starch மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர் சங்கத்தின் 76 உறுப்பினர்களை 2 கூட்டங்களில் கூட்டி, அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அதேபோல



இராசிபுரம் வட்டம் starch மற்றும் sago பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தைச் சேர்ந்த 105 பேர்களையும், நாமக்கல்லைச் சேர்ந்த 40 பேர்களையும் அழைத்து 12 கூட்டங்கள் கூட்டி அவர்களுக்கும் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே அனைவரும் பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தால் மத்திய அரசின் 25 சதவீத மானியமும், மாநில அரசின் 25 சதவீத மானியமும் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது சுத்திகரிப்பு நிலையத்திற்கு வழங்குவதுபோல் தனியார் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மத்திய அரசின் 25 சதவீத மானியமும், மாநில அரசின் 25 சதவீத மானியமும் வழங்கிட நம்முடைய அரசு, மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்றுக்கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. டி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி வரிசையாக நின்று கொண்டிருந்தால் எப்படி? இதை நான் அனுமதிக்க முடியாது.

**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker Sir, I am on a point of order.

**HON. SPEAKER:** No. No more point of order.

**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker Sir, point of order.

**HON. SPEAKER:** No, I don't accept. I rule out the point of order. You please sit down. (Interruption) No. No. (Interruption).

**திரு. டி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய பிரச்சினை பற்றி...

[1999 பிப்ரவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பெயரே கொடுக்கவில்லை. நீங்கள் பெயரே கொடுக்காமல் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்களா? பிறகு எப்படிப் பேசுகிறீர்கள்? அமைச்சர் பதில் சொல்லி முடித்த பிறகு தீர்மானம் கொடுத்தவர்களோ, கொடுக்காதவர்களோ, எழுந்து நின்று பேசக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் தீர்மானம் கொடுக்காமலேயே எழுந்து நின்று பேசிக்கொண்டிருக்கிறீர்கள். கொஞ்சம் இருங்கள், பிறகு உங்களைக் கூப்பிடுகிறேன். நீங்கள் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், உங்களுடைய point of order என்ன?

*முற்பகல் 11-40*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இந்த சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்ததே பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த ஆலைகளைத் திறப்பதற்கு அரசு என்ன வழி காணப்போகிறது என்பதை அறிவதற்காகத்தான். ஆனால் அமைச்சர் கொடுத்த விளக்கத்தில் இதைத் திறப்பதற்கான சாத்தியக்கூறு இப்போதைக்கு இல்லை என்று அமைகிற காரணத்தினாலே—56-வது விதியின்கீழ் கொடுத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டுமென்பதற்காகத்தான் ஒரு விளக்கத்தையும் சேர்த்து அளிப்பதற்காக—மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அனுமதியை நான் கேட்டேன். பேரவைத் தலைவர் அவர்கள் மிக அழகான ஒரு கருத்தைச் சொன்னீர்கள். ஒட்டுமொத்தமாக, ஒரு Common Effluent Treatment Plant-ஐ எப்படி அங்கே கட்ட முடியும் என்று சொன்னீர்கள். குமாரபாளையம், பள்ளிப்பாளையம் போன்ற பகுதிகளில் Common Effluent Treatment Plant-ஐ தனியாரே கட்டத் தேவையில்லை. River Action Plan என்ற திட்டத்தில் ஏற்கெனவே Water Board இப்போது ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே இப்போது இந்த சாயப் பட்டறையினுடைய கழிவுநீரும் வீட்டிலிருந்து வரக்கூடிய கழிவு நீரும் சேர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இரண்டுமே ஒன்றாகக் கலந்து விடுகிறது, முதலிலே. ஆகவே சாயப் பட்டறைக்கு தனியாக, Common Effluent Treatment Plant போட வேண்டுமென்று இப்போது வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது தேவையில்லை. ஏற்கெனவே மத்திய அரசு கொடுத்திருக்கக்கூடிய பணத்திலே, அந்த River Action Plan-லே அதை இணைத்துக்கொள்ளலாம் என்கிற என்னுடைய ஆலோசனையை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒன்று.



1999 பிப்ரவரி 24] [திரு. சி. ஞானசேகரன்]

இரண்டாவது Sago Factory-யைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கின்றபோது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே கூட்டங்கள் போட்டோம், பல கூட்டங்களில் பேசினோம் என்று சொன்னார்கள். கூட்டம் போட்டதைப் பற்றி யாரும் மறுப்பே தெரிவிக்கவில்லை. உண்மையில், அரசினுடைய நிலை, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பதுமாதிரி ரொம்பக் கடுமையாகத்தான் இருக்கிறது. காரணம், ஒரு பக்கம் நிலத்தடி நீர் பாதிக்கப்படுகிறது; பொது மக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும், இன்னொரு பக்கம் பார்த்தால், தொழிற்சாலையை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், அங்கே பணிபுரிகின்ற தொழிலாளர்கள் ஆகியோர் பாதிக்கப்படுகிறார்கள். இந்த இரண்டிற்கும் எப்படியாவது தீர்வு காண வேண்டிய அரசாங்கம் எல்லோருக்கும் பொதுவாக இருக்கிற காரணத்தால் ஒரு பாதிப்பு இருக்கிறது. நீதிமன்றமும் நம்முடைய கழுத்தை வேறு நெரித்துக் கொண்டிருக்கிறது. இப்போது நீதிமன்றத்தையும் நாம் திருப்திபடுத்தியாக வேண்டும். நீதிமன்ற ஆணைக்கு நாம் கட்டுப்பட்டு ஒத்துக்கொண்டாக வேண்டும். அதேநேரத்தில் பாதிக்கப்பட்டு இருக்கக்கூடிய மக்களுக்குத் தீர்வு காண வேண்டிய ஒரு மாபெரும் பொறுப்பு இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்கிற காரணத்தால் நாங்கள் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம்—தாங்களே ஒரு சிறந்த வழக்கறிஞர்—எப்படியாவது வழக்கறிஞர்களை அணுகி appeal-ஆவது போட்டு, Time வாங்கிக்கொடுத்து, சுத்திகரிப்பு நிலையங்களைக் கட்டுகிற வரை, 6 மாதகாலம் ஆகலாம, இல்லையென்றால் அரசே கேட்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம், பல தடவை வாய்தா கொடுத்துத்தான் நீதிமன்றம் இப்போது உத்தரவு போட்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** வாய்தா கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றமே பல மாதங்கள் அவகாசம் கொடுத்திருக்கிறது. இப்போது நான் ஒன்று சொல்கிறேன். நான், கட்சிக்கு ஒருவர் பேச வேண்டும் என்று சொல்லியும்கூட, உங்கள் கட்சியின் சார்பாக 3 பேர் தீர்மானம் கொடுத்து, 4 பேர் பேசிவிட்டார்கள். இந்த முறையை நான் இனிமேல் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் பேச வேண்டியதை உங்கள் கட்சி உறுப்பினரிடம்

சொல்லி அந்தக் கருத்தை சொல்லச் சொல்லுங்கள். அவர்களெல்லாம் பேசி அதற்குப் பிறகு, நீங்கள் point of order என்று சொல்லிப் பேசினால் எப்படி? இனிமேல் இப்படி அனுமதிக்க மாட்டேன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நீண்டகால தொடர் பிரச்சினை, உடனடியாகத் தீர்வு காண முடியாது. இருந்தாலும்கூட, மாசுக்கட்டுப்பாடு வாரிய வழக்கறிஞர்கள் பலமுறை நீதிமன்றத்திற்குச் சென்று வாதாடியிருக்கிறார்கள். மேலும் 1989-லே போட்ட ஆணை இப்போதுதான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல 1996-லே போட்ட, வேலூர் மக்கள் நலக்குழு உயர்நீதிமன்றத்திலே கொடுத்த Writ Petition-னுடைய ஆணையைக்கூட சமீபத்திலேதான் வாரியத்தின் மூலமாக கொஞ்சம் காலதாமதமாக நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் பொது சுத்திகரிப்பு நிலையங்களையும், தனியார் சுத்திகரிப்பு நிலையங்களையும் அமைப்பதற்குப் போதுமான கால அவகாசத்தை வழங்கியிருக்கிறது. இருந்தாலும்கூட, மொத்த ஆலைகளோடு கணக்கிட்டால் இப்போது மூடப்பட்டுள்ள ஆலைகள் 5, 6 சதவிகிதம்தான் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எத்தனை தடவை நீங்கள் எழுந்து நிற்பது? இது என்ன விவாதமா? உட்காருங்கள். நான் ஏற்கெனவே நீங்கள் பேச இரண்டு தடவை அனுமதி கொடுத்துவிட்டேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொழிலாளர்களுடைய வயிற்றுப் பிரச்சினை. தனியார் அமைப்புகள் நடத்துகின்ற சாயப் பட்டறைகளுக்கு மானியம் கிடையாது என்று சொன்னதினால் ஏழையெளிய மக்கள், சிறுதொழில் செய்யக்கூடிய அத்தனை தொழிலாளர்களும் இதில் பாதிப்பு அடைவதினால், எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில், இந்தக் கொள்கையை எதிர்த்து வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. ஐ. கணேசன் வெளிநடப்புச் செய்தார்)

**THIRU B. VENKATASAMY:** One clarification Sir, . .

**HON. SPEAKER:** Please sit down.



## 4. அமைச்சரின் விளக்கம்

### தேசிய நெடுஞ்சாலைகள் குறித்த துணை வினாவிற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ஒரு குறிப்பிட்ட சாலையைப் பற்றிச் சொல்லி, அது தேசிய நெடுஞ்சாலையிலே இணைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். இப்போது எனக்கு வந்திருக்கிற தகவலை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் அதேபோல இந்த அவைக்கும் தெரிவிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அந்த 1,200 கிலோ மீட்டரும் மத்திய சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, Notification-அறிவிக்கை-வெளிவருகிற வரையிலே நாம் காத்திருக்க வேண்டிய அவசியம் இருந்தது, இப்போது அவர்களது அறிவிக்கையையும், அதாவது Notification-ஐயும் வெளியிட்டு விட்டார்கள். அந்த மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே, திருச்சி, விராலிமலை, துவரங்குறிச்சி, மேலூர், மதுரை, அருப்புக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய 280 கிலோ மீட்டர் இணைக்கப்பட்டிருக்கிறது. பாண்டிச்சேரி-கடலூர்-நாகப்பட்டினம், 130 கி.மீ. இணைக்கப்பட்டு இருக்கிறது. கரூர்-கோயம்புத்தூர் 140 கி.மீ. இணைக்கப்பட்டு இருக்கிறது. சென்னை-திருத்தணி-ரேணிகுண்டா 82 கி.மீ. இணைக்கப்பட்டு இருக்கிறது. ஓசூர்-மாலூர் 20 கி.மீ. இணைக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல திருமங்கலம்-கல்லுப்பட்டி-பேரையூர்-ஸ்ரீவில்லிப்புத்தூர்-இராஜபாளையம்-தென்காசி-செங்கோட்டை, 125 கி.மீ. இணைக்கப்பட்டு இருக்கிறது. திண்டுக்கல்-பொள்ளாச்சி—கோயம்புத்தூர்-அன்னூர், 286 கி.மீ. இணைக்கப்பட்டு இருக்கிறது. அதைப்போல திருச்சி-புதுக்கோட்டை-காரைக்குடி—தேவகோட்டை—இராமநாதபுரம், 160 கி.மீ. இணைக்கப்பட்டு இருக்கிறது என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

## 5. தகவல் கோரல்

### (அ) அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

[1999 பிப்ரவரி 24

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் பகுதியிலே ஜேடிஎஸ். நிறுவனம் 7-1-1999-ல் சட்ட விரோதமாக கதவடைப்புச் செய்ததன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டு உள்ளார்கள். Labour Department பேச்சுவார்த்தைக்கு அழைத்தும், பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்குத் தயாராக இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகி உள்ளது. ஆகவே அந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய பிரச்சினை என்பது அவர்களுடைய பொருளாதாரப் பிரச்சினையாகவுள்ளது. அவர்கள் பட்டினி இருக்கின்ற நிலையைப் போக்குவதற்கு அவசரமாக இந்தப் பிரச்சினையிலே அரசு தலையிட்டு அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நாளைக்கு 2 தீர்மானங்கள்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் விதிப்படி. இன்று கடைசி நாள் என்பதால் 4, 5 எடுத்துவிட்டேன். நீங்கள், எடுக்காத தீர்மானத்தைப் பற்றி எழுந்து பேசினால் என்ன அர்த்தம். உங்களுக்கு அது அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம். நான் விதிகளைப் பின்பற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. அடுத்து, . .. (குறுக்கீடு)

### (ஆ) திருவாரூர் தேரோட்டம்

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கும் அதே பதில்தான்.

**திரு. சி. வேலாயுதன்:** ஒரு தடவை மட்டும் அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரில் ஓடாமல் இருந்த தேரை ஓட வைத்த பெருமை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாரும். வருகிற மார்ச் 28 ஆம் தேதி அந்தத் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெற வேண்டும். பூர்வாங்கப் பணிகள் இதற்கு முன்னாலேயே ஆரம்பித்து நடந்து கொண்டிருக்க வேண்டும் ஆனால், இந்தத் தடவை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று அங்குள்ள மக்கள் வேதனைப்படுகின்றார்கள் என்பதை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1999 பிப்ரவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணிக்கு சொன்ன பதில்தான் உங்களுக்கும். (குறுக்கீடு) மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் இங்கே அவையில் வந்துதான் இதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இன்னும் நிறைய நாள் இருக்கிறது. உரிய நேரத்தில், உரிய காலத்தில் தேர் ஓடும்.

### (இ) சென்னை நேரு ஸ்டேடியத்தை உபயோகித்ததற்கு வாடகை வசூல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரு Stadium ஆசியாவிலேயே பெரிய Stadium. அதை Godown-ஆகப் பயன்படுத்தி இருக்கிறார்கள். அந்த நபரிடம் ஒரு நாளைக்கு 1 இலட்சம் ரூபாய் என்று சொல்லி, 25 நாட்கள் பயன்படுத்தி இருக்கிறார்கள். அது வசூல் செய்யப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) நேரு விளையாட்டு அரங்கத்தை சில பேர் Godown-ஆக பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். செங்கல், மண், சிமெண்ட் இந்தமாதிரிப் பொருட்களை வைத்து பயன்படுத்தி இருக்கிறார்கள். இதனால் அது ரொம்பப் பாழாகிப் போய்க் கொண்டிருக்கிறது. அதனாலே ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் ரூபாய் வசூல் பண்ண வேண்டும்; அவர்கள் 25 நாட்களாக வைத்திருக்கிறார்கள்; அதற்குப் பணம் வசூல் செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (இ) ELNET நிறுவனத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு, சிப்காட் வளாகத்தில் உள்ள ELNET நிறுவனத்தின் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாதது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பி. வெங்கடசாமி.

முற்பகல் 11-50

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, I propose to call the attention of the Hon. Minister for Labour on a matter of public importance, namely, ELCOT and its Labourers. ELCOT was established in the year 1982 and started producing Aluminium Electronic Capacitors. At that time 200 people were employed through Employment Exchange. 50% of them were ladies. It has been privatised in the year 1988 by the ELCOT and New Era Technology Limited has taken over the same. 26% of investment has been made by ELCOT and 25% of investment has been made by private promoters. After privatisation, it has become ELNET. The Chairman of ELNET was nominated by the ELCOT and the Managing Director was nominated by the private promoters. Now, the Chairman of ELCOT Mr. Madhavan Nambiar, I.A.S. has given a complaint stating that 12 crores of rupees has been misappropriated by Mr. Thiagarajan Chettiyar and he has been arrested. Now the matter is in the Court and CBCID is investigating.

Due to the financial crisis, the present Management has declared 'lay off' from 1998 and the workers have not been given salary for the past six months. All the 200 workers are suffering very much and they are starving.

I request the Hon. Chief Minister and the Hon. Minister for Labour to see that this Company is revived. There is a good demand for the capacitors throughout the nation. The Company has been closed only because of the mismanagement. At present, the Company needs financial assistance to revamp the situation. Hence, I request the Hon. Chief Minister and the Hon. Minister for Labour to see that adequate financial assistance, i.e. nearly two crores of rupees is granted by the Government of Tamil Nadu to this Company, so that all the workers will be very happy. Also, I wish to suggest that the ELNET Limited be taken over by the ELCOT . . .

**HON. SPEAKER:** I am not permitting you to make a lecture. You please sit down. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப்





பிரச்சினையில் உள்ள விவரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 1982-ல் ELCOT நிறுவனம் தொடங்கப்பட்டது. 1988-லே Joint Venture-க்கு மாற்றப்பட்டது. இந்த அமைப்பைப் பொறுத்தமட்டிலே, ஓசூரிலும், தாம்பரத்திலும் இரண்டு Unit-கள் இருக்கின்றன. ஓசூரில் 162 தொழிலாளர்களும், தாம்பரத்தில் 40 தொழிலாளர்களும் இருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, இந்த அமைப்பின் M.D. தியாகராஜ செட்டியார் மோசடி செய்ததன் காரணமாக ஏறத்தாழ 9 கோடியே 45 இலட்ச ரூபாய் நிதி நெருக்கடி ஏற்பட்டு, வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்தியன் வங்கிக்கும், பரோடா வங்கிக்கும் 30 கோடி ரூபாய் கடன் தர வேண்டி இருக்கிறது. இது திருப்பித் தர வேண்டிய நிலையில் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு 6 மாதச் சம்பளம் பாக்கியிருக்கிறது. அதைப்போலவே Provident Fund, E.S.I., Gratuity, L.I.C. இவையெல்லாம் சேர்ந்து 61 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அளவிற்கு settlement பண்ண வேண்டியிருக்கிறது. இது statutory dues. ஒரு மாத சம்பளத்திற்கு மட்டும் 8 இலட்ச ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. இது ஒரு sick unit-ஆக இருக்கிற காரணத்தால் B.I.F.R.-க்கு refer பண்ணப்பட்டிருக்கிறது. இப்காட் என்ற ஓர் அமைப்பு இதை ஆய்வு செய்து 2,522 இலட்ச ரூபாய் வங்கிச் சலுகை கொடுத்தால்தான், 4 கோடி ரூபாயை அரசாங்கமும், ELCOT-ம் கொடுத்தால்தான், இந்தக் கடன்களை எல்லாம் அடைக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். பல முறை பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்கிறது. தொழிலாளர்களுடைய பாக்கிகளைப் பொருத்தமட்டில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சரைப் பார்க்க விரும்புகிறவர்கள், அறைக்குப் போய் பார்க்க வேண்டுமே தவிர, நான் அவையை நடத்திக்கொண்டிருக்கும்போது பேரவைத் தலைவருக்கும் முதலமைச்சருக்கும் நடுவில் தற்போது 10 பேர் வந்து போய்விட்டார்கள். இனிமேல் இதை அனுமதிக்க முடியாது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் பிரச்சினையின் காரணமாக இந்தச் சிக்கல் ஏற்படவில்லை. நிதி நெருக்கடி காரணமாக சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அரசு நிதி உதவி செய்ய வேண்டுமென்ற

[திரு. அ. இரகுமான்கான்] [1999 பிப்ரவரி 24

கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசு நிதி உதவி செய்கிற நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டிலே, statutory dues என்று சொல்லக்கூடிய, தொழிலாளர்களுடைய சட்டபூர்வமான பாக்கியை பெற்றுத் தர இந்தத் துறை எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. R.R. Act 33(சி) (I)-ன்படி நடவடிக்கை எடுக்கிறோம். E.S.I., Provident Fund, மற்றவைற்றைப் பெற்றுத் தர அந்தக் Company அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே மீண்டும் பரிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்களுடைய பிரச்சினையை இந்த அரசு உணர்ந்து இருக்கிறது. ஆனாலும் நிதி நெருக்கடி காரணமாகத்தான் இதுகுறித்து கொஞ்சம் தயக்கம் காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-55

## 6. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. ப. ரங்கநாதன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக குழுவின் 154 முதல் 158 வரையிலான 5 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன் வடிவுகள் (ஆய்வு செய்தல்). 1999 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 1/1999), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1999 பிப்ரவரி 24]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 1/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதன் மீது யாரேனும் கருத்து கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 19-2-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 1/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 2/1999), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 2/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

---

@ 22-2-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. கோ.சி. மணி] [1999 பிப்ரவரி 24

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 2/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 3/1999), மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 3/1999)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

@ 22-2-1999ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1999 பிப்ரவரி 24]

நண்பகல் 12-00

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சந்தைக் குழு அமைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதற்காகத் தனி அலுவலர்களின் பதவிக்காலம் நீட்டிக்கப்படுவதாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேளாண் விளைபொருட்களுக்கு விலை நிர்ணயிக்கின்ற குழுவை அமைப்பதில் காலதாமதம் ஆவதால் மேலும் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை ஓராண்டு காலம் நீட்டிப்பது என்பது சரியல்ல. சந்தைக் குழு இருந்தால்தான் முறையாகச் செயல்பட முடியும். அந்தக் குழுவே இல்லாமல் தனி அதிகாரிகளைக் கொண்டு செயல்படுத்துவது சரியில்லை. குழுவை அமைப்பதில் காலதாமதப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. இருந்தபோதிலும் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை 6 மாதங்கள் என்பதற்கு மாறாக, ஓராண்டு காலம் நீட்டிப்பதற்கான அவசியம் என்ன என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனி அலுவலர்களின் பதவிக் காலம் ஓராண்டு காலம் நீட்டிக்கப்படுவதைப் பொறுத்தவரையில், ஓராண்டுக்குப் பின்னாலேதான் அந்தக் குழுக்கள் அமைக்கப்படும் என்று பொருள் அல்ல. ஒரு மாதத்திலே முடியலாம். 2 அல்லது 3 மாதங்களிலே குழு அமைந்துவிடலாம். அப்படி குழு அமைக்கப்பட்டுவிட்டால் தனி அலுவலர்களின் பதவிக் காலம் ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும். ஓராண்டு நீட்டிப்பு என்று இருந்தாலும், விரைவிலேயே இதற்கான குழுவை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தனி அலுவலர்கள் நியமனத்தை ஓராண்டுக்கு நீட்டிப்பது அவ்வளவு பொருத்தமான ஒன்றல்ல. ஒரு மாதத்தில்கூட முடிக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒரு மாதம், இரண்டு மாதங்கள், 3 மாதங்கள் என்று குறுகிய காலத்திற்கு நீங்கள் எல்லையை வகுத்துக்கொள்ள வேண்டும். ஓராண்டு என்பது அதிகமான காலதாமதம் ஆகும். இதை

தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நிச்சயமாக நான் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்று அதிகமான காலத்தை நீங்கள் கொடுக்கக்கூடாது. 3 மாதம் என்று வைத்து, உடனடியாகத் தேர்தலை வைப்பதுதான் முறை. அந்த முறையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக இந்தத் தனி அலுவலர்கள் பிரச்சினை இருந்து வருகிறது. 1977-78-ல் அப்போது எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது, தேர்தல் தேவையில்லை, அரசே தனி அலுவலர்களை நியமிக்கலாம். தேர்தல் நடைபெற்றால் அதிக செலவாகும் என்று கருதி, இந்த முறையைக் கொண்டுவந்தார்கள். பின்னர் பல்வேறு அரசியல் காரணங்களால் அந்தக் குழுக்கள் அரசால் நியமிக்கப்படவில்லை. 1989-ல் 3-வது முறையாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு இதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவந்து குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நேரத்திலே மீண்டும் கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. இடைக்காலத்திலே இதற்கான குழு அமைக்கப்படாமல் இருந்தது. இந்த நிலையிலே, இப்போது 4-வது முறையாக கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு இந்தக் குழுக்களை அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அது அரசினுடைய பரிசீலனையிலே தற்போது இருந்துகொண்டிருக்கிறது. குழு நியமிக்கப்படாத காரணத்தினாலேதான் ஆளுநர் அவர்களால் இதற்கான ஒரு ordinance பிறப்பிக்கப்பட்டு 27-1-1999 அன்று வெளியிடப்பட்டது. அதனையொட்டித்தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தனி அலுவலர்களின் பதவிக் காலம் ஓராண்டுக்கு நீட்டிக்கப்படுகிறது என்று இருந்தாலும், முன்பு நான் சொன்னதுபோல, இந்த ஓராண்டுக்குள் விரைவாக அரசு நடவடிக்கை எடுத்து நிச்சயமாக அந்தக் குழுவை நியமித்து அறிவிக்கப்படும். ஓராண்டுவரை நிச்சயமாக தனி அலுவலர்களின் பதவிக் காலம் இருக்காது; விரைவிலேயே குழுவை நியமிக்க இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து, இச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.





**திரு. ஜி. பழனிசாமி:** ஒரு நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டத்தை அரசு கொண்டுவந்திருக்கிறது. இது வரவேற்க வேண்டிய ஒன்றாகும். சட்டமன்றம் கூடாத காலத்தில் ஆளுநர் அவர்களால் ஏற்கெனவே ஓராண்டு பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் ஓராண்டு காலம் நீட்டிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அந்தக் குழு அமைந்தால்தான் வேளாண் விளைபொருட்களின் விலையைச் சீரமைக்க முடியும். அவ்வாறு இல்லாமல் தனி அலுவலர்கள் இருந்தால், உணவு தானியப் பொருட்களுக்கு விலை நிர்ணயிப்பதிலும் சரி, சந்தைப் பொருட்களுக்கு விலை நிர்ணயிப்பதிலும் சரி, அதை சரியாகச் செய்ய முடியாமல், நிச்சயமாக தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பது என்பது ஒரு தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று நான் கருதுகிறேன். இது முற்றிலும் சரியல்ல என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில், இதற்கான குழுவை, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்க வேண்டும் என்பதிலே நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இதிலே திருவள்ளூர், நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர், கரூர், நாமக்கல், தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, திண்டுக்கல், தேனி, நீலகிரி ஆகிய 12 மாவட்டங்களுக்குப் புதிதாக விற்பனைக் குழுக்கள் அமைப்பதற்கான நடவடிக்கையை நாம் ஏற்கெனவே எடுத்து, அதற்கான அரசாணைகளெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இருக்கின்ற 16 விற்பனைக் குழுக்களுடன், இப்போது புதிதாகத் தோற்றுவிக்கப்பட இருக்கிற 12 விற்பனைக் குழுக்களும் விரைவிலேயே அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். தனி அலுவலர்களுடைய பதவிக்காலத்தை நீட்டித்து, அவர்கள் பொறுப்பிலே இருப்பது, அவ்வளவு சிறப்பாக இருக்காது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையும் அந்த அடிப்படையிலேதான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே தனி அலுவலர்களுடைய பதவிக்காலம் குறித்து ஆளுநர் அவர்களால் ஒரு ordinance பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பதவிக்காலத்தை நீட்டித்துத் தந்திருக்கிறார்கள், இந்த இடைப்பட்ட காலத்திலே பொதுமக்கள் பிரதிநிதிகள் கொண்ட குழு அமைக்கின்ற வரை. ஆகவே ஓராண்டு

என்று நீட்டிக்கப்பட்டிருப்பது என்பது, ஓராண்டு வரை நிச்சயமாக இருக்காது. இந்த அவையிலே உங்களுக்கு உறுதி தரப்படுகிறது. விரைவிலே இந்தக் குழு அமைக்கப்படும். பொதுமக்கள் பிரதிநிதிகள் பொறுப்பேற்பார்கள். ஆகவே இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் (குறுக்கீடு) நீங்கள் ஏற்கெனவே பேசிவிட்டீர்களே, ஒருவர் மாற்றி ஒருவர் கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) சரி, ஞானசேகரன் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஓர் உறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். வரவேற்கிறேன். இருந்தாலும், இதே அவையிலே Land Improvement Board என்று ஒரு குழுவைப் போட்டார்கள். அதிலே நான் ஓர் உறுப்பினர். அதைப்போல மாண்புமிகு உறுப்பினர்கள் அன்பில் பொய்யாமொழி அவர்களும், அருண்குமார் அவர்களும் உறுப்பினர்கள். ஆனால், ஓராண்டு காலம் முடிந்துவிட்டது. நாங்கள் எத்தனையோ முறை கேட்டுப்பார்த்துவிட்டோம். அந்தக் குழுவிற்கு என்ன வேலை என்றே தெரியாமல் அந்தக் குழு அப்படியே போய்விட்டது. ஆனால் இங்கே இந்த அரசு ஆட்சிக்கு வந்து இரண்டாண்டுகளுக்கு மேலாகிவிட்டது; மூன்றாண்டுகளை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அப்படி நெருங்கிக் கொண்டிருக்கின்றபோது, தனி அலுவலர்களையே நாம் வைத்துக்கொண்டு, இதுபோன்று நாம் பணிகளை நடத்துவோம் என்று சொன்னால், அது ஊழலுக்கு வழிவகுத்துவிடும். அவர்கள் தனி இராஜ்ஜியத்தை நடத்திக் கொண்டிருப்பார்கள். இதிலே குழுவை அமைப்பதிலே என்ன அப்படியொரு சங்கடம்? நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் Land Improvement Board என்று இந்த அவையிலே அறிவித்து, அது செயல்படாமல் போன மாதிரி இருந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் மீண்டும், மீண்டும் வற்புறுத்துகிறோம். இந்த ஓராண்டு காலம் பதவி நீட்டிப்பு என்று சட்டத்தை நிறைவேற்றிவிட்டாலும்கூட, இப்பொழுதே இந்த அவையில், இரண்டு மாத காலத்திற்குள் நிச்சயமாக குழுவைப் போட்டுவிடுவோம் என்கிற உறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** குறிப்பிட்டு தேதியோ அல்லது மாதங்களையோ சொல்ல முடியாது. விரைவில் அரசு நியமிக்கும் என்றுதான் சொல்ல முடியும். ஏனென்றால், அரசு இந்தக் குழுவை நியமிப்பதற்கு வியாபாரிகளிடமிருந்து பிரதிநிதிகள் வரவேண்டும். சிறு விவசாயிகள், மிகச்சிறு விவசாயிகள், அதைப்போல பல்வேறு தரப்பிலேயிருந்து உறுப்பினர்கள் வந்து, விற்பனைக் குழுக்களிடத்திலிருந்து அறிக்கை பெற்று, அதைக்கொண்டுதான் நாம் குழுவை நியமிக்க இயலும். ஆகவே விரைவிலேயே அரசாங்கம் நியமிக்கும் என்ற உறுதியைத் தருகின்றபோது, இரண்டு மாதத்திற்குள் என்று உறுதி தர முடியுமா என்று கேட்பது அவ்வளவு சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1999 பிப்ரவரி 24

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 4/1999), மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



1999 பிப்ரவரி 24]

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 4/1999) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதன் மீது கருத்து கூற விரும்பும் உறுப்பினர்கள் கருத்து கூறலாம்.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@22-2-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [1999 பிப்ரவரி 24

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 4/1999) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 8. அரசினர் தீர்மானம்

### பேரவை ஒத்திவைக்கப்பெற்று பின்னர் ஒரு நாள் கூடுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையை ஒத்திவைப்பது குறித்த அரசினர் தீர்மானம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



1999 பிப்ரவரி 24]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை இன்று 24-2-1999 ஒத்தி வைக்கப்பெற்று மீண்டும் மார்ச் திங்கள் 17 ஆம் தேதி காலை 9-30 மணிக்குக் கூடும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 1999 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் தேதி காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

67. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

68. 1996-97 ஆம் ஆண்டிற்கான பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் முதல் ஆண்டு அறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

8. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து நான்காவது அறிக்கை, 1998-99.

9. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தைந்தாவது அறிக்கை, 1998-99.

10. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தாறாவது அறிக்கை, 1998-99.

11. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தேழாவது அறிக்கை, 1998-99.

12. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தெட்டாவது அறிக்கை, 1998-99.

13. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது மற்றும் மூன்றாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 100 வரை)

14. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை)

V24,31 0495
N99.643
221069.

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.